**RAJA & CO SOLICITORS**

We provide following Legal Services:

Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business

- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road,
Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road,
Colliers Wood.
SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family



BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 08 ♦ ISSUE - 150 ♦ 29 FRIDAY JULY 2011



**LONDON ACCIDENT CLAIMS LIMITED**

70 Windmill Road, Croydon, CR0 2XP

வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?

Driver / Passenger – within last 3 years

3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட

- தவிர்க்க அனைத்த நஷ்ட ஈடு (Neck, Back & Shoulder Pain)
- வாகனம் பிறப்பீடு = வாடகை வாகனம். (Terms & Conditions Apply)
- புனர் நிர்மாணம் அல்லது வாகன இழப்புக்களுக்கான பூரண நஷ்ட ஈட்டுத்தொகை முதலில்

NO WIN NO FEE

Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்

Call Free: 0800 032 6798 | Tel: 020 8665 7667

Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM





Photo: Lal Labakudas


**Properties to Let !**

1, 2, 3, 4, 5 படுக்கையறைகள் கொண்ட வசதியான வீடுகள் வாடகைக்கு உள்ளன.

- Norbury
- Croydon
- Brixton
- Streatham
- Thornton Heath
- Balham
- Tooting
- Clapham
- Mitcham

UNIVERSAL ESTATES

தமிழில் உரையாட அழையுங்கள்

Call : 0208 764 6444

www.universal-estates.co.uk

1526, London Road, Norbury, SW16 4EU

**SHOP FOR LEASE**

Sale per Week £6,000 to £7,000

Place - Newcastle upon tyne

Asking Price - £40,000

3 பாடசாலைகள் மற்றும் University Campusக்கு அருகாமையில்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

Suresh - 07536726009

Mukunthan - 07931659585

**Affordable IT Support services for Businesses and medium size Companies**

உங்கள் கொம்பியூட்டர் பிரச்சனைகளை நாங்கள் கவனித்துக் கொள்ள... கவலைகளை மறந்து உங்கள் வியாபாரத்தில் வெற்றியடையுங்கள்.

FREE Consultation

Hassle free option

Call us on

020 7043 4318

Do what you're best at = Business

We are best at = IT support

IT SUPPORT

let us look after it.

**OFF-LICENSE SHOP FOR SALE**

Epsom, Ewell, Surrey இல் A24 க்கு அருகாமையில் கடை விற்பனைக்குண்டு.

- Weekly Turnover - 6500 to 7000
- Rent 14,000 per Annum.
- Rates £60 month
- ATM Income of £4000 a year
- Lease for 25 Years, Price £47,000
- Oyster Agent

Contact: Nesan

Tel: 07816859744

குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்

ஆகஸ்ட் மாதம் வைத்திய ஆலோசனைகளுக்காக வந்து சிகிச்சை எடுப்பவர்களுக்கு ஆலோசனைக் கட்டணம் இலவசம்.

தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்

HSFC HARLEY STREET FERTILITY CLINIC

Director: Dr Geetha Venkat MD, FRCOG

43 Devonshire Street, London, W1G 7AL

Phone: +44 (0)20 7436 6838


ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

MATHS & ENGLISH AFTER SCHOOL
STUDY PROGRAMMES AGED 4 -16 YEARS

**Give your child the Learna Advantage. Today.**

- Maths & English Classes for 4- 16 years
- Challenging Individualised learning path
- Focus on Problem Solving, Reading and writing
- Improve child's self – confidence and concentration skills
- Thousands of computer activities & Printed worksheets
- Monthly progress tests and instant reports



LEARNA

• Individualised • Interactive • Inspiring

Let your child have the Learna experience
Call us or visit us on the web www.learna.co.uk

0845 094 0061
Learna Education Centre, 5 - 6 The Broadway, Sutton, Surrey SM1 4BU





# 'KNOW YOUR FUTURE'

Look forward to the comming years
with help of Eastern Astrology
Seek sound astrological advise to solve your problems

CONSULT VIDOOSHI MRS B.POTA

Interviewed by Sunday mirror 1970, among leading 5 Astrologers in England.

**Who predicted**

- Conservatives Victory in 1992
- Labour's Victory in 1997

கடந்த 40 ஆண்டுகளாக இங்கிலாந்தில் சேவையாற்றி வரும்
முதல் இந்திய பெண் சாஸ்த்திர நிபுணரை அனுகி உங்களின்
பிரச்சினைகளைத் உடனே தீர்த்திடுங்கள்.

WIDE INTERNATIONAL CLIENTELE
(Tel/Fax: 020 8732 2826 for appt.(daytime) E:Mail: vidoshi@sky.com



M&K
MALIKS & KHAN
SOLICITORS

265 Dunstable Road Luton LU4 8BS
mandksolcitors@lawyer.com
Tel 01582 732503
Fax 01582 732533
www.mandksolicitors.com

**IMMIGRATION**
All cases including Asylum, Human rights, Nationality, Detention, Deportation, Bail and Appeals to IAC and High Court

**PERSONAL INJURY**
All cases including Road Traffic Accident, Accident at work and public places. We give 100% compensation + £300.00 Cash back on successful completion of case subj to terms and conditions if you instruct us directly.

**CONVEYANCING**
Residential Freehold Purchase £350+VAT; Sale £299+VAT; Residential and Commercial property, Transfer, Assignment and extension of lease,

**FAMILY LAW**
Divorce, Child Contact Orders, Eviction etc.

Our staff can speak Tamil, Malayalam, Hindhi, Urdu and Pahari.

Accredited member of Law society in Immigration



# KALVIKOODAM TUITION CENTRE

லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஒர் இனியசெய்தி.....!!!

FREE BASIC TAMIL LESSONS

TAMIL LESSONS
BEGINNERS
INTERMEDIATE
ADVANCED
£5/hr

MATHS
ENGLISH
SCIENCE
£10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் கல்விக்கூடம்

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை ...

பிரதி ஞாயிறு தோறும்
10.00 மணிமுதல் – மாலை 05.00 மணிவரை நடைபெறும்

– தொடர்புகளுக்கு –
020 8090 3366
07738 056 950
www.kalvikoodam.co.uk

Harrow Branch
167, Imperial Drive
Harrow, HA2 7HD

Wembley Branch
24-28, London Road,
Wembley, HA9 7EX

Edgware Branch
2, Turner Road,
Edgware HA8 6BJ



# RND JEWELLERS



தனிப்பட்ட தகவல்கள் இரகசியமாக காக்கப்படும்.
தரமும், உத்தரவாதமும் மிகக் குறைந்த கட்டணத்தில்

Pawnbrokers & Cheques cashed

- Highest cash loans on gold jewellery, lowest interest charges
- Cheques Cashed - Wages, Housing Benefit, Inland Revenue
- International Money Transfer & Foreign Exchange
- Professional Jewellery & Watch Repairs / Engraving

குறைந்த வட்டியில் தங்க நகைகள் மீது
உடனடி பண உதவி

- சம்பளம் வீட்டு வாடகை நல உதவி, வருமான வரி
- நகைகள் மற்றும் கடிகார திருத்த வேலைகள், பெயர்கள் பதித்தல்.
- பண பரிமாற்றும் சேவை
- உங்கள் உறவுகளிற்கு உரிய நேரத்தில் ரகந்த இடத்தில் பணமாற்றிடு செய்திட நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்.....



Private and Confidential Services

315 Northolt Road, South Harrow,
Middlesex HA2 8JA
020 8869 0644



- ESOL with Citizenship
- International ESOL Diploma
- Spouse Visa Test
- Student Visa Extention Test
- Citizenship Courses for Settlement

£25 OFF
With this newspaper
valid till 07/08/2011, One coupon per course

- Successfully trained over 35,000 students
- Certificates within 20 days
- Online numeracy and literacy courses
- Courses from £200
- Multilingual Staff

**FREE**
Initial
Assessment

உங்களுக்காக
இங்கே
நாம் !.



OUR 100% COMMITMENT
YOU PAY ONLY ONCE
& WE TRAIN YOU TILL YOU PASS

To enrol or enquire about your nearest centre, call our team on 0207 099 2400

Head Office:
Vista Business Centre, 9th flr, 50 Salisbury Road
Hounslow TW4 6JQ
Tel:+44(0)207 099 2400

TrainingConnect
www.trainingconnect.co.uk
Australia • China • Dubai • India • Russia • UK

Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway, Birmingham, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Croydon.



## என்னப்பா சொல்லுறாங்க?

சிறிலங்கா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன் சொல்கிறார். எது வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார். யாரப்பா இங்கு உண்மையைச் சொல்லுறாங்கள்?

*மகிதரன்*

## இவையளை யாரும் சீரியசாக எடுக்கிறதில்லையாம்!

புலம்பெயர் அமைப்புகளின் கருத்துகளை நாங்கள் சீரியசாக எடுக்கிறதில்லை என பிரித்தானிய அரசியல் தலைவர்கள் தனக்கு சொன்னதாக கூட்டமைப்பு சுமந்திரன் ஈஸ்றகாம் இல் நடைபெற்ற கூட்டத்தில் பேசியிருக்கிறார். அவர் சொன்னது சரியெண்டால் BTF, GTF, APPGT எல்லாம் என்ன குப்பை கொட்டுகின்றனவா?

*கயல்விழி*

## சனல் 4 செய்யிறதைக் கூட இவை செய்யமாட்டினமா?

இராஜபக்ச சகோதரர்களை கூண்டிலை ஏத்தாமல் விடமாட்டன் என்று சனல் 4 கங்கணம் கட்டிச் செயற்படுவதுபோல், ஆதாரங்களை புட்டுப் புட்டுவைக்கிறது. ஆனால் நாங்கள் என்னென்டால் ஆர் மாவீரர்நாளை நடாத்திறதெண்டு அடிபடுகிறோம். மாவீரர்களுக்குமரியாதைசெலுத்திறதென்பது, அவர்களது இலட்சியத்திற்கு உயிர்கொடுப்பதே தவிர, மண்டபம் எடுத்து மாவீரர்நாள் நடாத்திறது இல்லை என்பது ஏன் இந்த மரமண்டைகளுக்கு விளங்கிறதில்லை?

*ஜோசப் தரன்*

## நீயுமா ஒரு பேப்பர்?

**ஒரு பேப்பர்** ரில் லயன்லாகர் விளம்பரத்தை பார்த்தவுடன் ஆத்திரம்தான் வந்தது. ஆனால்தமிழ் ஆட்கள் விளம்பரம் கொடுக்காவிட்டால் நீங்கள் தான் என்ன செய்வீர்கள்? விடயதானங்களில் மாற்றத்தை ஏற்படுத்தாவரைக்கு உங்களை மன்னித்து விடுகிறேன்.

*கனகராசா*

## மறக்கிறார்கள் மக்கள்

முள்ளிவாய்க்காலில் லட்சக்கணக்கான மக்களை கொன்று குவித்த இலங்கை அரசு இன்று இரண்டு வருடம் கழித்து தமிழர் பிரதேசங்களுக்களின் தேர்தல் முடிவுகளை அறிந்து தோற்றோம் என வேதனைப்படுவதிலும் பார்க்க சந்தோசப்படத்தான் இடமுண்டு. காரணம் யாழ்தீவுப்பகுதியில் மற்றும் வேலணை தொகுதி உட்பட மூன்று தொகுதிகளில் வெற்றி பெற்றதுடன் மற்றைய தொகுதிகளிலும் கணிசமான வாக்குக்களை பெற்று இருக்கிறார்களே? அதுவும் மூவாயிரம் நாலாயிரமென்று. இது நாளடைவில் கூடுவதற்கான சாத்தியம் இருக்குமென நம்பி பேச்சுவார்த்தையை இன்றும் பலகாலம் இழுக்கக்கூடும்.

*மு.குகதாசன்*

## டக்கிளஸ் மாமாவுக்கு சங்கு ஊதிய தமிழர்

மகிந்தரை ஏமாற்றி பெருந்தொகை பணத்தை சுருட்டி தமிழர்கள் பணத்துக்கும் சலுகைகளுக்கும் அடிமைப்படுவார்கள் என்ற எண்ணத்தோடு சைக்கிளில் வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு ஊருராக சுற்றி வந்தார் டக்கிளஸ் மாமா. சிங்கள தலையாரிகளைக் கூட்டிப்போய் தமிழில் பேசவைத்தார். அறுபது வருடமாய் அடிபடும் மக்களை மடக்கி விடலாம் என்று கணக்குப்போட்டார். இடம்பெயர்ந்த சனங்களுக்கு பல நாடுகளால் வளங்கப்பட்ட பொருட்களை பதுக்கி வைத்து தேர்தல் வந்ததும் வெளியில் எடுத்து கமெராக்களுக்கு முன் கச்சிதமாக செயற்பட்டும் தேசிய உணர்வுள்ள அந்த மக்கள் இறுதிநேரத்தில் ஊதிவிட்டார்கள் சங்கு. E.P.D.Pஇனருக்கும் அதன் தலையாரிக்கும்.

*செல்வி ஸ்வேதா சுரேன்*

## சனல் 4

27.07.2011 அன்று மீண்டும் சனல் 4 மேலதிக காட்சிகளோடு புதிய காணொளியை காண்பித்தது. அப்போது ஜொனாதன் மில்லர் கூறு கையில் கோட்டாவை தான் நேரடியாக தொடர்பு கொண்டதாகவும் போர்க்குற்றம் தொடர்பாக அவர் மறுத்ததாகவும் பின்னர் சவேந்தர் சில்வாவையும் அமெரிக்காவில் வைத்து சந்தித்த போது அவரும் ஜொனாதன் மில்லரை பார்த்து நீயும் உனது சனல் 4 உம் தான் யுத்தக்குற்றங்களை திணிப்பதாக கோபமாக பேசினார் சவேந்தர். ஜொனாதனுக்கு எவ்வளவு சிங்களம் சூடேற்றகிறதோ அந்தளவுக்கு சனல் 4 உம் இவர்களுக்கு சூடேற்றி கொண்டே இருக்கும்.

*பரமு*

## சிங்கள மக்களின் விருப்புடனேயே தீர்வு

நான் இன்று வடகிழக்கில் நடந்த கூட்டமொன்றுக்கு சென்றிருந்தே. அங்கே இலங்கை பாராளுமன்ற அங்கத்தவர்களின் உரை இடம் பெற்றது. நன்றாகவே பேசினார். ஆனால் இரு விடயங்கள் என்னிடம் பல கேள்விகளை உருவாக்கியுள்ளது. முதலாவது கேள்வி இலங்கைத் தீவில் சிங்கள மக்களின் விருப்பத்துடனேயே தீர்வு உருவாக்குவது நன்றாகவே இருக்கும் என்னும் கருத்தை முன்வைத்தார். இக்கருத்து முன்பே இலங்கை ஜனாதிபதியால் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இந்த விடயமாக எனது மனதில் பல கேள்விகள் தோன்றுகின்றது. இரண்டாவது பிரித்தானியா பாராளுமன்ற அங்கத்தவர்களை சந்தித்ததாகவும் அவர்கள் இங்கு அரசியல் கதைத்தவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் சிலரின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார். இவர்கள் என்ன விடயங்களை எது சம்பந்தமாக பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்த கதைக்கிறார் என்றும் எனக்கு கேள்விக்குறியாக உள்ளது. இதற்கான பதில்களை தமிழ் மக்களாகிய நீங்களே தரவேண்டுமென கேட்டு நிற்கின்றேன்.

*உங்களில் ஒருவன்*

## அவன்–இவன்!

அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு.

பாலாவின் "அவன் இவன்" படத்தை ஓடிச்சென்று பார்த்த "இரவி அருணாசலம்" சும்மா இருந்த என்னையும் சுண்டி இழுக்க அவரது கவர்ச்சியான விளம்பரம் தூண்டியது. என்னசெய்வது எனக்கு அந்த வசதி கிடைக்கயில்லையே. மறுபடியும் அவர் அந்தப் படத்தை பார்ப்பதற்கு முன்னர் திருட்டு விசிடியைத் தேடித்திரிகிறேன்

*உமா மகாலிங்கம்.*

**ஒரு பேப்பர்** தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ளவும் முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் 020 7043 4314.

# தேசியமும் தேசியக் கொடியும்

கத்தியெடுத்தவன் எல்லாம் சண்டைக்காரன் அல்ல என்பதைப்போல தமிழரின் பறிக்கப்பட்ட உரிமைக்காக போராடப் புறப்பட்ட பல தமிழ்க் கட்சிகள் என்டாலும் சரி ஆயுதக்குழுக்கள் என்றாலும் சரி யாரென்றாலும் சரி தமிழரின் தேசிய சின்னமாக புலிக்கொடியை தேடி போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. அதை ஆரம்பித்த ஒரே ஒரு அமைப்பு தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு. தேசியத்தலைவரால் புதைக்கப்பட்ட அடையாளச்சின்னத்தை தேர்ந்தெடுத்தார். அதனால் தான் இன்றுவரை தேசியக் கொடி என்பது தேசியம் என்பதை கைவிடாது இறுதிவரை போராடினார். அந்த வழியைத்தேடாதவர்கள்தான் இன்று தட்டுத்தடுமாறி புலிக்கொடியை பிடிப்பது சரியா இல்லையா என்று தடுமாறுகிறார்கள். உறுதியான கொள்கைகள் இல்லாததால் தான் தேசியம் பற்றி தெரியாமல் இருக்கிறார்கள். அதனால் தான் தேசியக்கொடி சம்பந்தமாக புலம்பெயர்நாடுகளில் உள்ள பிரமுகர்கள் தான் இந்த புலிக்கொடியைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் இதை பெரிதாக கணக்கெடுப்பதில்லை. பிரித்தானிய பொலிசார் கூட புலிக்கொடியை பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. இதனால் தான் தமிழ் விரோத கட்சிகளுக்கு இது தொடர்பாக விவாதிக்க ஒரு வாய்ப்பாக உள்ளது. மற்றும் **ஒரு பேப்பர்** காரரிடம் ஒரு கேள்வி இன அடையாளம் என்பது மொழியா? இல்லை மதமா? இதற்கு விடை தருவீர்களா?

*தாஸ்*

# நாலாயிரம் ஸ்ரேலிங் பவுணுக்கும் 23 தங்கப்பவுணுக்கும் கொடுக்கப்பட்ட மலிவான தகடு

தகடு கொடுத்தல் என்ற பதம் ஏமாற்றுதல் என்று பொருள்படும். இதன் பின் ஒரு வரலாறு உண்டு. இருபதாம் நூற்றாண்டில் ஆரம்பப் பகுதியில் இந்தியாவில் இருந்து மலையாளச் 'சோதிடர்கள்' இலங்கைக்கு வந்து அங்கு சோதிடம் சொல்லிப் பிழைப்பு நடத்துவது உண்டு. அவர்கள் பரிகாரமாக ஒரு செப்பு இயந்திரத் தகடு செய்து கொடுப்பார்கள். அதற்கு பெருந்தொகைப் பணத்தை பெற்றுக் கொள்வார்கள். இதனால் மலையாளிகள் இலங்கையை மடையன் ஊர் என்றும் சொல்வார்களாம். இப்போது அந்த மடையர் கூட்டம் உலகெங்கும் வாழ்கிறது. மலையாளிகளும் உலகெங்கும் அவர்களைத் தேடிச் செல்கிறார்கள். இதில் அண்மையில் இங்கிலாந்தில் நடந்த உண்மைச் சம்பவம் ஒன்று பலரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

இலண்டன் வட மேற்குப் பகுதியில் ஒரு குடும்பத்தில் மகன் சற்று வழிதவறி கூடாத கூட்டங்களுடன் சேர்ந்து குளறுபடி செய்யத் தொடங்கி விட்டான். போதக் குறைக்கு அவர்களின் நெருங்கிய உறவினரின் மகன் ஏ லெவலில் நாங்கு பாடத்திலும் ஏ எடுத்து இலண்டன் ஸ்கூல் ஒக எக்கொனமிக்ஸ் சென்றுவிட்டான். இதனால் வேதனையின் உச்சக் கட்டத்திற்கு சென்ற குடும்பத்தினர் இந்தியாவில் இருந்து வந்த சோதிடரை அணுகினார்கள். சோதிடரும் அவரின் சாதகக் குறிப்பைப் பார்துவிட்டு தாடியைத் தடவியபடி அந்த விட்டாதிபன் இந்த வீட்டாதிபனை இப்படிப் பார்க்கிறான். இந்தக் கோசாரம் பிழையாக இருக்கிறது. பாதகாதிபன் திசையில் விரயாதிபன் புத்தி நடக்கிறது. என்றெல்லாம் கூறி உடனடியாக பரிகாரம் செய்ய வேண்டும் என்றார். பெற்றோர்களும் அதிபன், ஆதிபதியம், கோசாரம் போன்றதைக் கேட்டுப் பயந்து எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை உடன் பரிகாரம் செய்ய வேண்டும் என்றனர்.

சோதிடரும் கொச்சினில் இருக்கும் தனது பேரனின் மருத்துவக் கல்லூரிப் பிரவேசத்திற்கான செலவை மனதில் கொண்டு உங்கள் வீட்டில் ஒரு பெரிய பூசை செய்ய வேண்டும் அதற்கு நான்காயிரம் ஸ்ரேலிங் பவுண் வேண்டும். அந்தப் பூசையில் 23 தங்கப் பவுணில் செய்த ஒரு இயந்திரத் தகட்டை வைத்துப் பூசை செய்து அதைக் கொண்டு போய் நள்ளிரவில் ஹமர்சிமித் பாலத்தில் இருந்து ஓடும் புனித தேம்ஸ் நதியில் எனது தலையை மூன்று முறை சுற்றிவிட்டு வீச வேண்டும். ஒன்பதாவது வாரம் உங்கள் மகன் திருந்தி விடுவான் என்றார். பெற்றோரும் சோதிடர் கூற்றை வேத வாக்காக எடுத்து கடன்பட்டு சகலவற்றையும் செய்து முடித்தனர். ஒன்பது வாரங்களாகிவிட்டது. பதினெட்டு வாரங்களாகிவிட்டது. குளப்படி விட்டுக் கொண்டிருந்த பையன் இப்போது தூள் பாவிக்கத் தொடங்கிவிட்டான். சோதிடரை மீண்டும் தொடர்பு கொள்ள பெற்றோர் முயன்றனர். சோதிடன் ஒன்பது வாரக் கணக்கிற்கு முன்னரே பாலக்காடு போய்விட்டார். இதை ஒரு நண்பருக்கு சொன்ன போது அவர் கூறியது 'இதிலும் பல மடங்கான பணத்தை அக் குறிப்பிட்ட சோதிடர் சுருட்டியுள்ளார் என்றார். பலரிடமிருந்து சுருட்டி இருக்கிறார்.'

*- வேல்தர்மா -*




✓ Accountancy & Auditing
✓ Business Start up Advice
✓ Business Plans & Cash Flow Forecasts
✓ Personal tax Affairs & Self Assesment
✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
✓ Company Formation
✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
✓ Attending VAT & PAYE visits
✓ Tax Investigations
✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JULY 15, 2011, ISSUE 149

## புலம்பெயர் தமிழர்கள் மீதான அபத்தமான குற்றச்சாட்டுகள்!

இலங்கைத்தீவின் அரசியல் விவகாரத்தில் புலம்பெயர் தமிழர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைகக்கப்படுகின்றன. புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்களை கடும்போக்கானவர்களாகக் காட்டி, தீவில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு இவர்கள் தடையாக இருப்பதாக கண்டனம் வெளியிடப்படுகிறது. சிறிலங்கா அரசாங்கம், மேற்குலக இராசதந்திரிகள், சர்வதேச மட்டத்தில் செயற்படும் அரசுசாரா நிறுவனங்களில் சில என வேறுபட்ட நலன் கொண்டவர்களே இவ்விதமான கண்டனங்களை வெளியிடுகிறார்கள். இந்தவரிசையில் மகிந்த அரசாங்கத்தின் ஆதரவாளர்களான தமிழர்களும், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறி சிறிலங்காப் படைத்தரப்புடன் இணைந்து செயற்படுவர்களும் அடங்குகிறார்கள்.

இன்று புலம்பெயர்தமிழர்களின் வகிபாகம் பலருக்கு இடைஞ்சலை ஏற்படுத்துகிறது என்பதனை இவ்வாறான கண்டனங்களும் விமர்சனங்களும், உணர்த்துவதாக அமைந்துள்ளன. அதற்கு அப்பால் இதனை ஒரு நேர்மறையான அணுகுமுறையாக எடுத்துக் கொள்ள முடியாது. புலம்பெயர் தமிழர்களின் வேண்டுதலுக்காகவே விடுதலைப்புலிகள் போராடினார்கள் எனவும் தாயக மக்கள் சிலுவை சுமந்தார்கள் எனவும் சில தமிழ்த்தரப்புகள் குறிப்பிடுவது, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தும் நடவடிக்கைகளே. தமது சுயலாபத்திற்கும் இருப்பிற்குமாக இத்தகைய குற்றச்சாட்டுகளை முன்வைத்து தம்மை நியாயமான மென்போக்காளர்களாகக் காட்ட சிலர் எத்தனிக்கிறார்கள்.

தாயகத்தில் வாழும் மக்களுக்கும் அவர்களது புலம்பெயர்ந்த உறவுகளுக்கும் இடையில் வாழ்விடம் சார்ந்த வேறுபாடுகள் உள்ளன என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் அரசியல் நிலைப்பாட்டில் ஒத்த கருத்து நிலவுவதனை அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் உணர்தியுள்ளன. உயிரச்சம், இராணுவ நெருக்குவாரங்கள் என்பன இல்லாதிருந்தால், புலம்பெயர் தமிழர்கள்போல் தாயகத் தமிழர்களும் வெளிப்படையாகவே தமது அரசியல் அபிலாசைகள் பற்றி பேசுவார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமக்கான அரசியல் தீர்வு விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரத்தினை தாயகத்தில் வாழும் மக்களே கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களது உரிமைகளை வலியுறுத்தி, குரலிழந்த மக்களின் குரலாக ஒலிப்பதற்கு புலம்பெயர் மக்களுக்கு உள்ள தார்மீக உரிமையை யாரும் பறித்துவிட முடியாது. இவ்விடயத்தில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமில்லை என்பதில் புலம்பெயர் தமிழர்கள் உறுதியாக இருக்கிறார்கள்.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*ஒரு பேப்பர் ரின் நூற்றியம்பதாவது இதழில் சந்திக்கிறோம். நூற்றியம்பது எண்டிறது சும்மா ஒரு மூண்டு தானத்திலை இருக்கிற இலக்கம் இல்லை. அதற்கு பின்னாலை பலரது உழைப்பு இருக்கிறது. ஒவ்வொரு முறையும் பேப்பரை கொண்டு வருவது என்பது பிள்ளை பெறும் பெண்ணுக்குள்ள பிரசவ வேதனை எண்டிறது ஒரு பேப்பர் காரன்களுக்கும் ஒரு பேப்பர் காரிகளுக்கும் மட்டும்தான் தெரியும். பல வழியிலையும் எங்களுக்கு ஆதரவு தாற ஆட்களுக்கும் இது விளங்கும். உங்களுக்கும் அதை ஊகிக்க முடியும். இருந்தாலும் இந்த கரடு முரடான பாதையில் எங்களோடை நடந்து வந்தவர்கள் அனைவரையும் நன்றியோடை நினைவுபடுத்திக் கொள்கிறோம். எங்களுக்கு ஆலொசனைகளைத் தந்து தட்டிக்கொடுத்த காலமாகிவிட்ட சிவநாயகம் ஐயா அவர்களையும் நன்றியோடை நினைவு கொள்கிறோம்.*

*ஒரு பேப்பர் ரில் வெளிவரும் விளம்பரங்கள் விசயமாக சில குற்றச்சாட்டுகளும் வதந்திகளும் அடிபடுவதாக அறியிறம். எதுவாயிருந்தாலும் சும்மா வதந்தியளை பரப்பிறதை விட்டுட்டு எங்களுக்கு தெரியப்படுத்தியிருந்தால் நாங்கள் வடிவா விளங்கப்படுத்தியிருப்பம். விளம்பரங்கள் தொடர்பில் ஓரளவுக்கு நெகிழ்ச்சியாகவே நடந்து கொள்ள வேண்டியுள்ளது எண்டது உண்மைதான். ஒரு இலவசப் பத்திரிகை அந்த ஒண்டை நம்பித்தான் வெளிவருகிறது. என்னெண்டா ஒரு குறித்தளவு வருமானம் விளம்பரங்களாலை வராட்டால் எங்களாலை பேப்பர் அடிக்க ஏலாது. அதுக்காக கிடைக்குது எண்டதற்காக விடயதானம் வாற இடங்களிலை விளம்பரங்களைப் போட்டு நிரப்பி விசயத்தை நாங்கள் சுருக்கிறதில்லை.*

*ஒண்டை நாங்கள் ஒத்துக் கொள்ளத்தான் வேணும். ஒரு பேப்பர் ரின் ஆசிரிய குழுவின் நிலைப்பாட்டுடன் பேப்பரில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்கள் பொருந்தாத சந்தரப்ப்பங்களும் இருக்கின்றன. அதை நீங்கள் அவதானிச்சிருப்பியள்?. ஆனால் ஒண்டை கொஞ்சம் அழுத்தம் திருத்தமாய் சொல்லிறம், விளம்பரங்களுக்காகவோ, விளம்பரதாரர்களுக்காகவோ அல்லது வேறை எந்த ஆட்களுக்காகவோ நாங்கள் ஆசிரியர் குழுவின் கொள்கைகளை மாற்றுவதில்லை. இது பிடிக்காமல் ஒரு பேப்பர் ரிலிருந்து வெளியேறின ஆட்களும் இருக்கினம். ஆனால் நாங்கள் இதிலை மாறப்போறதில்லை.*

*இன்னொண்டையும் சொல்லோணும் விளம்பரங்களை ஏற்றுக் கொள்ளுறதற்கு முன்னம் விளம்பரதார்களைப்பற்றி நாங்கள் விசாரித்து விட்டுத்தான் ஏற்றுக் கொள்ளிறம். இருந்தாலும் ஒண்டு இரண்டு பேர் நேர்மையாக நடந்து கொள்ளுறதில்லை எனத் தெரியவருகிறது. அப்பிடி ஏது உங்களுக்கு நடந்தால் எங்களுக்கு அறியத்தாருங்கோ.*

*கோயில் திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், கடற்கரை, மமஞ எண்டு பிசியாக இருப்பீர்கள். கோடை விடுமுறைகளை மகிழ்ச்சியாய் கொண்டாடுங்கோ.*

*மீண்டும் சந்திப்பம்*

*வேற என்ன?*

*சந்திப்பம்*

*ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்*

# The 'hidden hand' in the 'Killing Fields of Sri Lanka' exposed: It's India



By M G Devasahayam

The air has been full with the "Killing Fields of Sri Lanka", the Channel 4 documentary. The visuals showed naked Tamil prisoners shot in the head, dead bodies of naked women who had been raped and dumped on a truck and other atrocities committed by the Sri Lankan armed forces in the final moments of the brutal civil war. World has never seen such barbarian brutality. Anyone who saw the documentary was numb with disbelief.

The authenticity of the footage has been confirmed by a forensic pathologist, forensic video analyst, firearms evidence expert and a forensic video expert of international repute and the images are horrific.

Meaningful silence: While worldwide protests have condemned Sri Lanka's atrocities against Tamil minorities, India has maintained silence giving the impression it has endorsed Rajapaksa's massacre of Tamils.

While the world seethes in anger, India has been silent. Not surprising, given the fact that fresh from his 'victory' over Tamils in Sri Lanka in May 2009, President Mahinda Rajapaksa said he had fought 'India's war'. He was ecstatic of the fact that his victory coincided with Sonia's electoral victory. The ecstasy appeared to be mutual.

Given the venal Indian mindset, Tamils in post-war Sri Lanka have been progressively reduced to serfs of the Sinhalese. This is endorsed by David Miliband and Bernard Kouchner, former foreign ministers of Britain and France respectively, when they wrote after a recent visit to Sri Lanka: "Tamil life is treated as fourth or fifth class citizens. If foreign policy is about anything, it should be about stopping this kind of inhumanity."

There is an untold story about how New Delhi became instrumental in the brutality and the present inhuman sufferings of Sri Lankan Tamils. In the 2005 presidential election, Rajapaksa of the Sri Lanka Freedom Party (SLFP), a known hawk, won by the narrowest of margins. As President he wanted to outlive his image of a hawk and establish rapport with the Indian government and leadership, but was repeatedly rebuffed and in fact snubbed.

This made Rajapaksa realise the importance of involving civil society in Tamil Nadu to resolve the intractable ethnic problem in his country and act as a bridge between the two countries.

After much persuasion by Colombo, a small core group of retired civil servants, senior journalists and military veterans was formed with myself as the convener. The group held its preliminary meeting in Chennai on 10 May, 2007, with a senior adviser to President Rajapaksa, participating. It was unanimously agreed that a mutually acceptable political package was the only lasting solution to the ethnic crisis.

The group met President Rajapaksa and his high-level team in Colombo on 17 July, 2007. Throughout the long discussions, Rajapaksa was very much involved and positive. He fully endorsed the group's opinion expressed by me that the solution to the crisis should emerge from within Sri Lanka and refined through international opinion, particularly from India. After these parleys Rajapaksa made a public statement hinting at a merged, autonomous North-East, a solution just short of Tamil Eelam.

Following this, the core group had a series of meetings with Rajapaksa's team of ministers and officials and agreed upon many steps to resolve the conflict. A crucial conference was held with President Rajapaksa in Colombo on 25 March, 2008, followed by meetings with Sri Lankan Minister for Constitutional Affairs and National Integration, Chairman of Official Language Commission, and others. An action agenda was set.

The Indian High Commission in Colombo got wind of the group's activities and the Deputy High Commissioner, A Manickam, sought an appointment with me and it was fixed at 5 p.m. at the hotel I was staying in.

Manickam never kept his appointment but the Indian High Commission later reprimanded the Sri Lankan presidential team for holding peace talks with 'unauthorised' persons.

To fortify these initiatives I wrote to TKA Nair, my former colleague and presently principal secretary to Prime Minister on 01 April, 2008. The letter outlined the progress made by the group and the action agenda that has been set for political resolution and Confidence Building Measures.

It requested the government to support the initiative taken by the group to end the long-festering political and humanitarian crisis in the island. But there was no response.

Had New Delhi taken cognizance of this initiative and acted in concert by putting some pressure on President Rajapaksa, the issue would have been resolved and Tamils would now be living in the island with honour and dignity.

But instead, pursuing somebody's personal agenda of 'Sicilian Revenge', New Delhi minions with a well-synchronised Network in Colombo, New York and Geneva, actively assisted the brutal Sri Lankan genocide. No wonder, Delhi is deafeningly silent today on Sri Lanka's excesses.

Time is not far when Rajapaksa & Co is hauled up before the International Court of Justice for war crimes and genocide. In the event, New Delhi minions cannot escape responsibility for this inhuman horror. The bell is tolling!

Courtesy: theweekendleadercom

# நாய்களுக்கு வாழ்வுரிமை மறுக்கப்பட்ட மண்



## வடிவேல் தேவராஜ்
*(வீரகேசரி வாராந்தரி)*

கடந்த இரு வருடாங்களுக்கு முன் யுத்த பூமியாக இருந்த வன்னி தற்போது புத்தபூமியாக மாற்றமடைந்து கொண்டு வருகின்றது.

அரச மரங்கள் அரசாட்சியின் சின்னங்களாக எங்கும் முளைவிடச் செய்யப்பட்டுள்ளன. இதற்கும் அப்பால் பெரிய மரங்கள் வேருடன் இடம் மாறி அமைந்து புத்தருக்கு நிழல் கொடுக்கின்றன.

இவ்வாறு அரச மரத்துடன் அரசாட்சி வேர் பதித்து விரவி நிற்க, 'ஒரு நாடு ஒரு தேசம்" என்ற இலக்கை நோக்கி வன்னி நிலம் அடிக்கப்பட்டு நகர்த்தப்படுகின்றது.

அரச மரத்துடனான அரசாட்சியுடன் ஒரு தேசம், ஒரு கொள்கைக்குள் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள், அதனை நோக்கிய அதிகாரப் பரவலாக்கல்கள் பேசாப் பொருளாகிப் போய் விட்டன.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே னும் அரசியல் தீர்வு குறித்து பேசப்பட்டது. இப்பொழுது அந்த கலாசாரம் கூட மலையேறி விட்டது. இன்று வடக்கின் வசந்தத்திற்குள் ஒளி வீசும் அபிவிருத்தி பற்றியே பேசப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக குறிப்பாக வட பகுதி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசாரப் பீரங்கிக ளாலும், இலவசங்களாலும் அதிர்ந்து போனது. யுத்த காலத்தில் மக்கள் தமது உயிரைப் பணயம் வைத்து வாழ்ந்தமை மறக்க இயலாது. அமைதி திரும்பிய பின்னும் உயிர்கள் பறிபோன போதும் அவை ஆங்காங்கே இடம்பெற்ற சம்பவங்களாகப் பார்க்கப்பட்டன. ஆனால், யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் அல்லது படை த்தரப்பாக இருக்கலாம்.

நாய்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவைகள் தாராள சுதந்திரத்துடன் சுற்றித் திரிந்தன. விமானக் குண்டு வீச்சாலும் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுக்கு மிடையில் அகப்பட்டு உயிரிழந்த சம்பவங்களும் இல்லாமல் இல்லை.

ஆனால் தற்போதைய உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது நாய்கள் தமது உயிர்களைப் பாதுகாத்துக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தன. தம்மை நோக்கிய ஆபத்தை அறியாது சுற்றித் திரிந்த நாய்கள், வெட்டியும் சுட்டும் சாய்க்கப்பட்டு, தலை இல்லாத முண்டங்களாக மனிதர்களைப் போல் எதிரணி வேட்பாளர்களின் வீடுகளின் முன்னாலும், அவர்களது கிணறுகளிலும் வீசப்பட்ட புது தேர்தல் கலாசாரம் யாழில் அரங்கேறியுள்ளது.

சுதந்திரமாக நடமாடித் திரிந்து வாழும் உரிமை மறுக்கப்பட்ட அந்த ஆத்மாக்களுக்காகவும் நாம் பேசியாக வேண்டும்.

சிலவேளைகளில் தேர்தல் முடிவுடனான வெற்றி தோல்விகளின் வெளிப்பாடாகத் தேர்தல் காலத்தில் போன்று நாய்கள் மாத்திரமின்றி மனிதர்களும் வேட்டையாடப்படலாம். இது பற்றி யாரும் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது. நாய்களுக்கும் வாழ்வுரிமை மறுக்கப்பட்ட மண்ணில் ஜனநாயகம் தழைக்குமா என்பதும் கேள்விதான். இலங்கையில் முக்கிய மான தேர்தல் எனக் கணிக்கப்படும் தேர்தல் பிரசாரங்கள் தமிழ் மக்களின் அபிலாஷை குறித்து பேசாது இடம்பெற்றுள்ளது.

ஆனால் அமெரிக்கா முதற்கொண்டு சர்வதேச சமூகம் முதலாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வரை தமிழ் மக்களுக்காக அரசியல் தீர்வு குறித்துப் பேசுகின்றனர்.

போர்க் குற்றம் குறித்து இலங்கை அரசு உரிய விசாரணை நடத்தவில்லையென்றால் இலங்கைக்கான உதவிகள் நிறுத்தப்படுமென்று அமெரிக்க செனட் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் தமிழர்களோ, புலம்பெயர் தமிழர்கள் உட்பட ஜெயலலிதாவும் ஹிலாரியும் தமிழர் விவகாரம் குறித்துப் பேசுவார்களா என்று பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

முதலில் எமக்காக மற்றவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பது குறித்து பட்டிமன்றங்கள் நடத்துவதை விடுத்து, எமக்கிடையிலான முரண்பாடுகளை தூர வீசி எறிந்து விட்டு தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்கேற்ற நடைமுறைச் சாத்தியமான, உறுதியான, தூர நோக்குடனான திட்டங்களை வகுத்து நாம் செயற்பட முன்வர வேண்டும்.

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டுமென்று அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றதை நாம் அனைவரும் அறிவோம். ரொபேர்ட் பிளேக் கூட்டமைப்பினரைச் சந்தித்தபோது அரசியல் தீர்வை முன் வைக்குமாறு கோரியதுடன், முன் வைக்கப்படும் தீர்வுப் பொதிக்கு அமெரிக்கா ஆதரவளிக்கத் தயார் என்றும் கூறியுள்ளார். இப்பொழுது பந்து தமிழர் பக்கமே உள்ளது.

# The Mystery Revealed, The Truth Brought to Light!

**By: Periasamy Kanthavel**

*Sonia Gandhi wanted Colombo to decimate LTTE without finalising a Political Solution". Oh God, who let the cat out? It is none other than Mr. Sam Rajappa, the well respected journalist with five decades experience in media. Presently he is the Director of The Statesman Print Journalism School, Kolkata.*

*He dared to come out with the argument that, the DMK, an important constituent of the UPA, remained passive content with amassing wealth, even as India extended military, material and moral support to Sri Lanka in its war, that turned out to be a highly intensive genocide of its Tamil citizens in the crucial 2008-2009 period. He further said, that, the AIADMK, voted to power in the Assembly election held in April 2011 and its leader Jayalalitha, had chosen a proactive role in rescuing fellow Tamils across the Palk Bay who are been progressively reduced from second class citizenship they enjoyed since independence in 1948 to serfs(meaning a class of agriculture labourers) of the Sinhalese.*

*The screening of Channel 4's "Killing fields of Sri Lanka" by a national television channel for three consecutive days recently, made people start to wonder how New Delhi became instrumental in Such a the brutality, brought out in the Channel 4 documentary.*

*One wonders why Sonia asked the President of India to set aside, on a mercy petition, the Supreme Court judgment directing that Rajiv Gandhi's LTTE killers be hanged to death, when she was not similarly moved for Satwant Singh who killed Indira Gandhi.What sort person is this Madam!*

*Sonia Gandh at the begining, was not interested in India or its people. Sonia was the name given to her subsequently by her father, Late Stefano Maino following his return from Russia where he had been a prisoner of war. Stefano had joined the Nazi army as a volunteer. Sonia is a Russian not Italian name. While spending two years in a Russian jail, Sonia's father had become quite pro-Soviet; especially after the liberating US army in Italy had confiscated all fascists' properties including his.*

*The truth is that Sonia has never studied in any college anywhere. She did go to a Catholic nun run seminary-school called Maria Ausiliatrice in Giaveno, Italy. Poverty those days forced young Italian girls to go to such missionaries and then in their teens go to UK to get jobs as cleaning maids, waitresses and au pair. Miss. Sonia Gandhi upon learning enough English became a waitress in Varsity Restaurant in Cambridge town. She first met Rajiv when he came to the restaurant in 1965. Rajiv was a student in the University, but could not cope with the academic rigour for long. So he had to depart in 1966 for London where he was briefly in Imperial College of Engineering as a student.*

*Sonia too moved to London, and according to reliable information got a job with an outfit run by Salman Thassir, a debonair Pakistani based in Lahore, and who has a export-import company headquartered in Dubai but who spends most of his time in London.*

*Obviously, Sonia made enough money in this job to loan Rajiv funds in London, who was obviously living beyond his allowances. Rajiv's letters to Sanjay, who was also in London then, clearly indicated that he was in financial debt to Sonia because he requested Sanjay who obviously had more access to money, to pay off the debt.*

*The circumstance under which Rajiv hastily married Sonia in a Church in Orbassano is controversial. But what is of public significance is that Indira Gandhi who was initially dead against the marriage for reasons known to her, relented to hold a registry marriage with Hindu ceremonial trappings in New Delhi only after the pro-Soviet T.N. Kaul prevailed upon her to accept the marriage in "the larger interest of cementing Indo-Soviet Friendship". Kaul would not have intervened unless the Soviet Union had asked him to. Thus many in India believe that Sonia marrying Ghandhi was the foundation for Soviet – India frienship.*

*Let us recall the controversial 2005 presidential election India enthsiastically and the West naturally expected the victory of Ranil Wickremasinghe of the UNP. but Rajapaksa of the SLFP, a known hawk, won by the narrowest of margins, as President. Had it not been the boycott of the election by the Tamils in response to a call given by the LTTE, Wickremasinghe would have won easily.*

*By then the Sri Lanka government under the leadership of Rajapakse was getting ready for the genocidal war by recruiting large number of Sinhalese military men. Project Beacon( Decimation of the LTTE) was already on the Table, as early as November 2005, as planned by India, UK and USA. President Rajapakse knowing the LTTE, their military stratagy and stregth wanted India to underwrite the victory. He was tackling New Delhi through a Tamil Nadu civil society group, which even tried to sell the idea of a' panchayat raj system' to Rajapaksa to resolve the ethnic crisis.*

*It was after this group's successful initiative that India changed track and gave the green signal to the Sri Lankan government to go all out to decimate the LTTE without insisting on a political solution to resolve the ethnic crisis. According to sources in Colombo, Sonia Gandhi wanted LTTE leader Velupillai Pirapaharan and its intelligence chief Pottu Amman decapitated and pledged all military support to Sri Lanka to achieve her goal.*

*"The world is crippled and the true narrative dark, tragic and grisly. People are in general, totally fooled. As a rule human beings either know far too much, or far too little about what is taking place in the dark hollows", rapped M.I.A (http://www.salem-news.com/articles/july222011/mia-hustler-tk.php).*

*Is M.I.A, another rap sensation, the proud daughter of of a Tamil revolutionary did refer to Sonia and the Indian Diplomats, is every Tamils speculation. She would go on till Tamils get their State of Tamil Eelam, though some say that she incites revolution*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

1st and Best Accountants
Wembley ................ 07828 396 651

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate............... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]

இந்த
வெற்றிடத்தை
நிரப்புவது
உங்கள்
கைகளில்தான்
உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: ORU PAPER
Bank: HSBC
A/C: 61429035
S/C: 40-33-09

**ஒரு பேப்பர்**
ORU PAPER

*எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!*

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்
கனடா
தயா - அரவிந்தன் - சிந்து
பிரான்ஸ்
சிறி
ஜேர்மனி
சபேசன்
சுவிஸ்
சயந்தன்
பொறுப்பாசிரியர்
- கோபி -
மக்கள் தொடர்பு
கவி
விளம்பரம்
மலர்
அச்சு
தர்சினி (கனடா) - பானு
வடிவமைப்பு
மயூரன் - பெகின்
முகப்பு வடிவமைப்பு
seven zero graphics
விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா
தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்
நிதி – நிர்வாகம்
நிவேதா
வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்
உங்கள் தொடர்புகட்கு:
தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850
தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855
ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:
பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# ஆயுதமேந்திய டக்ளஸும் வேறுபாடுகளைப் புரிந்துகொள்ளலும்

தமக்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஒடுக்கப்படும் தமிழ்ப் பேசும் மக்கள் தாம் ஒடுக்கப்படுகிறோம் என்று உரத்துக் கூறியிருக்கிறார்கள். மக்கள் விரோதிகள், இடதுசாரி சந்தர்ப்பவாதிகள், சுயநலமிகள் என்று ஒவ்வொரு வரது மனச் சாட்சியிலும் குருதியுறைந்து தம்மை இனம் காட்டியிருக்கிறார்கள்.

இந்திய விஸ்தரிப்புவாதிகள், சீன வியாபாரிகள், அமெரிக்க ஏகபோகம், ஐரோப்பிய மிரட்டல்கள் என்ற எதனையும் அவர்கள் பொருட்டாகக் கொள்ளவில்லை. தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான அரசியல் தளத்தில் அவர்கள் அறுபது ஆண்டுகள் குவித்து வைத்த சாம்பல் மேடுகளின் மேல் நின்று போர்கொடி உயர்த்திக் கூறியிருக்கிறார்கள்.

வன்னி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், அம்பாறை என்று பேரின வாதிகள் குறிவைத்த ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் உள்ளூராட்சித் தேர்தலினூடாக மக்களின் குரல் ஓங்கி ஒலித்திருக்கின்றது.

புலம் பெயர் நாடுகளிலிருந்து விடுமுறை உழைப்பிற்காக சொந்த தேசத்திற்குச் சென்று சோறு போடுவதே இன்றைய தேவை என்று மார்தட்டித் திரிந்த வியாபாரிகளை நோக்கி மக்கள் கோருகிறார்கள்! தாம் சலுகைகளுக்காக அலையும் பச்சோந்திகள் என இனிமேலும் அவமானப் படுத்த வேண்டாம் என்று கோரியிருக்கிறார்கள்!! “இணக்க அரசியல்” என்று தலையங்கமிட்டு இனப்படுகொலையாளர்களோடு கைகோர்த்துக் கொள்வதை தம்மால் அனுமதிக்க முடியாது என ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார்கள்.

தேர்தல் தோல்வியை ஒத்துக்கொண்ட அரச துணைக்கட்சியான ஈ.பி.டிபியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா வெற்றிபெற்றவர்கள் அபிவிருத்தியில் ஈடுபட மாட்டார்கள் என்றும் கிளிநொச்சியிலும் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றுள்ளதால் தமது அபிவிருத்தி வேலைகள் தடைப்படும் என்று மிரட்டியிருக்கிறார். மக்கள், தேசியக் கூட்டமைப்பு யார் என்று மிகத் தெளிவான புரிதலுடனேயே வாக்களித்திருக்கிறார்கள். அரச செலவோடு, ஆடம்பரமாக, அனைத்து வசதிகளோடும் மேற்கொண்ட பிரச்சாரத்திலேயே டக்ளஸ் குழாம் அபிவிருத்தியே தமது ஒரே நோக்கம் என்று ஒவ்வொரு தடவையும் கூறியிருந்ததை எல்லாம் மக்கள் அவதானமாகக் கேட்ட பின்னரே அவர்களுக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள்.

பேரினவாத ஒடுக்கு முறையின் கோரப்பசி முழுமையான இராணுவ ஒடுக்கு முறையாக உருவாகியிருந்த 70 களின் இறுதிப்பகுதியில் டக்ளஸ் தேவானந்தா ஆயுதமேந்திய அரசியலில் தன்னை இணைத்துக்கொண்டார்.

1977இல் அவர் ஆயுதமேந்திய அதே காலப் பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆளும் கட்சிக்கு அடுத்த இடத்தில் வெற்றி பெற்றிருந்தது. டக்ளஸைப் போன்றே ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஒரு புறத்தில் மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட அதே வேளை பேரின வாத அரசிற்கு எதிரான ஆயுத எழுச்சியின் தேவையையும் உணர்ந்திருந்தனர்.

அன்றைய பேரினவாத அரசோ அன்றி அதன் துணைக் கட்சிகளோ தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான மக்களின் குரலைக் கேட்க மறுத்தன.

மக்கள் போராட்டத்திற்கான அரசியல் தலைமை இன்னும் உருவாகியிருக்கவில்லை. தன்னெழுச்சியான இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் இந்தப் பின்னணியிலேயே உருவாக இளைஞனான டக்ளஸ் ஈரோஸ் இயக்கத்திலும் அது பிளவடைந்த வேளையில் ஈ.பி.ஆர்.எல்.எப் இலும் இணைந்து கொண்டார்.

அதே வரலாற்றின் மறு விம்பம் இன்று அழிவுகளின் விளிம்பிலிருந்து உருவாகியுள்ளது. இப்போது டக்ளஸ் அரச துணைக் கட்சி! உரிமைகளை விலைபேசிவிட்டு பதவிக்காக அபிவிருத்தி என்ற பெயரில் தேர்தல் சந்தையில்!!

ஒரு வேறுபாடு. 77இல் காணப்பட்டதை விடவும் பல மடங்கு அதிகமாக தேசிய இன ஒடுக்கு முறை இனப்படுகொலையாகவும், இனச் சுத்திகரிப்பாகவும் திட்டமிட்டு நிறுவனமயப் படுத்தப்பட்ட நிலையில் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.

அன்றைப் போலவே இன்றும் மக்கள் தங்கள் உணர்வுகளைத் தேர்தல் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்கள். அன்றைப் போலவே தேர்தல் என்பதும் பாராளுமன்றம் என்பதும் இறுதித் தீர்வல்ல என்பதும் மக்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு வேறுபாடு. 77 ஐப் போலன்றி வன்னி மண்ணில் குண்டுத் துகள்களைத் தாங்கிய ஆயிரக்கணக்கான குழந்தைகளைப் பேரின வாதம் உற்பத்தி செய்து வைத்திருக்கின்றது. பேரினவாதத்திற்கு எதிரான போராட்ட உணர்வு அவர்களின் இரத்தத்தில் கலந்திருக்கிறது. 30 ஆண்டு போராட்ட வரலாற்றைக் கண்ட அனுபவத்தை அவர்கள் சுமந்திருக்கிறார்கள்.

மக்கள் தீர்ப்பு, பாராளுமன்றத்தை நிராகரித்தல், அபிவிருத்தி அரசியலின் தோல்வி, ஆயுத எழுச்சி என்ற நிகழ்ச்சிப் போக்கு மறுபடி உருவாகும் அத்தனை சாத்தியங்களும் அதற்கான புறச் சூழலும் 70களின் பிற்பகுதிகளை விட மிக அதிகமாகவே காணப்படுகின்றன.

இதனை பேரினவாதிகளும், ஈ.பிடி.பி போன்ற அதன் துணைக் குழுக்களும், ஏன் தேசியக் கூட்டமைப்பும் கூட, நன்கு அறிந்தே வைத்திருப்பார்கள்.

இவர்கள் அனைவருக்கும் மேலாக இதனை ஜனநாயக முற்போக்கு சக்திகள் உள்வாங்கிக் கொண்டால் ஆயுத எழுச்சியின் தோல்வி இன்னொரு முறை நிகழாமல் இருக்கும்.

*கோசலன்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## முக்கியமானதை முதலில் படியுங்கள்!

வாழ்க்கையில் பாடங்களை விரைவாகப் படித்துத் தேறுவது முக்கியம் என்பதைப் பார்த்தோம். ஏனென்றால் வாழும் காலம் இவ்வளவு தான் என்பது படைத்தவன் மட்டுமே அறிந்த ரகசியம். 'நான் வயதில் சிறியவன். எனக்கு இதை எல்லாம் படிக்க இன்னும் நிறைய காலம் இருக்கிறது, அதனால் நிதானமாய் பின்பு படித்துக் கொள்கிறேன்' என்று எந்த இளைஞனும் சொல்லி விட முடியாது. ஏனென்றால் படிக்க ஆரம்பிக்கும் முன்பே வாழ்க்கை முடிந்து போகின்ற துரதிர்ஷ்டசாலியாகி விட அவனுக்கு வாய்ப்புகள் நிறைய உண்டு. அதே போல 'எனக்கு வயதாகி விட்டது. அதனால் நான் இனி படிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று எந்த முதியவரும் அலட்சியமாக இருந்து விட முடியாது. கடைசி மூச்சுவரை நீடிக்கும் இந்த வாழ்க்கைப் பாடங்களைப் படிக்கத் தவறினால் தோல்வியின் உரசல்களில் காயப்பட்டு வருந்த நேரிடும்.

வாழ்க்கைப் பள்ளியில் தேர்வு முறை வித்தியாசமானது. சாதாரண பள்ளிகளில் வைப்பது போல தேர்வுகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வைக்கப்படுவதில்லை. தேர்வுகள் முன் கூட்டியே அறிவிக்கப்படுவதில்லை.

என்நேரமும் வாழ்க்கை உங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். அந்த நேரத்தில் நீங்கள் தயாராக இருந்து அந்தத் தேர்வில் தேற வேண்டும். எனவே என்நேரமும் பரீட்சிக்கப் படலாம் என்ற உண்மை உணர்ந்து தயார்நிலையில் இருப்பது அறிவுடைமை.

முதலில் வாழ்க்கையில் முக்கியமான விஷயங்களைப் படித்துக் கொள்ள வேண்டும். எதெல்லாம் அவசியத் தேவைகளோ, எதெல்லாம் நம் நிம்மதியான வாழ்க்கைக்கு முக்கியமோ அதையெல்லாம் படித்துத் தேறுபவன் எந்தக் காலத்திலும் பாஸ் மார்க் வாங்கி முன்னேறிக் கொண்டே போகலாம். அதைக் கற்றுக் கொள்வதில் எந்த தயக்கமும் காட்டி விடக்கூடாது. அதை விட்டு விட்டு மற்றவற்றை எவ்வளவு அறிந்து வைத்திருந்தாலும் அது யதார்த்த வாழ்க்கைக்கு உதவாது.

ஒரு கர்வம் பிடித்த அறிவாளி ஆற்றில் பயணித்த கதையை நீங்கள் கேட்டிருக்கக் கூடும். அந்த அறிவாளி ஏராளமான புத்தகங்களைக் கரைத்துக் குடித்தவர். பல விஞ்ஞானக் கோட்பாடுகளை நுணுக்கமாக அவரால் விவாதிக்க முடியும். பல மொழிகளில் அவர் நல்ல பாண்டித்தியம் பெற்றவன். என்ன தலைப்பை அவருக்குத் தந்தாலும் அவரால் அதைப்பற்றி விரிவாக விளக்க முடியும். அதனால் அவனுக்கு நிறையவே கர்வம் இருந்தது. ஒவ்வொருவரிடமும் அவர் அறியாதவற்றைக் கேட்டு அவர் திணறுவதை ரசிப்பார்.

ஒருமுறை அவர் ஆற்றைக் கடந்து பயணிக்க வேண்டி இருந்தது. படகு ஒன்றை வாடகைக்கு எடுத்து ஆற்றில் பயணித்தார். படகோட்டியைப் பார்த்தாலே படிக்காதவன் என்பது அவருக்குப் புரிந்தது. அவன் தன் படகில் எப்படிப்பட்ட அறிவு ஜீவியை அழைத்துக் கொண்டு போகிறான் என்பதை அவனுக்கு அவர் உணர்த்த விரும்பினார். அவனிடம் அவர் அது தெரியுமா, இது தெரியுமா என்று பெரிய பெரிய விஷயங்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டே வந்தார். அவனோ பலவற்றின் பெயரைத் தன் வாழ்க்கையில் இது வரை கேட்டறியாதவன். அவன் தெரியாது, தெரியாது என்று பரிதாபமாகச் சொல்லிக் கொண்டே வந்தான். இதெல்லாம் தெரியாத உன் வாழ்க்கை வீண் என்பதைப் பல விதங்களில் அந்த அறிவாளி அவனுக்கு உணர்த்திக் கொண்டே வந்தார்.

திடீரென்று ஆற்றில் வெள்ளம் வந்து விட்டது. வெள்ளத்தில் அந்தப் படகு தத்தளித்தது. படகோட்டி அவரைக் கேட்டான். 'ஐயா இத்தனை தெரிந்த உங்களுக்கு நீச்சல் தெரியுமா?'

அந்த அறிவுஜீவிக்கு நீச்சல் தெரிந்திருக்கவில்லை. வேறொன்றுமே தெரியா விட்டாலும் நீச்சல் தெரிந்த அந்த படகோட்டி நீந்தி உயிர் பிழைத்தான். ஆனால் அது தவிர எத்தனையோ தெரிந்திருந்த அந்த அறிவாளி வெள்ளத்தில் மூழ்கி இறந்தார். எத்தனை தெரியும் என்பது முக்கியமல்ல. உங்கள் வாழ்க்கைக்கு அந்தந்த காலத்திற்குத் தேவையான முக்கியமானவற்றை நீங்கள் தெரிந்து வைத்திருக்கிறீர்களா என்பது முக்கியம். அது தெரியாமல் அதைத் தவிர பாக்கி எல்லாமே தெரிந்து வைத்திருந்தாலும் மற்றவர்கள் உங்களை மேலாக நினைக்க அவை உதவலாமே ஒழிய வாழ்க்கையில் அந்த குறிப்பிட்ட காலத்தை சமாளிக்க அவை உதவாது.

எனவே வாழ்க்கைக்கு முக்கியமான விஷயங்களை முதலில் கற்றுத் தேறுங்கள். எதெல்லாம் உங்கள் வாழ்க்கையை சிறப்பாக வாழ அத்தியாவசியமோ அதைத் தேவையான அளவு பெற்றிருங்கள்.

எந்த குணாதிசயங்கள் வாழ்க்கையைத் தாக்குப்பிடிக்கத் தேவையோ அந்தக் குணாதிசயங்களைக் கண்டிப்பாக வளர்த்துக் கொள்ளுங்கள். அவை என்ன என்று கேட்க நீங்கள் மற்றவர்கள் உதவியை நாட வேண்டியதில்லை.

வாழ்க்கை உங்களுக்குத் தரும் சோதனைகளைக் கூர்ந்து கவனியுங்கள். எதையெல்லாம் உங்களால் சரியாக சமாளிக்க முடியவில்லையோ அதில் எல்லாம் நீங்கள் கற்றுத் தேற வேண்டியது இருக்கிறது.

**என்நேரமும் வாழ்க்கை உங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். அந்த நேரத்தில் நீங்கள் தயாராக இருந்து அந்தத் தேர்வில் தேறவேண்டும். எனவே என்நேரமும் பரீட்சிக்கப் படலாம் என்ற உண்மை உணர்ந்து தயார்நிலையில் இருப்பது அறிவுடைமை.**

எந்தக் குறையால் ஒரு சூழ்நிலையை சமாளிக்க முடியவில்லை என்று யோசியுங்கள். உடனடி பதிலாக விதி, சொந்தக்காரன், பக்கத்து வீட்டுக்காரன், அரசாங்கம் என்று எடுத்துக் கொண்டு பொறுப்பை அந்தப் பக்கம் தள்ள முயற்சி செய்யாதீர்கள். உங்கள் குறையை உணருங்கள். நீங்கள் படிக்க வேண்டிய முக்கியமான பாடம் உங்களுக்குக் கிடைத்து விட்டது. முன்பு சொன்னது போல சீக்கிரமே படித்துத் தேறுங்கள்.

அதை விட்டு விட்டு கல்வி, செல்வம், பட்டம், பதவி ஆகியவற்றைப் பெற்றிருக்கிறதால் அனைத்தும் அடைந்து விட்டதாக ஒரு கற்பனை உலகில் இருந்தால் ஆற்று வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போன அறிவுஜீவியைப் போல் வாழ்க்கை ஓட்டத்தில் துரும்பாக அலைக்கழிக்கப் படுவீர்கள்.

*- என்.கணேசன்*

# உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றி: வாய்ப்புக்களும் அபாயங்களும்



**கோபி**
ஒரு பேப்பர்

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற அமோக வெற்றி, உலகத்தமிழ் மக்களுக்கு மகிழ்வினை ஏற்படுத்தியிருக்கிறது. வெறுமனே உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலாக இருந்த போதிலும், போருக்கு பின்னரான காலத்தில் தமிழ்மக்களின் கருத்தறியும் ஒரு வாக்கெடுப்பாக பார்க்கப்பட்டதால், இத்தேர்தல் சர்வதேச மட்டத்தில் அரசியல் நோக்கர்களின் அவதானத்திற்கு உள்ளானது. வடக்குக்கிழக்கினைப் பொறுத்த வரை தேர்தல் நிலவரமானது, கறுப்பு வெள்ளையாக முடிவுகளை எடுக்கக்கூடியவகையில் அமைந்திருந்தது. இந்நிலையில் முடிவுகள் எப்படி அமையும் என்பது தொடர்பாக தமிழ், சிங்கள தரப்புகளிடையே பலத்த எதிர்பார்ப்பு காணப்பட்டது. ஒன்றில் தமது அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என வலியுறுத்துவது அல்லது அபிவிருத்தி என்ற முகமூடியுடன் வரும் அடிபணிவு அரசியலை ஏற்றுக் கொள்வது என இரண்டு தெரிவுகள் தமிழ் மக்கள் முன்னிருந்தன. தேர்தலை புறக்கணித்தால் முடிவுகள் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்திவிடும் என்ற அச்சமுமிருந்தது. பெரும்பகுதியினர் முதலாவதை தெரிவு செய்தார்கள்.

இலங்கைத்தீவு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்டதிலிருந்து, கடந்த அறுபத்து மூன்று வருட அரசியல் வரலாற்றை நோக்கினால், இந்த முடிவு ஒன்றும் ஆச்சரியப்படதக்க விடயமல்ல. அன்றிலிருந்து இன்று வரை நடந்த தேர்தல்களில் இத்தகைய தீர்ப்பையே அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆனால் பாரிய இனவழிப்பு நடவடிக்கைளுக்கு முகம் கொடுத்துவிட்டு தப்பிப்பிழைத்திருக்கும் மக்களைப் பொறுத்தவரை, கடந்த இரண்டு வருடகாலம் மிகவும் மோசமானது. இக்காலத்தில் அவர்கள் சிங்களத்தின் முற்று முழுதான ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பிருந்த அற்ப சொற்ப சுதந்திரமும் பறிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை நிரந்தரமாக அடிமை கொள்வதற்கு சிங்களம் முயன்று வருகிறது. அதற்கு துணையாக சில சக்திகள் தமிழர் தரப்பிலிருந்து உருவாக்கப்பட்டன. குரலிழந்த மக்களுக்காக குரல் கொடுக்க இந்த ஒநாய்கள் முற்பட்டன. ஆனால் அவர்களது முயற்சிகள் யாவும் முற்று முழுதான தோல்வியில் முடிவடைந்துள்ளமையை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தேர்தலுக்கு முன்னரான நாட்களில் சிறிலங்கா அரச தரப்பால், மக்கள் மீதும், வேட்பாளர்கள் மீதும் ஏற்படுத்தப்பட்ட நெருக்குவாரங்கள், அச்சுறுத்தல்கள் ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் சலுகைகள், கையூட்டு, அன்பளிப்புகள், போலி வாக்குறுதிகள் என்பன வழங்கப்பட்டு மக்களை ஏமாற்றும் முயற்சிகளும் நடைபெற்றன. இவற்றையெல்லாம் எதிர்கொண்டபடி தமது கருத்தினை அவர்கள் தெளிவாக வெளியிட்டிருக்கிறார்கள்.

அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், வாக்கெடுப்பு இரகசியமாக நடைபெற்றதால் இந்த முடிவினைச் வெளிப்படுத்துதல் சாத்தியமானது. இத்தேர்தலில் நாம் இன்னொரு முக்கியமான விடயத்தையும் கவனிக்கத் தவறக்கூடாது. அதாவது முடிவுகள், தமிழ் மக்களிடம் காணப்படுவதாகக் கூறப்படும் பிரதேச, சாதி மற்றும் இன்னோரன்ன வேறுபாடுகள் அனைத்தையும் கடந்ததாக அமைந்திருக்கின்றன.

தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பெற்ற வெற்றியானது தனித்து தமது செயற்பாடுகளுக்கு கிடைத்த அங்கீகாரம் என அவர்கள் எண்ணி விட முடியாது. ஏனெனில் அவர்கள் செயலற்று அல்லது செயற்பட முடியாது உள்ள நிலையிலேயே மக்கள் அவர்களை தெரிவு செய்திருக்கிறார்கள். அதிகாரமற்ற இந்தச் சபைகளை பிரதிநித்துத்துவப்படுத்துவதன் மூலம் தங்களது அன்றாடப் பிரச்சனைகளையாவது தீர்த்து வைப்பார்கள் என்ற குறைந்தபட்ச எதிர்பார்ப்புக்கூட மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் தமது அடிப்படை அரசியல் உரிமை விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்புகளுக்கும் மக்கள் தயாராக இவ்லை என்பதனை கூட்டமைப்பினர் உணர்ந்து கொள்வார்கள் என்ற எதிர்பார்ப்பு உலகத்தமிழர்களிடம் இருக்கிறது. அதனை நிறைவேற்றுவார்களா என்பதில் தான் குழப்பமான சமிக்ஞைகள் தெரிகின்றன.

விடுதலைப்புலிகளின் இடத்திற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினை வைத்து அவர்களை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகக் காட்டும் முனைப்பு, கூட்டமைப்பின் ஆதரவாளர்களிடம் மட்டுமல்லாமல், இந்தியா உட்பட்ட வேறும் சில சர்வதேச சக்திகளிடமிருந்தும் வெளிப்படுகிறது. இச்சிந்தனையில் உள்ள அபாயத்தினை நாம் இலகுவில் புறந்தள்ளிவிடமுடியாது.

ஏனெனில் கூட்டமைப்பு என்பது வெளித்தோற்றத்தில் காணப்படுவதுபோன்ற ஒருமித்த கருத்துடைய அரசியல்வாதிகளைக் கொண்ட அமைப்பு அல்ல. அதில் காணப்படும் வெவ்வேறு குழுக்கள் தனிநபர் உள் மனச்சிக்கல்களுக்கு ஆட்பட்டவை மட்டுமல்லாமல் கொள்கையளவிலும் அவர்களிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

கூட்டமைப்பின் தலைமைத்துவம் இரண்டு தெளிவான தட்டுகளைக் கொண்டது. ஒன்று கொழும்பை மையப்படுத்திய ஆங்கிலத்தில் சரளமாகப் பேசத் தெரிந்த தரப்பினர். மற்றயது மக்களுடன் ஒரளவுக்காகிலும் நேரடித் தொடர்புகளைப் பேணி வரும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொணட தலைமைத்துவம். கூட்டமைப்பின் தலைவர் இராசவரோதயம் சம்பந்தன், தேசியப்பட்டியலில் நியமிக்கப்பட்ட மதியாபரணம் சுமந்திரன் உட்பட கொழும்பில் வசிக்கும் சட்டத்தரணிகள் சிலர் முன்னைய தரப்பிலும், செல்வம் அடைக்கலநாதன், அரியநேந்திரன், மாவைசேனாதிராசா, சிறிதரன் போன்றவர்கள் இரண்டாவது தரப்பிலும் அடங்குவர். இந்த இரண்டு வகையினருக்கும் இடையில் காணப்படுவர்களாக சரவணபவன், அப்பாத்துரை விநாயகமூர்த்தி போன்றவர்களிருக்கிறார்கள். முதலாவது தரப்பினர், முழுநேர தொழிலாக சட்டத்துறையையும், அரசியலை பகுதிநேரத் தொழிலாகவும் கொண்டவர்கள், இரணடாவது தரப்பினர் அரசியலில் முழுநேரமாக ஈடுபடுகின்றனர். தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவர்களான இரண்டாவது தரப்பினர் மக்களுடன் தொடர்பாடல்களை நடாத்தினாலும், சர்வதேச சக்திகளுக்கு கூட்டமைப்பின் முகமாக முதலாவது தரப்பினரே தென்படுகிறார்கள். இங்குதான் சிக்கல் நிறைந்திருக்கிறது.

தாயகம் - சுயநிர்ணயம் -தன்னாட்சி உரிமை என்பவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலட்சியமாக முன்வைக்கப்படுகிறது. ஆனால் இவைபற்றிய வியாக்கியானங்கள் மேற்குறித்த இரண்டு தரப்பினரிடையேயும் வேறுபட்டவையாக அமைந்துள்ளன. இதுவிடயமாக அவைக்கு தகுந்தபடி விளக்கங்கள் வழங்கி தப்பித்துக் கொள்கிறார்களே தவிர உண்மையான அர்த்தத்தில் அவை கையாளப்படவில்லை. இந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்துள்ள குழுக்களும் தனிமனிதர்களும், தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல் என்ற குறைந்த பட்ச கருத்தியலுடன் மாத்திரம் இணைந்திருக்கிறார்களே தவிர வலுவான கொள்கைகளின் அடிப்படையில் அல்ல என்பது கவனிக்கத்தக்கது.

சிறிலங்கா அரசாங்கத்துடனும், சர்வதேச இராசதந்திரிகளினுடாக சர்வதேச சக்திகளுடனும் சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்களே பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுகிறார்கள். மற்றயவர்கள் உடனிருந்தாலும் அவர்கள் வாய்திறப்பதில்லை எனத் தெரிய வருகிறது. பேச்சுகள் ஆங்கிலத்தில் நடைபெறுவதால் இந்நிலை ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டாலும், இதனை ஒரு காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

தேர்தல் வெற்றியினால் பெறப்பட்டுள்ள ஒரு வாய்ப்பான சூழலை கூட்டமைப்பின் தலைமை தமது நலனுக்கு பலியிட்டுவிடுமோ என்ற ஐயம் இன்று புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. இதனை உறுதி செய்வதுபோல், தேர்தல் முடிவுகள் தொடர்பாக சம்பந்தன் வெளியிட்ட அறிக்கையில் 'ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வொன்றுக்கே மக்கள் வாக்களித்துள்ளார்கள்' எனத் தெரிவித்துள்ளார். அதே தினம் லண்டனில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய சுமந்திரன், சிங்களமக்களுக்கு ஏற்புடைய ஒரு தீர்வையே தாம் வேண்டிநிற்பதாகவும், புலம்பெயர் அமைப்புகள் தீவிரவாதப் போக்கை கைவிட்டு, தம்மைப்போல் மிதவாதப்போக்கிற்கு வரவேண்டும் என்ற சாரப்படி உரையாற்றியதாகவும் சில இணைய தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இவ்வாரம் நான் சுமந்திரனை சந்தித்தபோது, மேற்படி கருத்துகள் தொடர்பாக வினவியிருந்தேன். தனது பேச்சு திரிக்கப்பட்டு வெளியிடப்பட்டதாக வருத்தம் தெரிவித்தார். இருப்பினும், தொடர்ந்த உரையாடலில், சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளை வழங்குவதற்கு விரும்புகிறார்கள் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். அவ்வாறான மனிதர்களாக விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்ற சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கற்ற இடதுசாரிகள் எனக்குறிப்பிடும் சிலரை அவர் பட்டியலிட்டார்.

அவரிடம் பேசிய ஒரு மணி நேரத்தில், ஒன்றை புரிந்து கொள்ள முடிந்தது. இன்று தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தலைமை அவசியமாகத் தேவைப்படுகிறது அது சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலானதாக இருக்க முடியாது.

வடக்குக்கிழக்கில் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியிருப்பதன் மூலம் கிராம, நகர மட்டத்தில் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கூட்டமைப்பிற்கு வாய்ப்பான சூழல் ஏற்பட்டிருக்கிறது. இந்நிலையை பயன்படுத்தி உறுதியான தலைமைத்துவத்தை உருவாக்காவிடில், அவர்களை தமிழ் மக்கள் நம்பியிருப்பது மண்குதிரையை நம்பி ஆற்றில் பயணம் செய்த கதைபோல் ஆகிவிடும்.

**ஒரு பேப்பர்**
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............ 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............ 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House .......... 020 8767 8585
Sharon ............... 020 8672 9353
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Prime Foods........... 020 8682 3777
Ayngaran ............. 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192
Spice way.............. 020 8685 1122

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video............ 020 8664 8351
Spice Land.............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ............ 020 8690 6545
Katpagam .............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ...................... 020 8297 9432

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels .................. 020 8553 0490
Sri Supermarket .....

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil ...... 020 8527 3819
Kumarans ............. 020 7609 1912
Prabas ................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171


**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0635

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Ruby Food Store .... 020 8813 9663
Ruby restaurant...... 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434

# HAPPY DAYS




# LION BEERS HALF PRICE !!

At selected stockists, including:

Grocers

AJ Foods Lewisham. Anglo Asian Wembley. Belmont Supermarket Harrow. Best Food Hounslow. Best Foods South Harrow. Chandra Stores Catford. Ganapathy C/C Wembley. Harran Brothers Croydon. High Street Convenience Store East Ham. KRS Foods Lewisham. Malar Supermarket Wembley. Mega Superstore Tooting. Rayners Wine Harrow. South Harrow Food & Wine Harrow. Sharon Tooting. Stop & Go East Ham. VVN Sons Southall.

Restaurants

Gana Cafe Harrow. Gana Cafe Wembley. Hop & Spice Balham. Hopper Hut Wembley. Jaffna House Tooting. Palm Beach Wembley. Palm Palace Southall. Papaya Ealing. Papaya Harrow. Prince of Ceylon Hendon. Sambal Kitchen & Diner Harrow. Sarasas Rest. Southall. Serendip Indo Sutton. Spicy Island New Malden. Spicy Palace Southall. Watch Me Rest Wimbledon. Yaal Rest. East Ham.

Check with individual outlets for promotion dates or phone the promotion hotline: 0208 795 5224

# இனப்படுகொலையும் சாட்சிகளும்



நாம் ஆயிரக்கணக்கான தமிழர்களும் போராளிகளும் சுற்றிவளைக்கப்பட்டிருந்ததும் இறுதியுமான சிறிய நிலப்பரப்பைக் கைப்பற்றுமுன்னர், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவின் கட்டளைக்கு அமைய 58 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சவீந்திர சில்வா தனக்குக் கீழிருந்த படையினரை ஒன்றுதிரட்டி, இந்தக் கட்டளையைப் பணித்ததாகவும், அதன் போது கைதிகளாக எவரையும் ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று கட்டளையிட்டதாகவும் இந்தப் படைப்பிரிவில் பணியாற்றிய ராணுவ அதிகாரியொருவர் சனல் 4 தொலைக்காட்சிக்குச் சாட்சியமளித்திருக்கிறார். சவீந்திரசில்வாவின் கீழ் அப்போது பணியாற்றிய இந்த அதிகாரியின் சாட்சியத்துக்கமைய கைதிகள் எல்லோரையும் கொல்லும்படியான உத்தரவு கோத்தபாயவினால் அனைத்துப் படைப்பிரிவுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இது இவ்வாறிருக்க இதே படைப்பிரிவில் கடமையாற்றிய முன்னணிப் படைவீரன் ஒருவனின் சாட்சியத்தின்படி, இறுதி நாட்களில் நடந்த கூட்டுப்படுகொலைகள், கூட்டுப் பாலியல் வண்புணர்வுகள், சித்திரவதைகள், மிருகத்தனமான அங்க அவயக்குதறல்கள் ஆகியவற்றினூடாக படுகொலைசெய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கொலைக் காட்சிகள் வெளிக்கொண்ரப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் நடைபெற்ற இனக்கொலை பற்றி தொடர்ச்சியாக ஆராய்ந்துவரும் சனல் 4 தொலைக்காட்சி கடந்த புதன்கிழமை ஒளிபரப்பின்போது 58 ஆம் படைப்பிரிவின் அதிகாரி மற்றும் ராணுவ வீரரின் சாட்சியங்களைப் பதிவுசெய்திருக்கிறது. சாட்சியங்களின் பாதுகாப்புக் கருதி அவர்களின் உண்மையான பெயர்கள் மறைக்கப்பட்டிருந்தன.

மே 15, 2009 இல் இறுதியான தாக்குதலை ஒருங்குசெய்யுமுன்னர் பிரிகேடியர் சவீந்திர சில்வா தனது படையினரை ஒன்றுதிரட்டிச் சொன்ன செய்தி இதுதான், "இன்று எம்மைப் பொறுத்தவரையில் மிகவும் தீர்க்கமான நாள், ஏனென்றால் நேற்றிரவு பாதுகாப்புச் செயலாளரிடமிருந்து எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. இன்னுமொரு சிறிய நிலப்பரப்பு மட்டுமே எம்மால் கைப்பற்றப்பட வேண்டி இருப்பதாக என்னிடம் அவர் கூறினார். அதைக்கைப்பற்றுவதற்கு உங்களால் என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்யுங்கள். இறுதி முடிவு எப்படியாக அமைய வேண்டுமோ அவ்வாறே நீங்கள் செய்யுங்கள்''

அந்த அதிகாரிமேலும் கூறியதாவது:"எங்களுக்கு மேலிடத்திலிருந்து சரணடைந்தவர்களைச் சுட்டுக்கொல்லும்படி கட்டளை வந்தது. எல்லாப் படைப்பிர்வுகளுக்கு இதே கட்டளை உத்தியோகப்பற்றற்ற முறையில் கிடைத்திருந்தது' புலிகளியக்கத்தின் அரசியல்துறைபொறுப்பாளர் நடேசன், புலித்தேவன், அவர்களது குடும்பங்கள், மற்றும் பல நூற்றுக்கணக்கான போராளிகள் சரணடைந்த நிகழ்வு இதற்கு அடுத்த நாள் நடைபெற்றது. இந்த சரணடைதல் நிகழ்வை ஒழுங்குசெய்திருந்த சில வெளிநாட்டு அதிகாரிகளையும் சனல் 4 பேட்டி கண்டிருந்தது. அவர்களின் சாட்சியத்தின்படி இந்தச் சரணடைதல் நிகழ்வு மகிந்தவினூடாக அவரது அனுமதியுடனேயே அரங்கேற்றப்பட்டிருந்தது. ஆனால் சரணடைந்த அனைவரையுமே சிங்கள ராணுவம் கொன்று தள்ளியது.

அந்த அதிகாரியின் சாட்சியத்தின்படி, கோத்தபாயவிடமிருந்து வந்த இன்னொரு தொலைபேசிக் கட்டளைக்கமைய சரணடைந்த அனைவரும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தப் படுகொலை நடைபெற்ற பின்னர் தான் எடுத்த புகைப்படங்களையும் அந்த அதிகாரி சனல் 4 இற்குக் கொடுத்துள்ளார்.

சனல் 4 இன் ரெண்டாவது சாட்சி, இறுதி நாட்களில் 58 ஆம் படைப்பிரிவில் கடமையாற்றிய முன்னிலைப் படைவீரராகும். "உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்போல இருக்கிறதோ அதைச் செய்து அலுவலை முடியுங்கள்'' என்று கோத்தபாய கூறியது தங்களைப் பொறுத்தவரை படுகொலை செய்வதற்கான அனுமதிப் பத்திரமாகவே உணரப்பட்டதாக அந்தப் படைவீரர் கூறினார்.

பாரியளவிலான படுகொலை ஒன்றுக்கு இது அத்திவாரமிட்டது. பெருந்தொகையான சிறுவர்கள் குழந்தைகள் உற்பட பல்லாயிரக்கணகான பொதுமக்கள் ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். பல பெண்கள் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்பட்டதுடன் அவர்களின் உடல் அவயங்கள் கொடூரமாக வெட்டிக் குதறப்பட்டன, இவற்றுள் பல சிறுவர்களும் அடங்கும்.

சனல் 4 இனால் பெர்ணான்டோ என்று பெயரிடப்பட்ட இந்த படைவீரர் தான் கண்ட இறுதிநாட்களின் கொடூரத்தை இவ்வாறு வர்ணித்தார்: 'இதை வெளியிலிருந்து பார்க்கும்போது அவர்கள் மிகவும் கொடூரமான விலங்குகளாகவே செயற்பட்டனர். அவர்களின் இதயங்கள் கொடூர மிருகங்களினதைப்போல் எந்தவித ஈவு இரக்கமுமின்றி அவர்கள் வேட்டையில் ஈடுபட்டனர்'

'அவர்கள் சகட்டுமேணிக்கு மக்களைச் சுட்டுத் தள்ளினார்கள், கத்தியால் குத்திக் கொலை செய்தார்கள், கூட்டாகப் பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டார்கள், ஓலமிட்ட மக்களின் நாக்குகளை அறுத்தெறிந்தார்கள், வண்புனர்வுள்ளாகிய பின் பெண்களின் மார்பகங்களை அறுத்தெறிந்தார்கள். இவையெல்லாவற்ரையும் நான் எனது கண்களால் பார்த்தேன். நூற்றுக்கணக்கான சிறுவர்களின் உடல்கள் அந்தப் பிரதேசமெங்கும் சிதறிக்கிடப்பதையும் கண்டேன்'. 'பெருந்தொகையான அப்பாவிச் சிறுவர்கள் கூட்டாகப் படுகொலை செய்யப்படுவதைக் கண்டேன், பெரியவர்களையும் அவர்கள் விட்டுவைக்கவில்லை'.

'கடல்நீரேரியைக் கடக்க முற்பட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மீது அவர்கள் கடுமையாகத் தாக்குதல் நடத்துவதைக் கண்டேன். அவர்கள் புலிகளல்ல, சாதாரண பொது மக்கள். பெண்களும், குழந்தைகளுமாக இவ்வாறு நீரேரியைக் கடக்க முற்பட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களை ராணுவ வீரர்கள் சுட்டுக் கொல்வதை என் கண்களால் பார்த்தேன்'.

'நான் ஒரு தாயையும் அவளது மூன்று பிள்ளைகளையும் பார்த்தேன். அவர்களை நாங்கள் பொறுப்பெடுக்க முற்பட்ட போது ஒரு ராணுவ வீரர் அந்தப் பிள்ளைகளில் ஒன்றைச் சுட்டார். அந்தப் பிள்ளைக்குக் காலில் காயம் ஏற்பட்டது. கீழே விழுந்த அந்தப் பிள்ளையை நான் எனது கைகளால் தூக்கிக் கொண்டேன். அந்தத்தாய் தொடர்ந்து கதறியபடி இருந்தாள்'.

'காயப்பட்டவர்களுக்குக் கூட அவர்கள் கருணை காட்டவில்லை. ஒருநாள் வைத்தியசாலை ஒன்றிற்குச் சென்ற நான், அங்கே காயப்பட்டு படுத்திருந்த ஒரு பெண்ணை ஆறு ராணுவ வீரர்கள் சேர்ந்து கூட்டாகப் பாலியல் வல்லுறவு புரிவதை கண்டேன்'. எந்தக் கட்டுப்பாடுமற்ற விதத்தில் ராணுவவீரர்கள் தமக்கு விரும்பியதைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்று அந்த ராணுவ வீரர் சனல் 4 இடம் கூறினார்.

'யாராவது ஒரு தமிழ்ப்பெண்ணை பாலியல் வல்லுறவு செய்ய வேண்டுமென்றால் அவளை அடித்துத் துன்புறுத்தி அவர்கள் பாலியல் வல்லுறவில் ஈடுபட்டார்கள். அவளது பெற்றொர்கள் அதைத் தடுக்க முற்பட்டபோது அவர்களை அடித்தே கொன்றார்கள். அது அவர்களின் ராட்சியமாக அவர்களுக்குத் தெரிந்தது' 'யுத்தகளத்திலிருந்த படைவீரரகளைப் பொறுத்தவரை அவர்களின் இதயங்கள் கல்லாக மாறியிருந்தன. ரத்தத்தையும், படுகொலைகளையும், மரணங்களையும் தொடர்ச்சியாகப் பார்க்கப் பழகிவிட்ட அவர்களுக்கு மனிதநேயம் என்பது துளியளவும் இருக்கவில்லை. அவர்கள் ஒரு கட்டத்தில் இரத்தக் காட்டேரிகளாகவே மாறியிருந்தனர்'.

இந்த மிருக் குணங்களே அவர்கள் கொடூர சித்திரவ்தைகளைப் புரியவும், பொதுமக்களை உயிருடன் துண்டு துண்டுகளாக வெட்டி எறியவும் காரணமாக அமைந்தது என்று அந்தப் படை வீரர் சனல் 4 இடம் மேலும் கூறினார். 'பெருந்தொகையான நிர்வாணமாக்கப்பட்டுத் தலை துண்டிக்கப்பட்ட பெண்களின் உடல்களைக் கண்டேன். அந்த உடல்களில் இன்னும் பல உறுப்புகளும் வெட்டி அகற்றப்பட்டிருந்தன'.

'கொல்லப்பட்ட ஒரு தாயையும் அவளது கைக்குழந்தையையும் கண்டேன். அந்தக் குழந்தையின் உடலில் தலையைக் காண வில்லை'. 'பெருந்தொகையான குழந்தைகளும், பெண்களும் ஆண்களும் போரின் இறுதிக் கட்டத்தில் படுகொலை செய்யப்பட்டனர். பெருந்தொகை என்று நான் சொல்லும்போது, புதுமாத்தளன் பகுதியில் மாத்திரம் குறைந்தது 1500 உடல்களை நான் கண்டேன்'. 'ஆனால் அவர்களால் கொல்லப்பட்ட பொதுமக்கள் எல்லோரையும் உடனடியாகப் புதைக்க முடியவில்லை. அவர்கள் என்ன செய்தார்களென்றால், கொல்லப்பட்ட உடல்கள் எல்லாவற்றையும் பரவி விட்டு புல்டோசர் கொ்ண்டு மண்ணினால் மூடினார்கள். அதைப் பார்க்கும்போது ஒரு மண் அணையைப் போல இருந்தது'.

'புதுமாத்தளன் பகுதியில் மட்டுமே நான் 1500 உடல்களைப் பார்த்தேன். ஆனால் எல்லா இடங்களிலுமாகச் சேர்த்து குறைந்தது அவ்வாறான 50,000 உடல்களைப் பார்த்தேன்'.

இந்த எண்ணிக்கை சரியானதுதானா என்று சனல் 4 கேள்வி கேட்டபோது, 'இறுதிப் போரின்போது புதுமாத்தளன் பகுதியில் நான் கண்டதெல்லாம் கொல்லப்பட்ட மக்களின் உடல்களை மட்டும்தான். அந்தப் பகுதியில் நான் நுழைந்தபோது அந்தப் பகுதியெங்கும் உடல்களால் நிரம்பியிருந்தது'.

'தம்மால் படுகொலைசெய்யப்பட்ட பொது மக்களின் உடல்களை உடனடியாக அகற்ற வேண்டிய தேவை அவர்களுக்கிருந்தது. அதற்காகவே அந்த பாரிய புல்டோசரைக் கொண்டு வந்திருந்தனர். அவர்கள் செய்ததெல்லாம் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான உடல்கள் மீது மண்ணை அள்ளிக் கொட்டியதுதான். சில இடங்களுக்கு என்னால் போகக் கூட முடியவில்லை, அந்தத் தேசமெங்கும் பழுதடைந்த உடல்களின் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது'.

"அவர்கள் அனைவரும் சாதாரண பொது மக்கள், அவர்கள் போரிடும் எந்தப் பகுதியையும் சார்ந்தவர்களல்ல".

*நன்றி தமிழ்நெட்.*

# ஜோக்ஸ்...

*அமெரிக்காவில் திருடனை கண்டுபிடிக்கிற மெஷின் கண்டுபிடித்து இருக்கிறார்களாம்.*

*அந்த மெஷின் இங்கிலாந்துல 30 நிமிஷத்துல 70 திருடர்களை கண்டுபிடிச்சுருக்கு.*
*பிரான்ஸில் 30 நிமிஷத்துல 100 திருடர்களை கண்டுபிடிச்சுருக்கு.*
*இந்தியாவில் 15 நிமிஷத்துல அந்த மெஷினையே காணோம்!!*
*நாமெல்லாம் யாரு..??*

---

**Man** *1 : என்னங்க உங்க வீட்டுல எப்பவும் சிரிப்பு சத்தமா கேட்டுக் கிட்டே இருக்குது?*
**Man** *2 : எம் பொண்டாட்டி எம் மேல ஏதாவது பாத்திரத்த தூக்கி வீசுவா ...எம் மேல பட்டா அவ சிரிப்பா... படாட்டா நான் சிரிப்பேன் .... ஒரே டமாசுதான் போங்க...*

---

*தாத்தா......குளிர்காத்து பலமா இருக்கு.*
*காதுல பஞ்சு வச்சுக்க...!!*
*ஏண்டா வைக்கலேன்னா?*
*நாங்க உன் மூக்குல பஞ்ச வைக்க வேண்டியது ஆகிடும்!*

---

*உனக்கு ஏது 50 ரூபாய்?'*
*ஓர் இடத்தில பாடினேன். 20 ரூபாய் கொடுத்தாங்க''*
*மீதி 30 ரூபாய்?''பீ*
*பாடுறதை நிறுத்துறதுக்குக் கொடுத்தாங்க''*

---

*அப்பா: உனக்கு எப்படிப் பட்ட பொண்ணு பார்க்கிறது?*
*மகன்: நிலா மாதிரி!*
*அப்பா: நிலா மாதிரின்னா?*
*மகன்: தினமும் ராத்திரி வரணும்! காலையில போயரனும்!!*

---






# On the Record

சுகி
(ஒருபேப்பருக்காக)

கடந்த வாரம் Sri Lanka Campaign for peace & Justice என்ற நிறுவனத்தால் Arcola தியேட்டரில் 'ஒன் த ரெக்கோட்' (On the Record) என்ற அரங்க நிகழ்வு நிகழ்தேறியது. முதல் நாள் benefit show வுக்காகவும் பின்பு தொடர்ச்சியாக சாதாரண காட்சியாகவும் காண்பிக்கப்பட்டு வருகிறது. இதில் ஆறு ஊடகவியலாளர்களின் வாழ்க்கையில் நடந்த உண்மை நிகழ்வுகள் தத்துருபமாகக் காட்டப்படுகின்றன. ஊடகத்துறையில் இணைந்து உண்மை நிலையினை வெளி உலகிற்கு கொண்டுவர அவர்கள் படும் துன்பமும், உயிர் அச்சுறுத்தல்களும், அவர்களின் குடுப்பங்கள் படும் துயரமும், மிகத் துல்லியமாகவும் நாசூக்காகவும் பார்பவர்களுக்கு புரியும் வகையில் எடுத்துச்சொல்லப்படுகிறது.

இதில் சிறீலங்காவின் ஊடகத்துறையில் இருந்த சகோதரர்கள் லால் விக்கிரமதுங்கவும் (Lal Wickrematunge), லசந்த விக்கிரமதுங்கவின் (Ladantha Wickrematunga) கதையும், இலங்கை ஊடகத்துறையில் மற்ற ஊடகவியலாளர்கள் எழுதப்பயப்படும் விடயங்களை தைரியமாக எழுதியதால், விலையாக கொடுக்க நேர்ந்த லசந்தாவின் உயிரையும், தொடர்ந்து அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களும் கதையின் ஒரு அத்தியாயமாகவும், இன்னெரு அத்தியாயமாக மெக்சிக்கோ ஊடகவியலாளரான லிடியா காசோ (Lydua Cacho) அங்குள்ள உயர் மட்ட அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட, சிறுவர்களை பாலியல்வதைக்கு உள்ளாக்கி படம் எடுக்கும் செய்தியை வெளிக்கொணர்ந்தால், அனுபவிக்கும் கொலை அச்சுறுத்தல்கள், ஆட்கடத்தல், பெண்ணாக இருந்து அனுபவிக்கும் அவமானங்கள் சித்தரிக்கப்படுகின்றன. இவரின் முப்பதாவது வயதில் சிறுவர்களின் பாலியல் வதைபற்றிய ஒரு புத்தகம் Los Demonios del Edén (Demons of Eden) யை எழுதியதற்காக சிறைக்குத்தள்ளப்படுகின்றா?. அங்கு அவரின் மௌனிப்பை வேண்டி இரகசிய தொடர் சித்திரைவகைகள் மேல்மட்ட அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தும் அவர் தனது உயிரை துச்சமாக மதித்து தொடர்ந்தும் குரல் கொடுத்ததால், உண்மை வெளிக்கொணரப்பட்டது. அதற்காக அவருக்கு பல பட்டங்கள், பாராட்டுக்கள் உட்பட 'துணிகரமான ஊடகவியலாளர்' என்ற பட்டம் சர்வதேச பெண்களுக்கான ஊடகவியலாளர் நிறுவனத்தினால் கொடுக்கப்பட்டது. அடுத்ததாக எலெனா Elena Kostyuchenko என்ற பெண் ஊடகவியலாளர் மொஸ்கோ நகரத்தில் காவல் படைக்கும் மேபியா (Mafia) கும்பலுக்குமிடையே உள்ள தொடர்பை சித்தரித்தற்காக, அவரும் அவருடைய குடும்பத்தினருக்கும் தொடர்ச்சியான அச்சுறுத்தலுக்கு உள்ளாகுகிறார்கள்.

மற்றும் அமிரா காஸ் (Amira Hass) இவர் ஒரு இடதுசாரி இஸ்ரேலிய ஊடவியலாளர் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு பகுதிகளுக்கு நடுவில் இருந்து பணிபுரிகிறார். உண்மையில் இவர்தான் ஒரே ஒரு யூத, இஸ்ரேலிய ஊடகவியலாளர் முதல் முதலில் பலஸ்தீனியர்களின் நடுவில், காசா (Gaza) பகுதியில் முழுநேர ஊடவியலாளராகப் பணிபுரிகிறார்.

இதற்காக இஸ்ரேலிய அரசினால் இவருக்கு கிடைக்கும் நெருகடிகள் பல. இறுதியாக படப்பிடிப்பு ஊடகவியலரான சோரியா மில்லர் Zoriah Miller ஈராக்போரின் போது தற்கொலைதாரிகளால் நடந்த குண்டு வெடிப்பில், அமெரிக்க படைகளின் இழப்பைப் படம்பிடித்து, அதைவெளியிட்டபோது அவருக்கு அமெரிக்க இராணுவ செய்தித் தணிக்கை பிரிவினால் வரும் பயமுறுத்தல்களும், அவரின் வேலை உடன்படிக்கையில் இருப்பதற்கு மாறாக அவரை மௌனிக்கும்படி வற்புறுத்துவதும், சான்றுகளை அழிக்கும்படி அச்சுறுத்துவதையும்ம் காட்டப்படுகிறது.

இங்கு Lal Wickrematunge க்காக Paul Bhattacharjee வும், Lasantha Wickrematunga க்காக Selva Rasalingam மும், Lydua Cacho வுக்காக Nathalie Armin மும், Elena Kostyuchenko க்காக Michelle Bonnard டும், Amira Hass க்காக Kika Markham மும், Zoriah Miller க்காக Trevor White ம் நடித்துள்ளார்கள். இவர்கள் பல மேடைநிகழ்வுகளிலும், தொலைகாட்சி நிகழ்வுகளிலும், திரைப்படங்களிலும் நடித்து மிகவும் அத்துறையில் அறியபட்டவர்கள். மிக இயல்பாகவே தமக்குத்தரப்பட்ட பாத்திரத்தோடு ஒன்றி நடிக்கிறார்கள்.

Christine Bacon ஆலும் Noah Birksted-Breen இனாலும் எழுதப்பட்டு Michael Longhurst னால் தயாரிக்கப்பட்ட ஒன் த ரெக்கோட்டில் இருந்து நாம் படிக்கப்பட வேண்டியவை அதிகம் அதிகாரத்தை துப்பிரயோகம் செய்யும் சிறீலங்கா போன்ற அரசுகளினால் எவ்வளவோ ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டு வந்துள்ளா?. அவர்களின் கொலைகள் அரசினால் மறுக்கப்பட்டும், அதற்குரிய ஆதாரங்கள் புதைக்கப்பட்டும், இன்றுவரை கேள்விக்குறியாக இருக்கின்றன. 1992 ம் ஆண்டில் இருந்து 868 செய்தியாளர்கள் அவர்களின் வேலைகாரணமாக இறந்துள்ளார் என ஊடகவியலாளருக்கான பாதுகாப்பு சபை சொல்கிறது.


இதில் 600 பேர் அளவில் அவர்களின் பிரசுரமான செய்திகளுக்காகவோ, படங்களுக்காகவோ கொல்லப்பட்டு, அவர்களை கொலை செய்தவர்களும், துல்லியமாக அடையாளம் காணப்பட்டும், தண்டனைக்கு உட்படாது தப்பிப்போகவிடப்பட்டுள்ளார்கள். இந்த வருட முற்பகுதியில் மட்டும் 22 செய்தியாளர்கள் Tunisia, Libya, Bahrain, Yemen பகுதிகள் உள்ளிட்டு கொல்லப்பட்டுள்ளார்கள்.

தமிழர்கள் நாமும் எமது சர்வதேச ஊடகவியலாளர் சங்கத்தை பலப்படுத்தி, அதன் மூலம் எமது பாதிக்கப்படும், தாக்கப்படும் ஊடவியலாளருக்காக குரல் கொடுப்பதோடு, அநியாயமாக கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் பணியையும் தொடரவேண்டும். அத்தோடு பிற நாடுகளிலும், சிறீலங்காவிலும் மனித உரிமைக்காகவும், ஊடகச்சுகந்திரத்திற்காகவும் குரல் கொடுப்பவரோடு இணைந்து எமது குரலை வெளிக்கொணரவேண்டும்.

ஒன் த ரெக்கோட்டில் மிகத்தெளிவாக ஊடகச் சுகந்திரம் மறுக்கப்படுவது லசந்தாவின் கொலை மூலமாக நிரூபிக்கப்படுகிறது. அத்தோடு சிங்கள ஊடகவியலாளர்களுக்கே இந்த நிலைமை என்றால் தமிழ் ஊடகவியலாளர்களின் நிலை சொல்லாமலே ஊகிக்கக் கூடியதாக உள்ளது. நிகழ்வு நகரும்போது May 2009 இல் அநியாயமாக இனப்படுகொலை செய்யப்பட்ட 40,000 க்கு மேற்பட்ட தமிழர்கள் பற்றியும் குறிப்பிடப்படுகிறது. மிக எளிமையாக, குறைந்த செலவில் ஆறு ஊடகவியலாளர்களின் கதையையும், ஒன்றோடு ஒன்று பின்னி, ஒரே நேரத்தில் ஐந்து கதையையும், ஆறு பேர்களும், மாறி மாறி, வேறு வேறு பாத்திரங்களில் உங்கள் கண்முன்னாலேயே தெருகூத்து பார்ப்பது போல, திரை இழுப்பு இன்றி, சிறந்த ஒளி, ஒலி அமைப்புடன் காட்சிப்படுத்துகிறார்கள். அற்புதமாக தயாரிப்பபுத்திறன், பார்வையாளர்களில் எல்லா இனமக்களையும் காணக் கூடியதாக இருந்தது. எமது ஜோஜ் அழகையா (BBC) கூட துணைவியுடன் வந்திருந்தார்.

இதே போல இங்குள்ள, அரங்க நிகழ்வில் கைதேர்ந்த, பிரபலமான எமது தமிழ்க் கலைஞர்களும் எமக்கு நடந்த, இன்னும் நடந்து கொண்டிருக்கும் மனிதஉரிமை மீறல்களை வெளிநாட்டவர்களுக்கு கொண்டு போவற்கு எமது கலையை ஒரு ஊடகமாக பயன்படுத்தவேண்டும். தமிழர்களின் கலைபண்பாட்டு பணி தொடரவேண்டும்.

இதே போல இங்குள்ள, அரங்க நிகழ்வில் கைதேர்ந்த, பிரபலமான எமது தமிழ்க்கலைஞர்களும் எமக்கு நடந்த, இன்னும் நடந்து கொண்டிருக்கும் மனிதஉரிமை மீறல்களை கலை வடிவங்களினூடாக வெளிப்படுத்துவதற்கு முன்வர வேண்டும். தமிழர்களின் கலைபண்டாட்டு பணி தொடரவேண்டும் என்றால் இத்தகைய முயற்சிகள் அவசியமானவை. இப்போதும் கோலாட்டம், கண்ணன் பாட்டு, மயிலாட்டம், பாம்பாட்டம் என்று, எதைச் செய்தாலும், அது காலத்தின் கண்ணாடி போல எம்க்குரிய பிரச்சனைகளையும், இன்றைய நிலைமையையும் வெளி உலகிற்கு காட்டுவதாக இருக்கவேண்டும். காலத்தை ஒட்டியதாக இருந்தால்தான் கலை வளரும், அடுத்த சந்ததியையும் உள்வாங்கும். எந்தக்காரியத்திற்கும், ஒரு காரணம் இருக்க வேண்டும். அந்தக்காரணம் தமிழரின் வாழ்வை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்.






# அடங்கிப்போனது அடங்காப்பற்றின் மூச்சு



வ.கணேஸ்
(ஒருபேப்பருக்காக)

இலங்கையின் தமிழீழ எல்லைக்குள் பாரிய நிலப் பரப்பை கொண்ட வன்னிக்குள் மேற்குலக ஆக்கிரமிப்பாளர்கள் காலத்திலேயே அவர்களுக்கு அடிபணியாது கப்பம் செலுத்தாது அடங்காப்பற்று என்று அதே மேற்குலத்தாராலேயே அழைக்கப்பட்ட வன்னியில் அதேயிடத்து இறுதிமன்னன் பண்டாரவன்னியன் கூட ஆங்கிலேயரின் எண்ணற்ற தலைகளை பந்தாடி தான் இருக்கும்வரை அந்த மக்களையும் அடிமைப்படுத்தாது அவனும் அடிமைப்படாது இறுதிவரை களமாடி வீரப்பலியானான்.

பின்னர் ஆங்கிலேயரின் முழுமையான ஆட்சியின் கீழும் வன்னியர்கள் பெருமளவில் ஆங்கில ஏகாபத்திய உறவுகளை ஒருபோதும் மதித்ததில்லை. அவர்களது சலுகைகளான ஆங்கிலப்பாடசாலை, உத்தியோகங்கள், கப்பம் கட்டுதலில் தளர்வு, வரிகள், மலேசியாவிற்கு ஆட்களை அனுப்பிவைத்தல் போன்ற எதனையுமே இந்த வன்னி மக்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதேயில்லை.

இறுதியில் இந்திய ஆக்கிரமிப்பாளரின் எண்ணற்ற அடாவடித்தனங்கள், சித்திரவதைகள், கற்பழிப்பகளுக்கு மத்தியிலும் ஈழப்போராளிகளை காப்பாற்றுவதிலும் களமாடுவதிலும் ஈடுபட்டார்களே தவிர சுயநலத்திற்காக தமிழையும் தமிழரையும்யாரும் அந்த மண்ணில் விற்றுவிட துணிந்ததில்லை.

இப்படியான வரலாறுகளை வீரத்தோடு எழுதிவைத்த அந்த மக்களண் இன்று சிங்களத்தின் திறந்த வெளி சிறைகளாக்கப்பட்டு அடுத்த ஊருக்கே அவலங்கள் தெரியாது சித்திரவதைப்படுகின்றனர்.

இன்று அந்த அழகான வன்னியில் அரச மரங்களோ அதிகம். ஆனாலும் அன்று மக்களுக்கு நிழல்களாக இருந்தன. இன்றோ அந்த மக்களே அண்டாதபடி புத்தர் சிலைகள் அமைக்கப்பட்டு அவ்விடத்தில் ஆமுத்துறுக்களையும் குடியமர்த்தி சந்திக்கு சந்தி சிங்களக் குரல்களும் ஆமிக்கடவைகளும் திரும்பும் இடமெல்லாம் புத்தர்தான் நிர்வாணம் மறைக்கவோ என்னவோ இரண்டு கைகளாலும் பொத்திப்பிடித்தபடி காட்சிகொடுக்க அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் அந்த மக்கள்.

வன்னியில் ஒவ்வொரு ஊர்களுக்கிடையில் நீண்ட பெரிய காடுகளோ வயல் நிலங்களோ பரந்து விரிந்து இருக்கும். ஆக ஒரு ஊரை விட்டு மற்றைய இடத்துக்கு பெண்கள் யாராவது போவதை இராணுவம் கண்டால் அந்த பெண்ணின் கதி அவ்வளவுதான் இந்த கொடுமைகள் வெளி உலகுக்குத்தெரிவதில்லை.

இறுதி யுத்தத்தில் சரணடைந்த அல்லது இராணுவத்தால் பிடித்து செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான இளம்பெண்களை இராணுவமுகாம்களுக்குள் வைத்து தென்னிலங்கையில் இருந்து வரும் இளைஞர்களுக்கும் விபச்சார விடுதிகளுக்கும் இவர்களை விலைபேசி விபச்சாரம் செய்ய வைக்கிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக் கண்ணகை அம்மனை குல தெய்வமாக வழிபட்டு களங்கமில்லாமல் கிராம வாழ்வை வாழ்ந்த அந்தப்பெண்களை வைத்து சிங்கள இராணுவம் இன்று செய்கின்ற அட்டூழியங்கள் எக்கச்சக்கமானவை.

கொழும்பைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவில் கல்விகற்று வருபவருமான எனது நண்பர் ஒருவர் அண்மையில் இலங்கைக்குப் போயிருந்தார். அப்போது அவருடன் கொழும்பில் கல்வி கற்ற நண்பரோடு முல்லைத்தீவு பகுதிகளுக்கு போயிருந்தார். அந்த அமைச்சரின் மகன் இவரை சில இராணுவ முகாம்களுக்கும் அழைத்துப் போயிருந்தார். கிளிநொச்சியில் ஒரு முகாமிலும் முல்லைத்தீவில் ஒரு முகாமிலும் நூற்றுக்கணக்கான இளம்பெண்களை சிலகட்டத்தொகுதியில் குழுக்களாக இருந்ததைக்கண்டு விசாரித்ததில் தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்கள இளைஞர்களுக்கு மணிக்கு 20 ரூபா அல்லது 25 ரூபாவிற்கு விலைபேசி ஏலம் விடப்படுவதாக சொன்னாராம் அந்த நண்பர்.

கேவலம் ஒரு தேனீரின் விலைகூட இல்லை இந்த தமிழ் பெண்களின் கற்புக்கு. அந்த அளவிற்கு சிங்கள மேலாதிக்கம் தமிழனைக் கேவலப்படுத்துகிறது. நண்பரின் கூற்றுப்படி அத்தனை பெண்களும் அழகானவர்கள் மட்டுமல்ல இருபது வயதுக்கு குறைவானவர்களாகத்தான் தெரிந்தார்களாம். இதைவிட பரிதாபதம் என்னவென்றால் இவர்கள் அனைவரும் காணாமல்போனவர்களின் பெயர்களில் சேர்க்கப்பட்டு கூடுதலானவர்களுக்கு மரணச்சான்றிதழ்களும் வளங்கப்பட்டுவிட்டது.

வன்னிக்குள் வருகின்ற சிங்களவர்கள் நேராக புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால் பகுதிகளுக்குத்தான் செல்கிறார்கள். கேப்பார்புலவு முல்லைத்தீவுப் பகுதிகளில் இராணுவத்தால் அமைக்கப்பட்டிருக்கும் சுற்றலா விடுதிகளைத்தவிர வட்டுவாகல், முள்ளிவாய்க்கால் கரையோரங்களிலும் சுற்றுலா மையங்களை அமைத்துள்ளனர். இவைகள் சிங்களவர்களுக்கு மட்டும்தான். பரந்தன், முல்லைத்தீவுப்பகுதியில் சிங்களவர்களைத்தவிர வேறு யாரும் பயணிக்கமுடியாது.

ஆக பரந்தன் உடையார்கட்டு ஊடாக முல்லை நகரப் பகுதியை அண்டிய வட்டுவாகல் பாலம் பரையான அண்ணளவாக நாற்பத்திஐந்து மைல்கள் தூரத்திற்குள் இருக்கின்ற எண்ணற்ற இராணுவ முகாம்களுக்குள் எத்தனை இளம் தமிழ்ப்பெண்களின் கற்புக்கள் கதறக்கதற வெறும் ஐந்துக்கும் பத்துக்கும் சிங்கள பிணம் தின்னிகளால் பிய்த்தெறியப்படுகின்றதோ யார் கண்டார்கள்.

இதைவிடவும் வன்னியிலுள்ள மிகப்பெறுமதிவாய்ந்த மரங்களான தேக்கு, முதிரை, கருங்காலி, வேம்பு, சமன்டலை போன்ற மரங்களெல்லாம் பெரும்தொகையாக நாளாந்தம் சிங்கள இராணுவத்தின் உதவியுடன் அறுத்தெடுத்து தென்னிலங்கைக்கு கனரக வாகனங்களில் ஏற்றிக்கொண்டே இருக்கிறார்கள்.

வன்னி தவிர்ந்த வடக்கு, கிழக்கு பகுதிகளில் கூடுதலாக ஏதாவது கொடுமைகள் நடந்தால் அது பொதுமக்கள் வாயிலாகவோ அல்லது ஊடகங்களாலோ வெளியில் கசிந்துவிடும்.

ஆனால் வன்னியில் இந்து வாய்ப்புக்கள் அரிதாகவே காணப்படுவதால் அங்கே முகாமிட்டுள்ள இராணுவத்தினருக்கும் வன்னி வளங்களை சூறையாடும் சிங்கள முதலாளிமாருக்கும் பெரும் வாய்ப்பாகப் போய் விட்டது.

ஓரிரு ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு வீடு இருக்கும். இராணுவம் வந்து அராஜகம் செய்தாலோ அல்லது மக்கள் கூக்குரலிட்டாலோ அடுத்தவர்களுக்கு கேட்காது. ஆக அவன் எதை நினைக்கிறானோ அதை அவன் இன்று வன்னியில் செய்துகொண்டிருக்கிறான்.

முல்லைத்தீவு, கிளிநொச்சிப்பகுதியில் இராணுவம் பெண்களை பலவந்தமாக இராணுவ வாகனங்களில் ஏற்றி அவர்களை மானபங்கப்படுத்திவிட்டு அவர்களிடம் உயிரிருந்தால் இறக்கி விட்டுவிட்டு போய்விடுவார்கள். அந்தப்பெண்கள் நடக்கமுடியாமலோ அல்லது கூக்குரலிட்டாலோ பக்கத்தில் உன்ன கிணறு ஒன்றுக்குள் தூக்கிப்போட்டவிட்டு போய்விடுவார்கள்.

முல்லைத்தீவை அண்டிய சில பகுதிகளில் முகாமிட்டிருக்கும் இராணுவம் பெண்கள் கூட்டம் கூட்டமாக போனாலும் விடுவதில்லை.

இராணுவக்கடவைகளில் அந்தப்பெண்களின் உடைகளை உரியவைத்து அங்க சேட்டைகள் மூலம் உல்லாசம் தேடும் இலங்கையின் எருமை மாட்டு இராணுவம் பல்லுப்போன கிழவியானாலும் பலாத்காரம் செய்யுமளவுக்கு இந்த சிங்கள இராணுவத்துக்கு இன்று இனவிசம் ஏற்றப்பட்டுவிட்டது.

அண்மையில் கூட பத்துவயது மகனுடன் இளம்பெண் கிளிநொச்சிப்பகுதியில் நடைபாதையில் போய்க்கொண்டிருக்கும் போது அப்பெண்ணைப்பிடித்து அவரது மகனுக்கு முன்னாலேயே கதறக்கதற கெடுத்துவிட்டு அப்படியே உயிரோடு அருகிலுள்ள கிணற்றில் போட்டுவிட்டுப்போய்விட்டார்கள்.


ஈழ மண்ணில் இந்த நிலை தொடருமானால் எவ்வளது காலத்துக்கு அந்த மக்களால் தாக்குப்பிடிக்க முடியும் என்பதுதான் இன்றைய கேள்வியாக உள்ளது.

# மிடில்செக்ஸ் தமிழ் அக்கடமியின் ஒன்பதாவது ஆண்டு விழா



கடந்த 16ம் திகதி சனிக்கிழமை மிடில்செக்ஸ் தமிழ்அக்கடமி தனது ஒன்பதாவது ஆண்டு விழாவை கரோ உயர் பாடசாலையில், திரு. திருமதி றெஜி அன்சலம் விளக்கேற்ற, திருமதி. அரவிந்தா ஜனநாயகத்தின் வரவேற்புரையுடன் அரம்பமாகி, பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் திரு. பிரபாகரனின் தொகுப்பில் அரங்கேறி, பின் மாணவர்களுக்கான பரிசில்களுடனும் பெற்றோர்களுக்கான யோகாசன சான்றிதழ் வழங்குதலுடன் நிறைவு பெற்றது.



# அமெரிக்கக் கடன் நெருக்கடி கட்சி அரசியலா? சீனாவிற்கு சிலம்படியா?



**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

நாம் வரவிற்கு மிஞ்சி செலவு செய்தால் கடன் படுவோம். பட்ட கடனை அடைக்க செலவை குறைத்து வரவைக் கூட்ட வேண்டும் அல்லது கடன் பட்டு பட்ட கடனை அடைக்க வேண்டும் அல்லது இரண்டையும் செய்ய வேண்டும். பட்ட கடனை அடைக்காவிடில் மேற் கொண்டு கடன் பெறுவது எமக்கு மிகவும் சிரமமாக அமையும். எமக்கு கடன் தருபவர்கள் அதிக வட்டி அறவிடுவார்கள். இப்படியான ஒரு பிரச்சனையில் அமெரிக்கா இப்போது அகப்பட்டுள்ளது. அமெரிக்க அரசு தொடர்ந்து வரவிற்கு மிஞ்சி செலவு செய்து வந்தது. 1950 இல் இருந்து 1980 வரை கட்டுப்பாட்டுக்குள் இருந்த அமெரிக்க அரசின் கடன் சுமை 1980இற்குப் பின்னர் மோசமாக வளர்ந்து கொண்டே போகின்றது. தற்போது அமெரிக்காவின் வரவு 2.2 ரிறில்லியன் டொலர்கள் செலவு 3.5ரிறில்லியன் டொலர்கள். பாவம் அமெரிக்கா அதற்குக் கடன் கொடுப்பவர்களில் முக்கியமானவர் சீன அரசு. அமெரிக்கா நாளொன்றிற்கு 4பில்லியன் டொலர்களை அதாவது வருடத்திற்கு ஒன்றரை ரிறில்லியன் டொலர்கள் வட்டியாகச் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளது

### அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பு

அமெரிக்க அரசு எவ்வளவு கடன் படலாம் என்பதற்கு என்று ஒரு உச்ச வரம்பு (debt ceiling) உள்ளது. இதை அமெரிக்க பாராளுமன்றத்தின் (காங்கிரசு) இரு அவைகளான மக்களவையும் மூதவையும் முடிவு செய்கின்றன. அமெரிக்காவின் இப்போதைய கடன் உச்ச வரம்பு 14.3ரிறில்லியன் டொலர்கள் (கூ14,300,000,000,000). அமெரிக்காவின் கடன் சுமை அதிகரிப்பதால் இந்த உச்ச வரம்பை உயர்த்த வேண்டும். அதுவும் ஆகஸ்ட் 2-ம் திகதிக்கு முன்னர் இது அமெரிக்க பாராளுமன்ற அவைகளால் ஒரு சட்டமாக அங்கீகரிக்கப் படவேண்டும். இந்த உச்சவரம்பை உயர்த்தி மேலும் கடன் பட்டு கடன் அடைக்க வேண்டும். அல்லாவிடில் அமெரிக்கா தனது கடனுக்கான வட்டிகளைச் செலுத்த முடியாத நிலை ஏற்படும். அமெரிக்கக் கடன் வளரத் தொடங்கியபின் - 19890 இற்குப் பின்- 39தடவை உயர்த்தப் பட்டுள்ளன. றொனால்ட் ரீகன் நிர்வாகத்தில் மட்டும் 17தடவை உயர்த்தப்பட்டன.

### பராக் ஒபாமாவின் இக்கட்டான நிலை.

அமெரிக்க அதிபருக்கு நிர்வாக அதிகாரம் மட்டுமே உண்டு. சட்டவாக்க அதிகாரம் மக்களவையிடமும் மூதவையிடமுமே உண்டு. முதலில் மக்களவையில் சட்ட மூலம் நிறவேற்றப்பட்டு பின்னர் மூதவையில் அங்கீகரிக்கப்பட்டு ஒரு சட்டம் அமுலுக்கு வரும்.தற்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா சனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். மக்களவையில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் பராக் ஒபாமா ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறார். மூதவையில் பராக் ஒபாமாவின் சனநாயகக் கட்சியினர் பெரும்பான்மையினராக இருக்கிறார்கள். 2010இல் நடந்த மக்களவைத் தேர்தலில் குடியரசுக் கட்சியினர் அரச செலவீனங்களைக் குறைப்போம் என்ற வாக்குறுதியுடன் போட்டியிட்டு வெற்றி பெற்றனர்.

### எந்த வழி.

கடன் சுமை அதிகரித்த அமெரிக்கா செய்ய வேண்டியவை:

1. அரச செலவுகளைக் குறைத்தல். இது வறிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும். அரச நலன்புரி சேவைகளுக்கான செலவுகள் குறைக்க வறிய மக்கள் பாதிக்கப்படுவர். கல்வி மற்றும் சுகாதார சேவைகள் பாதிக்கப்படும். பாதுகாப்புச் செலவீனங்கள் குறையும்.

2. வரிகளை அதிகரித்தல். இது அமெரிக்கப் பணக்காரர்களையும் வர்த்தக நிறுவனங்களையும் பாதிக்கும். பொருளாதார வளர்ச்சி குன்றும்.

3. மேலும் கடன் படல். அமெரிக்கா மேலும் கடன் பட கடன் உச்ச வரம்பை உயர்த்த வேண்டும்.

ஒபாமா இந்த மூன்றையும் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்.

அமெரிக்க மக்களவைத் தலைவர் ஜோன் போர்னர் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுடன் 22-07-2011இலன்று கடன் நெருக்கடி பற்றி கலந்துரையாடினார். ஒபாமா செல்வந்தர்கள் மீதான வரியை அதிகரிக்கும் யோசனையை முன் வைத்தபடியால் மக்களவைத் தலைவர் ஜோன் போர்னர் பேச்சு வார்த்தையை முறித்துக் கொண்டு வெளியேறிவிட்டார். வலது சாரியான அவர் வரி அதிகரிப்பை விரும்பவில்லை. ஒபாமா பல சமூக சேவை சுகாதார சேவைச் செலவீனங்களைக் குறைக்க ஒத்துக் கொண்டும் மக்களவைத் தலைவர் ஜோன் போர்னர் பேச்சை முறித்ததைப் பலர் விரும்பவில்லை.

### அமெரிக்கக் கடன் நெருக்கடியின் பின்னணி.

2010இல் ஒபாமாவும் மக்களவையும் அரச செலவீனங்களை மூன்று ரிறில்லியன் டொலர்களால் குறைக்கவும் வரிவருமானத்தை ஒரு ரிறில்லியன் டொலர்களால் அதிகரிக்கவும் ஒத்துக் கொண்டனர். 2011 ஜனவரியில் அறுவர் குழு எனப்படும் இரு கட்சிகளையும் சேர்ந்த ஆறு மூதவை உறுப்பினர்களைக் கொண்ட குழு அமெரிக்காவின் நீண்டகாலக் கடன் சுமையைக் குறைக்க உடன்பட்டது. இக்குழுவிற்கு அமெரிக்க உப அதிபர் பிடென் தலைமை தாங்கியதால் பிடென் குழு என்றும் அழைப்பர்.. 2011இல் குடியரசு உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மக்களவை முந்தைய ஆண்டிலும் பார்க்க 61பில்லியன் டொலர்கள் குறைவான செலவீனங்களைக் கொண்ட பாதிட்டை நிறைவேற்ற அதை ஒரு மாதம் கழித்து சனநாயக கட்சி உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மூதவை நிராகரித்தது. 2011 ஏப்ரலில் அமெரிக்க அரசின் பாதிடு நிறை வேற்றப்படாமல் அரச நிர்வாகம் இழுத்து மூடப்படுமா என்ற நெருக்கடியின் விளிம்பு வரை அமெரிக்கா இட்டுச் செல்லப்பட்டது. இறுதியில் பத்து வருடங்களில் ஆறு ரிறில்லியன் டொலர்கள் செலவீனக் குறைப்புடன் அரச பாதிட்டை மக்களவை நிறைவேற்றியது. 2011 மே மாதம் 9-ம் திகதி அமெரிக்க மக்களவைத் தலைவர் கடன் உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டால் அதே அளவு செலவீனக் குறைப்புச் செய்யப்பட வேண்டும் என்று சூளுரைத்தார். 11-05-2011 மக்களவை கல்வி, தொழில், சுகாதார சேவை போன்றவற்றிற்கான செலவீனக் கட்டுப்பாடுகளை முன்வைத்தது. 16-05-2011 அமெரிக்க அரசு தன் கடன் உச்சவரம்பான 14.3 ரிறில்லியன் டொலர்களை எட்டியது. 17-05-2011 அறுவர் குழுவிற்குள்(பிடென் குழு) முரண்பாடுகள் தோன்றின. 31-05-2011 இலன்று அமெரிக்க மக்களவையில் கடன் உச்சவரம்பை உயர்த்தும் பிரேரணை தோற்கடிக்கப்பட்டது. 23-06-2011 சனநாயகக் கட்சியினர் வரி விதிப்பை 400பில்லியன்களால் அதிகரிக்கப் பார்க்கிறார்கள் என்று குறை கூறி மீண்டும் அறுவர் குழுவிற்குள்(பிடென் குழு) முரண்பாடுகள் உருவாகின. ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து ஒபாமாவும் குடியரசுக் கட்சியினரும் தொடர் பேச்சுவார்த்தைகளிலும் இழுபறிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். குடியரசுக் கட்சியினர் கேட்கும் செலவீனக் குறைப்பிற்கு சன நாயாகக் கட்சியினர் ஒத்துக் கொள்கிறார்கள் இல்லை. சனநாயக் கட்சியினர் கோரும் வரி அதிகரிப்புக்களுக்கு குடியரசுக் கட்சியினர் ஒத்துக் கொள்கிறார்கள் இல்லை.

### ஏன் இந்த இழுபறி?

அமெரிக்காவின் குடியரசுக் கட்சியும் மக்களாட்சிக் கட்சியும் ஒத்துவராமல் இழுபறிப்படுவதற்கான காரணம் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் அதிபர் தேர்தலா? அதனால் ஒன்றுக்கு மற்றொன்று குழி பறிக்கிறதா? இந்தக் கடன் நெருக்கடியால் பின் லாடன் கொலைக்குப் பின்னர் வளர்ந்த பராக் ஒபாமாவின் புகழ் சரிவைச் சந்திக்கிறது. கட்சி அரசியல்தான் இந்த இழுபறிக்குக் காரணமா? இதற்கு முன்னர் இப்படி பலநாடுகளும் பார்த்துச் சிரிக்கும்படியான கட்சிகளுக்கு இடையிலான இழுபறி அமெரிக்காவில் நடந்ததில்லை. ஆனால் ஏன் இப்போது மட்டும் இப்படி? இந்த இழுபறி மூலம் அமெரிக்காவின் கடன் முறிகளின் விலை பன்னாட்டு நிதிச் சந்தையில் குறைக்கச் செய்து அதன் மூலம் அமெரிக்காவின் கடன் முறிகளைத் தன் வெளிநாட்டுச் சொத்தாக வைத்திருக்கும் சீனாவிற்கு நட்டத்தை ஏற்படுத்தவா?

### உலகெங்கும் அதிர்வலைகள் பாயும்

அமெரிக்கா தனது கடன் உச்ச வரம்பை உயர்த்தாவிடில் அமெரிக்காவின் கடன்படு திறன் குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்காவின் கடன்படு திறன் குறைப்பு உலக வட்டி வீதத்தை உயர்த்தலாம். அமெரிக்காவின் கடன் உச்ச வரம்பு உயர்த்தப்படாமல் அது தன் கடன் நிலுவைகளைச் செலுத்த முடியாமல் போனால் அமெரிக்கக் கடன் முறிகளின் வீழ்ச்சியடையலாம். வட்டி வீதங்கள் அதிகரிக்கப்படலாம். பன்னாட்டு நிதிச் சந்தையைப் பொறுத்தவரை அமெரிக்கா தும்மினால் பல நாட்டு நிதிச் சந்தைகளிற்கு தடிமன் பிடிக்கும். இப்போது அமெரிக்க நிதிச் சந்தைக்கு நிமோனியா ஏற்படும் ஆபத்து உள்ளது. அமெரிக்க நிதிச் சந்தையில் நிமோனியா என்றால் உலகச் சந்தையில் என்ன நடக்கும் என்பதுதான் பலரின் கவலை.






# Sri Lanka : What next after the TNA victory ?

By Dr Kumar David

The local government elections of 23 July in so far as the North and East of Lanka are concerned bear far greater significance than the functions of the councils and sabhas warrant. The outcome is a barometer of the crucial relationship between the Ceylon Tamils and the Rajapakse state. (I use the term Ceylon Tamil to indicate the exclusion of the upcountry Tamil community of more recent Indian origin). During the run up the government, the Tamil National Alliance (TNA), the International Community, Delhi and Tamil Nadu well appreciated what was at stake. At stake was a simple question: Did the Tamils, post-war, accept that the way forward in the next phase was under the leadership of the Rajapakse government, or were they going to rebuff Rajapakse and repose their trust in an indigenous, nationalist Tamil movement?

The question has been answered with resounding clarity. The Ceylon Tamils, for better for worse, have rejected Rajapakse and sent a message of no confidence in his regime. Let me explain the scale of the defeat of the government in the Tamil areas and the significance of its victories in the Sinhalese areas before touching on some deeper issues.

## The election results

There were a total of 23 Pradesiya Sabhas and Urban Councils in Tamil majority areas up for grabs (Jaffna District 16, Killinochchi 3, Amparai 2, Mullaitivu 1 and in Trinco just 1 Tamil majority urban council). The TNA or an alliance linked to the TNA won every single one except three small island sabhas that were locked down and rigged by a politico-military operation. The three were secured in the name of the Rajapakse led United Peoples Freedom Alliance (UPFA) by the alliance's Tamil arm, the Eelam Peoples Democratic Party of Minister Douglas Devananda. The Kayts victory was genuine, it's Devananda's stronghold, the other two (Delft and Velanai) were fakes because the military locked out access and rigging was routine. Typical of the emotions of the Tamil man would be Nallur, in the heart of the Jaffna peninsula, where the vote divided 81% to the TNA and 17% to the Rajapakse-Devananda UPFA. In the Jaffna district as a whole the TNA took a staggering 70% of the vote. This, for better for worse, is the fact of the matter; Tamils en masse rejected Rajapakse and reposed their confidence in a nationalist alliance.

It must be appreciated that the government was well aware of the political sensitivity of the outcome; it threw everything it had into the election. Mahinda Rajapakse joined the campaign, his brother and economic development minister Basil led teams of campaigning government ministers and politicos, the army was used to break up meetings and intimidate voters. The worst was in the Kilinochchi District were gangs, probably supplied by the army, were on the rampage on polling day, threatening voters and confiscating Polling Cards for use by impersonators. Still, the UPFA lost all three sabahas in the district. One can generalise that but for intimidation and rigging, Rajapakse would have lost by worse than a 80:20 margin in Ceylon Tamil areas.

> On TV, in the press, on YouTube and in genteel society at large, even Colombo's English speaking Sinhalese middle class has thrown its weight behind Rajapakse, rejecting war crimes charges without question, unconcerned about evidence

The other side of the story is equally dramatic. Every council or sabha in the rest of the country (Sinhalese majority) was won by the UPFA with a 60 to 65% share and in some cases above 70%. The main Sinhalese opposition party, the UNP was held down to its core constituency of 30% that is, it failed to secure any of the Sinhalese floating vote. The left leaning JVP was stuck at about 4%, well down from its heyday when it polled in excess of 12%. The Sinhalese people are not fools; they know very well the ubiquitous and unprecedented corruption of this regime and its rampant abuse of power. Nevertheless they decided, for certain reasons, to strengthen Rajapakse. On TV, in the press, on YouTube and in genteel society at large, even Colombo's English speaking Sinhalese middle class has thrown its weight behind Rajapakse, rejecting war crimes charges without question, unconcerned about evidence.

## The mind-gated communities

What lies at the root of the two communities locking their mental gates and turning their backs on each other? How does one comprehend a Westernised and Anglicised middle class, once upon a time spilling liberal verbiage, now unable to rise above knee-jerk emotions of ethnicity and race? Part of the explanation is the psychology (discretion prompts me to refrain from saying pathology) of identity consciousness, the other part the war crimes paranoia.

Bonds of identity persist in human communities with enduring tenacity. People cling to their kind (religion, race, tribe, colour) with a persistence that seems genetically ordained. It is not genetic or biological but the glue of the identity bonds is potent. If methodologically, there is one thing for which Marx can be faulted, it is that he so thoroughly explored class as a historically determinant category, but did not pay sufficient attention to ethnicity and identity. In his early work he did explore religion, but mostly as ideology and false consciousness.

Identity issues have overshadowed class in the post WW2 world; nevertheless identity bonds are rooted in material factors and only reflected in the mind. At the dawn of human history the group, the tribe or the clan *could not have survived if it did not* protect its land, its hunting grounds, its riverbank, in a word its boundaries, from intruding groups. This welded identity. The imperative to preserve the border separating us from them was born of material necessity. For thousands of years identity has survived in myth, faith, ideology, patriotism and communalism because of the material rationality of its origin. It persists in consciousness today irrespective of whether it is any longer rational or not, reactionary or progressive.

Culture (a word for a shared identity that has persisted for some time), identity and sentiments of racial pride or insecurity, are the survival in consciousness of material needs. The vehicles of the consciousness (am I a Seik or a Hindu, am I a Turk or a Tunisian) change but the need for some community identity persists.

Yet it is not biologically or genetically determined. Religion smears across genetic boundaries and Sunni and Shia Arabs slaughter each other with a gay abandon that would make a Boer and a Zulu, hell-bent on butchering each other, proud. Secondly, ethnicity as understood in racial parlance, has no genetic basis. The admixture of forerunner genes in the composition of today's Sinhala and Tamil genotypes is so large that it absurd to speak of two races. These are two languages and cultures, two identity groups. Thirdly, identity groups change with time; the people loosely called Americans today are a potpourri. The proposition that identity as genetic roots, can therefore, be safely laid to rest.

## Why deepening mistrust in Lanka at this time?

It would be natural for sentiments to freeze and aversions to harden as a consequence of the events of the final months of the war, however there is a nuance that runs deeper and this is what I wish to explore in the remainder of this paper.

In the two years after the war ended aversion between the communities has deteriorated, not improved. This bodes frightening prospects. The Tamils and the International Community are convinced that the Darusman Report is factual and the Channel 4 videos are not fakes. As people then trapped in the Vannie return, mingle and carrying their tales, Tamil attitudes harden. Then when the President makes preposterous claims ("our brave soldiers advanced, Human Rights Charter on their lips and rifle slung gently over shoulder", or, "not one civilian" was killed), prospects of trust and respect breaks down irreparably. The aggravation of mistrust between the communities has at its root the Gobblesian proportions of these lies. I am negative about Indian and international brokers who hope that were Rajapakse to reach a political solution the problem will go away. They are well intentioned, but they overlook this importance of this psychological dimension; I am less sanguine.

The second reason for hardening on the Tamil side are the military and political conditions in the north and the east. The overwhelming anti-government Tamil vote was, in fact, an endorsement of TNA leader Rajavarotheyam Sampanthan's statement in Parliament on July 7 and the eight page document that TNA-MP Sumanthiran tabled in the House a few days later. The Tamils said: "Yes that's right, that's what's being done to us and that's how we feel".

> Tamils, especially the diaspora, will not allow the war crimes issue to go away and they are gaining international traction.

Readers with an interest in Lanka should familiarise themselves of these statements since they mark something of a watershed. Sampanthan used a tongue in cheek rhetorical device, quoting from Rajapakse to prove that Rajapakse is doing nothing of what he had promised re a political settlement. I say rhetorical because my belief is that he has no faith in the President. The second part of Sampanthan's statement was more interesting; he declared he would step out and lead civil disobedience if the oppression of his people does not cease. I think foxy old Sampanthan was able to correctly read the signs and saw victory impending at the local government elections. Repression is the subject of Sumanthiran's piece and deals with militarisation, land-grabs, military assisted settlements, denial of livelihood opportunities, military occupation of churches, beatings and break-up of lawful meetings.

In summary then, first there is a deepening psychological divide, the Tamils, especially the diaspora, will not allow the war crimes issue to go away and they are gaining international traction. The Sinhalese are determined to deny all wrongdoing. Second, I am a pessimist on whether Rajapakse will agree to a reasonable degree of devolution to the Tamil areas. This makes the medium term future for Sri Lanka bleak.

Now don't shoot the messenger, I am only reading what the tealeaves tell.

Courtesy: South Asia Analysis Group

கடன் சுமையால் கஷ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

▶ கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...

▶ Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...

▶ வியாபாரத்தை பலப்படுத்த...

▶ TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...



BBK PARTNERSHIP

www.bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

BARNET 020 8216 2520 | CROYDON 020 8150 9950 | CITY OF LONDON 020 7 183 2696 | CAMBS 01354 707 911

# The international community's anger against Sri Lanka may soon be shown in the sports arena



**By P C Vinoj Kumar**

It seems that Sri Lanka's international isolation may happen sooner rather than later. Recent developments create this impression.

The Australian Cricket Team is under great pressure to call off its upcoming tour to Sri Lanka in August.

Though it appears that the Australian Cricket Board wants to go ahead with the tour, a last minute turn around cannot be ruled out given the mounting support for the 'Boycott Sri Lanka' campaign from the Australian media.

Campaigners have so far been demanding that Australia boycott the tour due to "moral reasons" - which is but a call to express outrage against the genocidal war that Sri Lankan President Mahinda Rajapaksa waged to crush Tamil insurgency in the country in which an estimated 40000 Tamils lost their lives in 2008-2009.

But now there's more evidence at hand that Sri Lanka is under a racist regime, and deserves a treatment that the international community gave South Africa in the last century for practising apartheid.

Sri Lanka has just announced its 20 member squad for the Australian series and it does not have a single Tamil player!

If Cricket Australia (CA), the governing body for cricket in Australia, decides to go ahead with the tour it would be playing against a "racially pure" all Sinhalese eleven.

Muthaiah Muralitharan, who was the lone Tamil face in the Sri Lankan team for several years, has retired from international cricket.

Why did Sri Lanka not select a single Tamil into the team? Does the Sri Lankan cricket board mean to say there is no Tamil cricket player in the country good enough to make it into the national squad?

If there is not a single Tamil who is capable of getting into the team, why is it so?

Are the Tamils being given lesser opportunities to play the sport? Or, have they been left out of the team on racial grounds, as they have been kept out of the Sri Lankan army?

South Africa was isolated from international sports because it refused to field black athletes in its Olympic squads.

Sri Lanka needs to be isolated from the cricket world on the same grounds of practising racism in sports.

Popular columnist Peter Roebuck wrote an insightful article recently in which he made references to the Channel 4 documentary 'Sri Lanka's Killing Fields' and argued that sport has to take a stand on such issues.

He wrote: "When it comes to taking a stand, sport has mostly preferred to bury its head in the sand. Claiming it was none of its business, it ignored the state-sponsored slaughter of the Tamils in Sri Lanka and the Ndebele in Zimbabwe in the 1980s. Few condemned the West Indies' refusal to appoint a black captain, a policy that lasted deep into the 1950s."

Roebuck urged the sporting world to be more socially responsible. "Sportsmen and women can no longer pretend lack of knowledge. Facebook, YouTube and so forth have denied them that luxury," he wrote. Not everyone is pretending lack of knowledge though.

Former England Captain Michael Atherton described Channel 4's documentary as "more shocking than anything seen on television since the Ethiopian food shortages."

Importantly, he noted: "Increasingly, the United Nations' inaction on the evidence of war crimes looks inexcusable. If that continues, it is likely that questions will be asked about the suitability of England's tour to Sri Lanka, scheduled for this winter."

Sri Lanka's only Tamil cricketer till recently, Muralitharan, also reacted, but in a politically correct way.

Muralitharan has said: "Sports and politics are different. If Australia is not going to play any more in Sri Lanka, Pakistan, Zimbabwe.. If they only play in some countries, world cricket will die and IPL will take over."

Muralitharan's statement has to be seen and appreciated in the context of his circumstances. Muralitharan's Tamil speaking family lives in a dangerous environment in Sri Lanka, where anyone who speaks against the government is bumped off.

Also, anyone who refuses to toe the government line when commanded to do so, would also meet the same fate. So, be kind to Muralitharan. He has got a life!

*Courtesy: The Weekend Leader (www.theweekendleader.com)*

## மக்கள் களம்

### யாழ். மாநாகரசபைக் கூட்டத்திலிருந்து முஸ்லிம் பிரதிநிதிகள் வெளிநடப்பு

*-செய்தி*

இவர்கள் இப்படியான வெளிநடப்புக்களை சிங்கள மாநகர சபைகளில் இல்லை கோட்டை பாராளுமன்றத்தில் உங்கள் மக்களுக்காக செய்தால் நீங்கள் உண்மையான ஜனநாய வாதிகள்! அதற்காக உங்களை சந்தர்ப்ப வாதிகள் என கூற முடியாது.

*-அகோதா*

சம நிலை, சம உரிமை எல்லோருக்கும் வேண்டும்! ஆனால் இன்றைய காலகட்டத் தில் இது கொஞ்சம் ஓவர்.அவங்கள் ஒரு காலத்தில் செய்தது சரிதான் எனும் மன நிலையை உருவாக்குகின்றீர்கள். சந்தோசம். கூடியிருந்து கழுத்தறுத்தவர்களில் நீங்களும்.....?

*-குமாரசாமி*

நான் இங்கு எழுதும் இந்தக் கருத்து, சரியோ அல்லது பிழையோ என்று எனக்குத் தெரியாது! எங்கள் முஸ்லிம் சகோதரர்கள், என்றைக்குமே எனக்குத் தொண்டைக் குழி யில் சிக்கிய முள்ளாகவே தெரிகின்றார் கள்.

நாங்கள் இவர்களை அணைக்கும் ஒவ்வொரு தடவையும் எங்கள் கரங்கள், இவர்களாலேயே வெட்டப் படுகின்றன!

*-புங்கையூரன்*

சகோதரத்துவம், நல்லிணக்கம், ஒருமைப் பாடு எல்லாம் வெறும் சொற்கள்தான். தமிழர் கள் முஸ்லிம்களை எப்போதும் சந்தேகத்து டன்தான் அரவணைப்பார்கள். அது போல முஸ்லிம்களும் தமிழர்கள் மீது சந்தேகமாக த்தான் இருப்பார்கள். இதற்குள் இருபகுதியி னரும் சேர்ந்து தேனைத் தோண்டி எடுக்கலாம் என்று அடிக்கடி பேசிக் கொள்வோம்

*-கிருபன்*

நான் நினைக்கிறேன் தமிழர் தரப்பு தான் பல தடவைகள் பூனைக்கு மணி கட்டும் வேலை யை செய்துள்ளது. ஆனால் கட்டிய மணியை மறுதரப்பு அறுக்க அறுக்க நாம் மீண்டும் மீண்டும் கட்டிய வண்ணம் உள்ளோம். கைதான் உளைகின்றது

*-அகோதா*

இடம் கண்ட இடத்தில் மடமா? யாழில் வெளிநடப்பு? - கொழும்பில் உள்நடப்பு? (இது சரியான தமிழ்ச் சொல்லோ தெரியவில்லை). ஆளும் கட்சியில் அதிகளவு முஸ்லீம் பிரதிநி கள் உள்ளனர், இவர்களால் சாதாரண தமிழர் களுக்கு அடிப்படை வசதிகள், உரிமைகள் என ஏதாவது பெற்றுத் தர ஆர்வம் உண்டா? இல்லையா? எப்போதாவது நடக்கும் மனித உரிமைகளுக்கு எதிராக குரல் கொடுத்து உண்டா? இல்லையே, ஏன்?

-அகோதா

இலங்கை முகமதியர்கள் மிகவும் வேறுபட்ட வர்கள். இவர்கள் தமிழர்கள் அல்ல. பாகிஸ் தானியர் மாதிரியே இவர்களிடம் குரோத மனப்பான்மை உண்டு. அதே நேரம் நம்மை மாதிரி தங்களையே காட்டிக் குடுக்கும் பாண்மை இவர்களிடம் மட்டும் தான் உண்டு. உலகின் எந்த முகமதியரிடமும் இந்த பழக்கம் இல்லை.

பணத்திற்கு விலை போகும் பண்பு இவைகளுக்குதனி. அஸ்வரின் அண்மையபேச்சுநல்ல உதாரணம். நாம்தான் தொப்பி பிரட்டி என்று சொல்கிறோம். இலங்கை முகமதியர் தவிர்ந் தோருக்கு இந்த சொல் தெரியவும் மாட்டாது. அப்படி ஒரு தேவையுமில்லை.

இதில் தமிழ்நாடு வேறு

அண்மையில் தமிழ்நாட்டு முல்லாவிடம் பி.பி.சி. நிருபர் பாசில் வைத்த புதிய சட்டம் சம்பந்தமாக கேட்டபோது அவர், நமது பெண் கள் இந்த உடை உடுப்பவர்கள் அல்ல எனக் கூறி உடனேயே பேச மறுத்துவிடார். உலகி லேயே பெண்கள் பள்ளிவாசல் உள்ள இடம் தமிழ்நாடு. கருணையுள்ள திராவிடர்களின் முகமது கூட சற்று விதியாசமான தோற்றம் கொண்டவர். உமறுப்புலவர் பார்த்த முகமது இவர்தான்:

*அருளடை கிடந்த கண்ணு மழகொளிர் முக முஞ் சோதி சொரிநறை கமழ்ந்த மெய்யுஞ் சூன் முகிற் கவிகை யோடும் வருவது தூயோன் றூதர் முகம்மது வென்னத் தேறிப் பருவர லு ழக்கு முள்ளத் தொடும்பிணை பகரு மன்றே.*

*-மல்லையூரான்:*

தமிழனின் நல்ல குணத்திற்கு அவனே அவனுக்கு சிலை வைத்து வணங்க வேண்டியது தான்

*-அகோதா*

---

### உள்ளூராட்சித் தேர்தலில் தெருவிளக்கைப் பொருத்துவதற்கே கூட்டமைப்புக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது! - பசில் ராஜபக்ச

"அதேவேளை, போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகள் தொடர்பில் ஹில்லரியும், ஜெயலலிதாவும் சந்தித்த போது கவலை வெளியிட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட பசில் ராஜபக்ச

இலங்கையை விட தமிழ்நாட்டில் வறுமை நிலை மோசமாக உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், இலங்கையில் இடம்பெயர்ந்த மக்கள் பற்றி கவலைப்பட முன்னர் ஜெயலலிதா தமிழ்நாட்டில் வறுமை நிலையில் உள்ளவர்களின் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்'

சபாஸ் சரியான போட்டி.

எனி சுமந்திரனும்.. சம்பந்தரும் என்ன சொல்லப் போகினம் என்று பார்ப்பம்.

சுமந்திரன் சொல்வாராக்கும்.. ஐக்கிய இலங்கைக்குள்.. மூவின மக்களும் சேர்ந்து கம்பம் நடுவோம்.. புலம்பெயர் தமிழ் மக்கள் மாற்றி யோசிச்சு.. போடுவது நியோன் லைட்டா.. ஆர்கன் லைட்டா என்று தீர்மானிக்கட்டும் என்று கூட இருக்கலாம்.

சம்பந்தர் சொல்லக் கூடும்.. தெருவிளக்குப் போடுவது இந்தியாவுக்கு வெளிச்சம் அடிக்கும் அதனால் தமிழ் மக்கள் இருட்டுக்குள் இருப்பதே நல்லது. இந்தத் திட்டத்தை கைவிடுவோம் என்று.

*-நெடுக்ஸ்*

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பை, தமிழ்மக்கள் மாபெரும் வெற்றி பெறச் செய்தமையை.... சுமந்திரன், சம்பந்தன் போன்றோர் தவறாக எடை போடுகின்றார்கள் போல் உள்ளது. நெடுக்ஸ்,

உண்மையில் சிங்களக் கட்சிகளோ... ஒட்டுக் குழுக்களோ வரக்கூடாது என்று தான் த.தே.கூட்டமைப்புக்கு அம்பாறையிலிருந்து, பருத்தித்துறை வரை ஒற்றுமையாக வாக்களித் தார்கள். மற்றும் படி மூவின மக்களும் ஏற்கக் கூடிய தீர்வு என்பதன் கொள்கையிலிருந்து இவர்கள் விலகி வரவேண்டும்.

தமக்கு கிடைத்த பதவியை பயன் படுத்தி சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்தி தமிழ்மக்களுக்கு விடிவு ஏற்படுத்தவே இவர்களை தமிழ் மக்கள் தெரிவு செய்தார்கள்.

*தமிழ் சிறி*

தமிழர்கள் யாருக்கு வாக்களித்தார்கள்,? எதற்காக வாக்களித்தார்கள் என்றெல்லாம் இவர்களால் எண்ண முடியாமையினால் ஏற்பட்ட வயிற்றெரிச்சலில் முனங்கியிருக்கி றார். இதைக் கர்ஜனை என்று அவர் நினை க்கக் கூடும்.

அத்தனை பலமிருந்தும் தமிழர்கள் தங்களது விருப்பத்தினை சுயத்தோடு வெளிக்காட்டியிருக்கிறார்கள். நீ என்ன செய்தால் என்ன? எத்தனைபேரைக் கொன்றா லென்ன? நாங்கள் தமிழர்கள்தான் என்ற வெளிப்பாடாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

*-இறைவன்*

*(நன்றி யாழ்)*

# KIDS பேப்பர்

## The Untold Story

*Ilakkiah Somaskaanthan*



This photograph was taken at a hospital in Vanni, on the 1st of February 2009. Two days later that hospital was bombed by the State forces of Sri lanka. Sixty one patients, including children were killed in that incident.

So many children have been killed by these bombes.



These two children's mum have been killed by the Sri lankan army's. Now they have no food and no mum. Also they only you to help them you are the only one for them.

During the night on Saturday at about 10:15 p.m., due to the cluster bomb attack by the Sri lanka forces towards the kombavil area, 13 tamils were brutally murdered.


I think that the people who killed our land people should be punished. Do you think they should be punished? And when and where?

### Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | I | L | A | M | P | U | L | I | A |
| P | O | D | A | E | L | M | J | E | U |
| A | E | S | D | R | S | A | M | R | D |
| V | R | I | U | F | T | D | N | G | E |
| Q | U | N | Y | Z | P | U | N | A | I |
| A | M | G | I | U | W | S | O | H | I |
| B | A | A | N | J | E | U | O | P | C |
| X | I | M | T | U | K | A | R | S | O |
| P | C | X | T | U | K | L | M | R | D |
| V | F | T | N | G | U | F | U | N | B |

**Hidden Words:**
**Subject: Animals in Tamil**
Madu, Aadu, Punai, Singam, Erumai, Puli

*By : Thamiline Kunanithy*



*By: Varnan Logeswaran*


### Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | I | L | A | M | P | U | L | I | A |
| P | O | D | A | E | L | M | J | E | U |
| A | E | S | D | R | S | A | M | R | D |
| V | R | I | U | F | T | D | N | G | E |
| Q | U | N | Y | Z | P | U | N | A | I |
| A | M | G | I | U | W | S | O | H | I |
| B | A | A | N | J | E | U | O | P | C |
| X | I | M | T | U | K | A | R | S | O |
| P | C | X | T | U | K | L | M | R | D |
| V | F | T | N | G | U | F | U | N | B |

**Hidden Words:**
**Subject: Animals in Tamil**
Madu, Aadu, Punai, Singam, Erumai, Puli


*By: Varnan Logeswaran*


### Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| N | I | L | A | M | P | U | L | I | A |
| P | O | D | A | E | L | M | J | E | U |
| A | E | S | D | R | S | A | M | R | D |
| V | R | I | U | F | T | D | N | G | E |
| Q | U | N | Y | Z | P | U | N | A | I |
| A | M | G | I | U | W | S | O | H | I |
| B | A | A | N | J | E | U | O | P | C |
| X | I | M | T | U | K | A | R | S | O |
| P | C | X | T | U | K | L | M | R | D |
| V | F | T | N | G | U | F | U | N | B |

**Hidden Words:**
**Subject: Animals in Tamil**
Madu, Aadu, Punai, Singam, Erumai, Puli


*By : Varjiha Karunaratnam*



*By: Thamilini*



*By: Yuenixa*



*By: Varjitha*



*By: Varnan*



*By: Arthie*




*By: Varshini*

## Colouring




Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.

***Last issue winner is* Varshini**

**Dear Kids...**

Do you like to draw? Send in a picture of your favourite animal and write a few words on why it's your favourite and send it (with your photo) to ORU PAPER and you could be the lucky winner of a new stationary kit!



### Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| I | Q | Y | Z | K | I | L | I | A | I |
| B | I | P | L | M | A | D | P | E | O |
| E | N | U | I | L | M | A | P | O | D |
| M | E | R | L | J | E | U | A | R | S |
| A | K | A | M | M | A | I | N | A | R |
| J | O | K | A | K | A | M | D | V | F |
| I | O | T | N | G | E | Q | Y | Z | A |
| L | L | I | U | W | S | O | H | I | B |
| N | I | J | E | U | O | P | C | X | T |
| U | K | A | R | S | O | P | C | X | T |

**Hidden Words:**
**Subject: Birds in Tamil**
Pura, Kakam, majil, Kooli, Kili, Maina



# இலண்டன் ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயம்

**SRI SELVA VINAYAGAR TEMPLE** 299-303, Ley Street, Ilford Essex IG1 4BN

## 8ம் ஆண்டு மகோற்சவ திருவிழா அழைப்பிதழ்-2011

ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் அடியார்களே!

ஈரேழு பதினான்கு லோகங்களுக்கும் முழு முதற் கடவுளாக ஓம் எனும் பிரணவப்பொருள் விளக்கமாகி தமக்கு மேலான தலைவரின்றி தம்மை மெய்யன் போடு வழிபடுபவர்க்கு சகல செல்வங்களையும் அள்ளி வழங்கும் இல்போட் பதியில் வீற்றிருக்கும் இலண்டன் ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் 8ம் ஆண்டு மஹோற்சவப் பெருவிழா நிகழும் மங்களகரமான கரவருடம் ஆனி மாதம் 31ம் நாள் (15.07.2011) வெள்ளிக்கிழமை கிருஷ்ண பக்ஷ பௌர்ணமி திதியும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் உத்திராட நட்சத்திரத்தில் காலை 7.30 மணிக்கு விக்கினேஸ்வர பூஜை, கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி காலை 10.00மணியிலிருந்து 11.00 மணிக்குள் உள்ள சுபநேரத்தில் கொடியேற்றத்துடன் (துவஜாரோகணம்)திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் காலையிலும் மாலையிலும் வெகு விமரிசையாக நடைபெறும்.

தினமும் காலை, மாலை, ஸ்னபன கும்ப அபிஷேகம், பூஜை, கொடித்தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை, வேத தோத்திர திருமுறை பாராயணம், ஆன்மீக மற்றும் சிறப்புச் சொற்பொழிவுகள் நடைபெற்று, பிரசாதம் வழங்கப்படும்.

இம்மஹோற்சவ காலங்களில் அடியார்கள் ஆலயத்திற்கு வருகைதந்து எம்பிரானின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்..

### தேர்த்திருவிழா 07.08.2011
### ஞாயிற்றுக் கிழமை

உற்சவ காலங்களில் அபிஷேகத்திற்குத் தேவையான பால், தயிர், இளநீர், தேன், பழம், பூக்கள் மற்றும் அன்னதானத்திற்குத் தேவையான காய் கறி, அரிசி முதலியவற்றை வழங்க விரும்பும் அடியார்கள் அவற்றை ஆலய அலுவலகத்தில் கொடுக்கலாம்

### மஹோற்சவகால நிகழ்ச்சி நிரல்

- காலை 8.00 மணி ----------------------------------நித்திய பூசை
- காலை 9.30 மணி ---------------விசேட கலச பூசை, ஹோமம்
- காலை 10.30 மணி ----------------------------மகா அபிஷேகம்
- காலை 11.15 மணி ------------------------கொடித்தம்ப பூஜை
- காலை 11.30 மணி ---------------------வசந்த மண்டப பூசை, சுவாமி உள் வீதி உலா
- பகல் 12.30 மணி -------------------------------மகேஸ்வரபூசை
- மாலை 5.00மணி ----------------------------------நித்திய பூசை
- மாலை 5.30மணி --------------------------கொடித்தம்ப பூசை
- மாலை 6.00மணி ----------------------------சுற்றுப்பளி பூசை
- மாலை 6.30மணி ---------------------------வசந்தமண்டபூசை
- இரவு 7.15மணி ---------------சொற்பொழிவும், மகேசுர பூசை
- இரவு 8.00மணி --------------சுவாமி வெளி வீதி எழுந்தருளல்
- இரவு 8.30மணி -------------------மேளக்கச்சேரி (வடக்கு வீதி)
- இரவு 9.00மணி ----------------------------பிரசாதம் வழங்கல்

- 15.07.2011 வெள்ளிக்கிழமை ---------------------கொடியேற்றம்
- 20.07.2011 புதன்கிழமை ---------------------கற்பூரத் திருவிழா
- 24.07.2011 ஞாயிற்றுக்கிழமை --------------மாம்பழத் திருவிழா
- 04.08.2011 வியாழக்கிழமை ------------------மஞ்சத் திருவிழா
- 05.08.2011 வெள்ளிக்கிழமை ---------------வேட்டைத்திருவிழா
- 06.08.2011 சனிக்கிழமை ----------------------சப்பரத் திருவிழா
- 07.08.2011 ஞாயிற்றுக்கிழமை ------------------தேர்த்திருவிழா
- 08.08.2011 திங்கட்கிழமை --------------------தீர்த்தத்திருவிழா
- 09.08.2011 செவ்வாய்க்கிழமை ----------------------பூங்காவனம்
- 10.08.2011 புதன்கிழமை -------------------------வைரவர் மடை

அடியார்கள் அனைவரும் காலையும் மாலையும் வருகை தந்து ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமாளின் பேரருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## ஆயிரம் ஆதரவற்ற பிள்ளைகளைப் பராமரிக்கும் திட்டத்தின் கீழ் பராமரிக்கப்படும் பிள்ளைகள்









கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆதரவற்ற பிள்ளைகளின் கல்விச் செலவுகளுக்காக செல்வ விநாயகர் ஆலயம் சார்பாக ரூபா 647347.00 அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாகத்தினர்கள்.

**Tel : 0208 9118 934** * www.sriselvavinayagar.org.uk * e-mail:- info@sriselvavinayagar.org.uk


தாகம் நீங்கிட
சுவை ததும்பும் குளிர்பானங்கள்!
Niru BRAND
UFC
Coconut Water
Natural Rehydration
Niru BRAND
FALUDA
Mambo
Jus de Mangue
Mangosaft
Nelli
புதிய அறிமுகம்!!
இன்றே வாங்குங்கள் நிருவின்
இயற்கைச் சுவையுடைய பானங்களை!!
UFC
Mangosteen
UFC
UFC
Pomegranate
Refresh
இப்போது உங்கள் அபிமான தமிழ்க்கடைகளில் கிடைக்கிறது...
Imported & Marketed By
NIRU EUROPE LTD
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP
மேலதிக விபரங்களுக்கு
Tel : 020 8640 8228
Email : sales@niru.co.uk

# தேசியத்தைக் கெடுக்கும் சாதீயம்

பாகம் 97

உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிந்துவிட்டன. வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றிருக்கிறது. ஆனாலும் தீவுப்பகுதிகளிலும் ஏனைய இடங்களிலும் மக்கள் கணிசமான அளவு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பான ஆளும் தரப்புக்கும் வாக்களித்திருக்கிறார்கள். அவர்கள் தீவுப்பகுதிகளில் வெற்றியடைந்திருப்பதோடு மட்டுமல்லாமல் வடபகுதியின் கணிசமான உள்ளூராட்சிச் சபைகளில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 20 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளையும் பெற்றுள்ளார்கள். அதற்கும் மேலாய் தெற்கில் அனைத்துச் சபைகளையும் ஆளும் தரப்பு கைப்பற்றியிருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி தனது மகன், தம்பிமார் உட்பட சகபரிவாரங்களுடன் வடக்கில் முகாமிட்டு எப்படியாவது இந்தத் தேர்தலில் வெற்றியீட்டி, உலகில் தற்போது சரிந்து போயிருக்கும் தமது செல்வாக்கை நிமிர்த்திவிட வேண்டுமென்று பாடுபட்டும், மகிழ்ச்சியடையும்? அளவுக்கு வெற்றி கிடைக்காவிடினும், ஏதோ ஒரு வகையில் திருப்தியடையும் அளவுக்காவது இந்தத் தேர்தல் அவர்களுக்கு அமைந்திருக்கிறது. இதை மறுக்க முடியாது.

தமிழர்களை நெருங்குவது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதைப் போல என்ற நிலைமாறி, இன்று அது சாத்தியப்படக் கூடியதே என்ற எண்ணத்தை பேரினவாதம் தன்னுள் உருவாக்கிக்கொண்டு வருவது ஆரோக்கியமானதாகப் படவில்லை.

நம்முள் சாதி சமயம் என்று ஆயிரம் உட்பிரிவுகளையும் அவைசார்ந்த குரோதங்களையும் வளர்த்து வைத்துக்கொண்டு தேசியத்திற்காகப் போராடப் புறப்பட்டது கொஞ்சம் அவசரப்பட்ட செயலாகப் போய்விட்டது.

ஆட்டை வெட்டும் முன் அதன் விதைகளையாவது பிடுங்கி விடுவோமென்ற தோரணையில் ஆரம்பித்த தேசிய விடுதலைப் போரை நசுக்கோ நசுக்கென்று நசுக்கிவிட்ட சிங்களம், இன்று அந்த நசுக்கியழிக்கப்பட்ட மக்களிடமே சென்று, தமக்கான ஆதரவை 20 வீதத்திற்கும் அதிகமாகப் பெற்றிருப்பதை இலகுவாக ஜீரணிக்க முடியவில்லை.

பலரிடமும் ஆராய்ந்து பார்த்ததில் நம்மிடையே இருக்கும் ஜாதி வேறுபாடுகளும் இதற்கொரு காரணமென்கிறார்கள். நம்மிடையேயுள்ள இந்த இழிநிலையால் பேரினவாதத்திடம் தமிழ்த்தேசியவுணர்வு சரணடைவதுபோன்ற தோற்றப்பாடு கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிக்கொண்டு வருகிறது. அது தோற்றத்திலேயே நின்றுவிடவேண்டுமென்று இறைவனையாசிப்போம்.

சாதீயம் தொழில்முறைப் பாகுபாட்டின் அடிப்படையில் உருவானது. ஆரம்பத்தில் வர்ணாச்சிரம தர்மக் கொள்கைகள் உருவான போது பிரம்ம, சத்திரிய, வைசிய, சூத்திரர்களென மக்கள் குழுக்களாக வகுக்கப்பட்டார்கள். அதன்படி, வேளாண் குலத்தவர்களும் சூத்திரர்களே. காலப்போக்கில் நிலவுடைமை அதிகரித்ததனால் அரசர்களுடனான தொடர்புமேம்பட்டு சத்திரிய வம்சக்கலப்பினால் இரண்டாம் சாதியாரானார்கள். உதாரணமாக மட்டக்களப்புப் பிரதேசங்களில் வேளாண்மக்களிடையே குடிவழிக் கோயிலுரிமை நிலவுரிமை போன்றன ஏற்பட அரச வம்சத்தினருடன் ஏற்பட்ட உறவுகள் காரணமாயிருந்தன. வேளாண் மக்களிடமிருந்த நிலவுடைமை காரணமாக அரசவம்சத்தினர் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டதால் சமூக அமைப்பில் வேளாண்குலத்தினர் உயர்ந்தவராகிவிட்டனர்.

சில பிரதேசங்களில் சாதீயம் போலித்தனமானதாகிவிட்டது அரைப்பரப்புக் காணியுமில்லாமல் தங்களை வேளாண் குலத்தவர்கள் என்று அலட்டிக் கொள்பவர்கள் அனேகர். அதே வேளை சில பிரதேசங்களில் ஏக்கர் கணக்கில் விவசாயம் செய்தாலும் இதுபற்றி அலட்டிக் கொள்ளாமலேயே வாழும் வேளாண் சமூகத்தவர்களும் உண்டு. ஆக மொத்தத்தில் கருத்தற்ற உயர்வு தாழ்வுப் பிரிவினைகளையுருவாக்கி குழுக்களாகப் பிரிந்து நிற்கிறது நமது சமூகம். சாதீயம் அவரவர் தனிப்பட்ட வாழ்வு முறைமையில் எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும் ஆனால் அது தேசியத்தையும் எமது சமூக முன்னேற்றத்தையும் கெடுக்கும் காரணியாக மாறும்போதுதான் அந்த நச்சுப் பாம்பை எப்படியாவது அடித்து விரட்டிவிட வேண்டுமென்னும் உணர்வு தோன்றுகிறது.

## அலசுவரம்

அலசுபவர் : **மட்டைக்களப்பான்**

தற்போதைய நிலைவரப்படி பார்த்தால் தமிழரிடையே சாதீயம் ஒளிவதாயில்லை, அது உருமாறி விசுவரூபமெடுக்ககவே முயல்கிறது. பலரும் தங்களை சாதியினடிப்படையில் அடையாளப்படுத்த முனைகிறார்கள்: தமிழ்நாட்டில் சாதீய அரசியல். உயர் கல்வியில், உத்தியோகத்தில் சாதீய அடிப்படையிலான ஒதுக்கீட்டு முறைகள் என்று பலவிடயங்கள் வந்துவிட்டன. தற்போது அங்கு சாதி ஒரு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் காரணியாக மாறிவிட்டது. மேலும் எம்மிடையே திருமண சேவைகள் சாதீயத்தை அடிப்படையாக வைத்தே செயலப்படுகின்றன. யாரும் தங்களது சாதி தவிர்ந்த பிற சாதியினரோடு திருமண உறவுகளை வைக்க விரும்புவதில்லை.

புலம்பெயர்ந்த தமிழர்களிடத்தில் சாதியம் வாழ்கிறது. ஆனாலும் அது வெளிப்படையாக ஒரு சமுதாயத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இல்லை. அதாவது கோயில்களில் உட்செல்லத் தடைசெய்தல் போன்ற செயல்களை புலம் பெயர்ந்த தேசத்தில் செய்யமுடியாது. அதனால் சாதீயம் இங்கே பெரிய விளைவுகளை ஏற்படுத்துவதில்லை. ஆனாலும், பொதுவாக மறைமுகமாக இங்கு அது உள்ளது. பேசிச் செய்யப்படும் திருமணங்களில் சாதி பார்க்காமல் விடமாட்டார்கள். காதல் திருமணங்களில் சிலவேளை சாதியத்தைக் கருத்தில் கொள்ளாமல் விடக்கூடும். பொதுவாக இலங்கையில் சில சமூகங்கள் தங்கள் திருமண உறவுகளில் காதலைப் பெரிதுபடுத்தாமலேயே இருந்தன. காதல் பொதுவாக Infatuation எனப்படும் காமம் சார்ந்ததென்று கருதி பல்கலைக் கழகங்களில்கூட மிகவும் புத்திசாலித்தனமாகவே காதலித்தார்கள். அதாவது காதலிப்பவர்கள் தாங்கள் படிக்கும் பீடத்தைப் பொறுத்து, ஊரிலுள்ள குடும்ப நிலையைப் பொறுத்து, அவரவர் சாதியைப் பொறுத்து சோடி சேர்ந்து, பின்னர் சீதனமுறைமையின் கீழ் திருமணத்தையும் செய்து கொண்டார்கள். எதையும் சிந்திக்காமல் கண்மூடித்தனமாகக் காதல் செய்யும் பழக்கம் எம்மிடமில்லை. இதுவே கலப்புத் திருமணங்கள் ஏற்படாமல் சாதியமைப்பு எம்மிடையே நிலைபெற்றுப் போனதற்கான காரணமாகும். சில தம்பதிகள் பெரிய காதலர்கள் போல நடிப்பார்கள் ஆனால் ஆராய்ந்து பார்த்தால் கொழுத்த சீதனத்துடன் பேசிக் கலியாணஞ் செய்தவர்களாயிருப்பார்கள்.

புலம்பெயர் சமூகத்தவரிடையேயும் சாதியமைப்பு மறைமுகமாக உள்ளதால் அதன் ஆதிக்கத்துக்கு உட்பட்ட இன்றைய இளஞ்சமூகம் கூட இத்தகைய கட்டுகளிலிருந்து விடுபடக் கூடிய நிலையிலில்லை. இதன் விளைவாக கருத்தொற்றுமையுடனும் அன்பான குடும்ப வாழ்க்கைக்கேற்ற எல்லாவகைத் தகுதிகளுடனும் உள்ள இரண்டு இளம் உள்ளங்களைச் சேர்த்துவைக்க முடியாமல் போய்விடுகிறது. சாதி, சாத்திரம் போன்ற விடயங்கள் சமூகத்தில் ஓர் நல்ல குடும்ப அலகை உருவாக்குவதில் தடைக்கல்லாய் நிற்கின்றன. இதனால் அனேக இளம்பெண்களின் வாழ்வு பாழாகி விடுகிறது. உரிய காலத்தில் அவர்களது திருமணம் நடப்பதில்லை. ஒரு சமூகத்தில் மனமொத்த திருமணங்கள் நடைபெறாதபோது நல்ல குடும்ப அலகுகள் உருவாகாமல் போய் விடுவதால் அந்தச் சமூகத்தின் வளர்ச்சியும் பாழடிக்கப்பட்டு விடுகிறது.

சாதி வேற்றுமைகளற்ற ஒரு திறந்த சமூகமாக நாம் மாறும்போதுதான் எமது சமுதாய வளர்ச்சி முன்னேற்றப் பாதையில் செல்ல முடியும்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)




## கொடியேற்றத் திருவிழா-ஈலிங் அம்மன் ஆலயம்



ஈலிங் அருள்மிகு ஸ்ரீகனகதுர்க்கை அம்மன தேவஸ்தான கர வருட மகோற்சவ நிகழ்வுகள் அண்மையில் ஆரம்பமாகின. கொடியேற்றத்திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

## கொடியேற்றத் திருவிழா-கற்பகவிநாயகர் ஆலயம்



இலண்டன் Ley Street, Ilford அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயத்தின் எட்டாவது ஆண்டு மகோற்சவத் திருவிழா கடந்த பதினைந்தாம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது கொடியேற்றத் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படங்களையே நீங்கள் மேலே காண்கிறீர்கள்.

## மெய்வல்லுனர் போட்டிகள்



பிரித்தானிய தமிழர் விளையாட்டுக் கழகம் மூன்றாவது தடவையாக நடாத்திய மாபெரும் மெய்வல்லுனர் போட்டிகள் அண்மையில் LEA VALLEY ATHLETICS CENTER இல் நடைபெற்றது.

நிகழ்வுகளின் போது எடுக்கப் பட்ட படங்களையே மேலே காண்கிறீர்கள்.

**COMPUTER REPAIRS**

**உங்கள் கொம்பியூட்டர்**

- Slow வாக வேலை செய்கிறதா?
- அடிக்கடி இறுகிப் போய் நிற்கிறதா?
- வைரஸ் ஏதும் பூந்திட்டுதா?
- Error மெசேஜ் வருகிறதா?
- Internet க்கு போனா அறுபத்தி எட்டு windows திறக்கிறதா?

எல்லாம் சரி செய்யலாம்

அழையுங்கள் NO FIX - NO FEE

020 7043 4318

**DATA RECOVERY**

**உங்கள் கொம்பியூட்டர்**

- Hard disk இறுகிப் போய்விட்டதா?
- மிக முக்கியமான data மாட்டிக் கொண்டதா?
- பிள்ளைகளின் முக்கியமான படங்கள் அழிந்து போய் விட்டதா?

பிரச்சனைக்கு முடிவு கட்ட

அழையுங்கள் NO FIX - NO FEE

020 7043 4318

**IT SUPPORT**

FOR YOUR BUSINESS

- PC / Server Maintenance
- Wireless / Wired Networking
- OS / Software (re)Installation
- Regular Data Backup
- Anti-Virus / Firewall Setup
- Block unwanted website visits, safe valuable staff time
- Broadband Supply

CALL US ON

020 7043 4318

FREE CONSULTATION

# பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல்



கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல், DR கதிரவேற்பிள்ளை யோக நாதன் MBE ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வுகள், 11+ பரீட்சையில் திறமையாக சித்தியெய்திய மாணவர் களுக்கு பாராட்டுப்பத்திரமும் பாடப்புத்தகங்களும் வழ ங்கி ஊக்குவிக்கும் நிகழ்சிகள் என்பன அண்மையில் சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்வுகளின் ஆரம்பத்தில் மங்கள விளக்கை திருமதிகள் ஈஸ்வரஞானமும் யோகமூர்த்தியும் ஏற்றிவைக்க பாடசா லையின் பழையமாணவர்கள் பாடசாலைக் கீதமிசைத் தனர் தலைவரின் ஆசியுரையுடன் நாடகம், நடனம், வீணை வில்லுப்பாட்டு, பரிசளிப்பைத் தொடர்ந்து நடந்த நிகழ் வில் விக்கினேஸ்வரம் என்ற ஆண்டு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**JULY 31 SUNDAY**

**ஒலிப்பேழை வெளியீட்டு விழா**

ஈழத்தமிழர்கள் தயாரிப்பில் புகழேந்தி தங்கராஜ் நெறி யாள்கையில் உருவான 'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படத்தின் ஒலிப்பேழை வெளியீட்டு விழா. நிகழ்வில் திரைப்படத்தில் பணியாற்றிய நடிகர்கள் மற்றும் ஏனைய கலைஞர்களும் கலந்துகொள்வர்.

நேரம்: மாலை 05:00

இடம்: FAIRFIELD CONCERT HALL, PARK LANE, CROYDON, CR9 1DG.

தொடர்புகளுக்கு: 0754581702

**AUGUST 14 SUNDAY**

**சங்கமம் - 2011**

தென் லண்டன் தமிழர் நலன் நிறை அமைப்பு (South London Tamil Welfare Group) நடாத்தும் சங்கமம் கலை நிகழ்ச்சி, தமிழர் பாரம்பரிய விளையாட்டு, அரங்க நிகழ்வுகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள்.

இடம்: Morden Park 100 London Road, Morden, Surrey SM4 5QU.

நேரம்: காலை 9.00மணி முதல் மாலை 9.00மணி வரை

தொடர்புகளுக்கு: www.sltwg.org.uk

நடந்த நிகழ்வுகள் மற்றும் நடக்க இருக்கும் நிகழ்வுகளின் விபரங்களை பிரசுரிப்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்



# சனல்-4 தொலைக்காட்சியின் தொடர் தேடலா அல்லது தொடர் நாடகமா?



**வேல்தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

இந்தியாவின் பேருதவியுடன் இலங்கை தமிழர்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்களை சில நிமிடங்கள் பதிவு செய்யப்பட்ட காணொளிப் பதிவிலோ அல்லது ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவின் சில நூறு பக்க அறிக்கைகளிலோ அடக்கிவிட முடியாது. பன்னாட்டு அரங்கில் குரலற்று இருக்கும் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களை வெளிக் கொண்டு வருவதில் பிரித்தானியத் தொலைக்காட்சிச் சேவையான சனல்-4 பெரும் பங்காற்றிக் கொண்டிருக்கின்றது. இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் சனல் -4 இற்கு ஒரு தனி இடமுண்டு என்பது நிச்சயம். அது 27-07-2011 அன்று பிரித்தானிய நேரம் இரவு 7.30 ஒளிபரப்பிய செய்தியில் முக்கிய சாட்சிகள் இருவரை முன் வைத்துள்ளது.

நந்திக் கடல் பிரதேசத்துக்குள் முதல் பிரவேசித்த இலங்கை அரசின் 58வது படையணியில் முன்னணியில் பணி புரிந்த படை அதிகாரி பெர்னாண்டோ என்பவர் போர் முனையில் நடந்தவற்றை சனல்-4 இற்கு விபரித்துள்ளார்.

*பெர்னாண்டோ கூறியவை:*

"மக்களைக் கண்டபடி சுட்டனர். கத்திகளால் குத்தினர். நாக்குகளை அறுத்தனர். பெண்களின் மார்புகளை அறுத்தனர். மக்களை இரத்த வெள்ளத்தில் நனைந்தபடி கண்டேன்"

"இதை ஒரு வெளி ஆளாக இருந்து பார்க்கும் போது நான் நினைக்கிறேன் அவர்கள் கொடிய மிருகங்கள். அவர்களது இருதயம் மனிதாபிமானமற்ற மிருகங்களினுடையதைப் போன்றது."

"அப்பாவிச் சிறுவர்கள் பெருந்தொகையானோரும் முதிர்ந்தோரும் கொல்லப்பட்டனர் காயப்பட்டவர்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. ஒரு பெண்ணை ஆறு பேர் கற்பழித்ததை என் கண்ணால் கண்டேன். போர் முனையில் இருந்த படைவீரர்களின் இருதயங்கள் கல்லாகிவிட்டன. அவர்கள் மானிடத் தன்மையை இழந்து விட்டனர். அவர்களை நான் இரத்தக் காட்டேரிகள் என்பேன். 1500 பிணங்களை புல்டோசர்களால் மண் போட்டு மூடுவதைக் கண்டேன். இப்படி 5000 பிணங்கள் மண்ணால் மூடப்பட்டன."

*இன்னொரு சாட்சியான சஸ்ருத்த என்னும் இலங்கைப் படை அதிகாரி கூறியது:*

சரணடைந்தவர்களை கொல்லும்படி கோத்தபாய ராஜ்பக்ச உத்தரவிட்டார்.

**இலங்கையின் பொய்ப் பரப்புரைக்கு பிபிசி களம் அமைக்கும்.**

பெர்னாண்டோவையும் சஸ்ருத்தவையும் இனி இலங்கை அரசு பொய்யர்கள் என்றோ அல்லது போலியான ஆட்கள் என்றோ அல்லது இரு தமிழர்களை வைத்துத்தான் சனல்-4 நாடக மாடுகிறது என்றோ பரப்புரை செய்யலாம். அதற்காக இன்னும் சில வாரங்களில் இலங்கை அரசு சார்பில் ஒருவரின் பேட்டியை பிபிசி ஒளிபரப்பும். அதில் வரும் சிங்களவர் பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுவார்.

சனல் -4 தொலைக்காட்சி முதலில் போருக்குப் பின்னர் வன்னி முகாம்களில் நடப்பவற்றை அம்பலப்படுத்தியது. பின்னர் சில விடுதலைப்புலிகள் நிர்வாணநிலையில் கைகள் கட்டியபடி சுட்டுக் கொல்வதைக் காட்டியது. பின்னர் இசைப்பிரியாவின் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட உடலைக் காட்டியது. பின்னர் ஒரு 48 நிமிட காணொளிப்பதிவை ஒளிபரப்பியது. பின்னர் பெர்ணாண்டோ சஸ்ருத்த ஆகியோரின் சாட்சியத்தை ஒளிபரப்பியது.

> "இதை ஒரு வெளி ஆளாக இருந்து பார்க்கும் போது நான் நினைகிறேன் அவர்கள் கொடிய மிருகங்கள். அவர்களது இருதயம் மனிதாபிமான மற்ற மிருகங்களினுடையதைப் போன்றது."

சனல்-4 இவற்றை ஏற்கனவே பெற்று வைத்துக் கொண்டு ஒன்றன் பின் ஒன்றாக ஒளிபரப்புகிறதா அல்லது தொடர்ந்து இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பான சாட்சியங்களை தேடிப்பிடிக்கிறதா என்பது பெரும் கேள்வி. இது வரை வெளிவந்தவை ஒரு சிறு பகுதியே. தமிழர்களுக்கு எதிராக பாவிக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள், அதைக் கொடுத்த நாடு, உண்மையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்ற பல தகவல்கள் இன்னும் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். சனல்-4 ஐ நம்புவோமாக. அதன் பணி தொடர வாழ்த்தி வணங்குவோமாக.

# ஹிலரி - ஜெயா அரட்டை - தமிழர்களுக்கு சிரட்டை



அமெரிக்க அரசச் செயலர் ஹிலரி அக்காவும் தமிழக முதல்வர் ஜெயா அக்காவும் சந்தித்தித்து உரையாடியமை ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. எவரும் எதிர்பார்த்ததும் அல்ல. அமெரிக்க அரசச் செயலர் முதல் முறையாக தமிழக முதல்வரைச் சந்தித்தமை வியப்புக்குரியதே. இதிலும் வியப்பான சம்பவம் தமிழின உணர்வாளர்கள் சோனியா அக்காவின் காங்கிரசிற்கு பாடம் படிக்கிறோம் என்று சொல்லி ஒரு கன்னட பெண்ணை தமிழ்நாட்டு முதல்வராக்கியமை. சாதாரண கன்னடப் பெண் அல்ல. ஈழத் தமிழர்களின் மோசமான எதிரியான சோ போன்ற பார்ப்பனர்களின் அறிவுரைப்படி நடக்கும் பார்ப்பனப் பெண் ஜெயலலிதா.

மேற்படி அசாதாரண நிகழ்வுகளின் பின்னணி தான் என்ன? உலகச் சந்தையில் இப்போது மிகப் பெரிய ஆயுதக் கொள்வனவாளர் இந்தியா. இந்த ஆண்டு ஏப்ரில் மாதம் இந்தியா அமெரிக்காவின் எஃப்-16 போர் விமானங்களை வாங்காமல் பிரான்சின் ரஃபேல் போர் விமானங்களை வாங்கியது. இதைத் தொடர்ந்து நடந்தவை தான் டெல்லியில் ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரே பாபா ராம் தேவ் போன்றோர் உண்ணாவிரதப் போராட்டங்கள், தமிழின உணர்வாளர்கள் காங்கிரசை தமிழ் நாட்டில் குப்புற வீழ்த்தியமை, ஹிலரி - ஜெயா சந்திப்பு. மிகுதியை நீங்கள் பொருத்திப் பார்த்துக் கொள்ளுங்கள்.

> இலங்கையில் போருக்குப் பின்னரான முதலீடுகளில் புறக்கணிக்கப்பட்ட அமெரிக்கா இப்போது இலங்கையில் தலையிட துடிக்கிறது. ஆனால் அமெரிக்கா சிங்கள மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது.

இலங்கையில் சமஷ்டி என்ற சொல்லை முதலில் கெட்ட வார்த்தையாக்கினர். பின்னர் இலங்கையில் எண்பதுகளில் தலையிட வந்த இந்தியா அதிகாரப்பரவலாக்கம் என்ற பதத்தை பாவித்தது. அந்தப் பதமும் இப்போது இலங்கையில் கெட்ட வார்த்தையாக்கப்பட்டு விட்டது. இலங்கையில் போருக்குப் பின்னரான முதலீடுகளில் புறக்கணிக்கப் பட்ட அமெரிக்கா இப்போது இலங்கையில் தலையிட துடிக்கிறது. ஆனால் அமெரிக்கா சிங்கள மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறது. தமிழர் பிரச்சனையில் அது ஒரு புதுச் சொல்லைப் பாவிக்கிறது: 'இணக்கப்பாடு'. தமிழர்களுக்கு எதையாவது கொடுக்கச் சொல்லி மஹிந்த ராஜபக்சவை வற்புறுத்தினால் அதை அவர் மறுப்பார். அதனால் சிங்களவர்கள் மத்தியில் அவருக்குச் செல்வாக்குக் கூடும் அமெரிக்காவின் மீது சிங்களவர்களுக்கு வெறுப்பு ஏற்படும். இதனால் ஹிலரி அக்கா சென்னையில் வைத்து தமிழ் நாட்டில் தமிழர்கள் சுபீட்சமாக இருக்கிறார்கள் அது போல் இலங்கையிலும் தமிழர்கள் இருக்க வேண்டும் என்கிறார்.

தமிழ்நாட்டு மக்கள் தங்கள் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டது போல் ஈழத் தமிழர்களும் தங்கள் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு சிங்கள மக்களுடன் இணக்கப் பாட்டுடன் வாழ்ந்தால் இதுவரை தமிழர்களுக்கு தண்ணீர் கொடுக்காத சிங்களவர்கள் இனிச் சிரட்டையில் தண்ணி கொடுப்பார்கள். முழு இலங்கையிலும் முதலீடு செய்யலாம். இந்த மாதிரியான ஒரு செய்தியைத்தான் இரு அக்காக்களும் தங்கள் அரட்டையின் பின்னர் சொல்ல முயல்கிறார்கள்.

*- வேல்தர்மா*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

seven | zero
graphic designers
020 7043 4319
458 Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from concept to design

## உழைப்பால் உயர்ந்தவர்கள்



புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில், புகழோடும், பணத்தோடும் புலமையோடும் தலை நிமிர்ந்து நிற்பவர்கள் எத்தனையோ பேர் இருந்தாலும், எமது கண்களுக்குத் தெரியாதவர்களை B.B.C நிறுவனம் கண்டு பிடித்து ஒளிபரப்பியதை சமீபத்தில் காணும் வாய்ப்பு கிட்டியது. இங்குள்ள தமிழர்கள் எத்தனை பேருக்கு இச் சந்தர்ப்பம் கிடைத்ததோ தெரியவில்லை. அதனால் அவ் விவரணப் படத்தின் தகவல்களை இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

15 வயதில் அகதியாக இந்த நாட்டுக்கு புலம்பெயர்ந்த ரதீஷன் யோகநாதன் (Ratheesan Yoganathan) ஏரோநொட்டிக் பொறியிலளாளராக கல்வி முடித்துக் கொண்டு, தனது தகைமைக்கேற்ப தொழிலைத் நாடாமல் கைத்தொலைபேசி வர்த்தகத்தில் 2001ம் ஆண்டளவில் தனது சகாவான பாஸ்கரனுடன் இறங்கினார். இவர்கள் ஆரம்பித்த LEBARA செல்பேசி நிறுவனம் இன்று பன்மடங்காக பல்கிப் பெருகி ஆசிய வர்த்தகர்களின் அதிசிறந்த பரிசை இந்த வருடம் தட்டிக்கொண்டது, புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமைப்பட வேண்டிய நிகழ்வாகும்.

வருடாந்தம் நூறு கோடி (1 Billion) அமெரிக்க டொலரை வருமானமாகப் பெறும் இந்த நிறுவனம் 100சதவிகிதம் வளர்ந்து வருவதாக LEBARA நிறுவனத்தின் ஸ்தாபக கூட்டாளியும் தலைமைக் காரியதரிசியுமான (CEO) ரதீஷன் யோகநாதன், B.B.Cயின் Peschardt's அவர்களின் ஆசிய வர்த்தகர்களின் நிகழ்ச்சிக்கு பேட்டி கொடுத்துள்ளார்.

தான் பிறந்து வளர்ந்த மண்ணை மறவாமல், தாயகத்திலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக குடிபெயர்ந்த தமிழ் மக்களுக்கு, இந்நிறுவனம் எட்டியுள்ள இலாபத்தில் சரி அரைவாசிப்பங்கை நன்கொடையாக அளித்து தனது இனத்தின் பால் கொண்ட பாசத்தை பங்கு கொண்டுள்ளார்.

இவரது முன்னேற்றத்தையும் அயராத உழைப்பையும் கண்டுபிடித்த B.B.Cக்கு நன்றி கூறுவது எமது கடமையல்லவா?

ரதீஷன் போன்ற இளைஞர்கள் தோன்ற வேண்டும். எமது வருங்காலச் சந்ததியினருக்கு அவர்கள் வழிகாட்டவேண்டும். எமது வருங்காலம் வசந்தமாக மாறப்போவது, ரதீஷன் போன்ற உழைப்பாளிகளினால் நம்பிக்கை தருகிறது. ஆசிய வர்த்தகர்களின் உயர்ந்த பரிசைத் தந்த ரதீஷன் அவர்களுக்கும், அவரது சகாவான பாஸ்கரனுக்கும், இந்நிறுவனத்தில் அயராது உழைக்கும் அத்தனை ஊழியர்களுக்கும் நன்றிக்கடன் செலுத்துவோம்.

## மார்பகப் புற்றுநோயைத் தடுக்கலாம்.

பெண்களை மட்டும் தாக்கும் மார்பகப்புற்று நோய், வருடமொன்றுக்கு 200,000 எண்ணிக்கையிலான பெண்களைப் பிடித்திருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. இந்தத் தொகையில் 40,000 பெண்கள் மரணித்துள்ளதாக பென்சில்வேனியா மாநிலத்தில் இயங்கும் பிற்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த NANCY DAVIDSON தனது ஆய்வில் அதாரபூர்வமாகத் தெரிவித்துள்ளார்.

இக்கொடியநோய் அனேகமாக பெண்களுக்கு மாதவிடாய் முற்றாக நிற்கும் (Post Menopausal) பருவகாலத்தின் பின்னர் தான் ஆரம்பமாகுவதை மூன்று வருடகாலமாக 4580 பெண்களிடம் பரிசோதனைகள் மேற்கொண்டதின் பின்னர் கண்டுபிடித்துள்ளனர். வசதிகள் வாய்ப்புக்கள் நிறைந்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வாழும் பெண்களுக்கே இந்தக்கதியென்றால் வளர்முக நாடுகள், வறுமைக் கோட்டுக்குள் அடங்கிய நாடுகளில் வாழும் பெண்களின் நிலமை எப்படியிருக்குமென நினைக்க பரிதாபமாக இருக்கிறது.

மார்பகப்புற்று நோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்துவிட்டால் இதன் கொடுரமான வளர்ச்சியைத் தடுத்துவிட முடியுமென Massachusetts மாநிலத்தின் புற்றுநோய்த் தடுப்பு வைத்தியசாலையின் ஆராய்ச்சிக் குழுவின் தலைவர்Paul Goss நம்பிக்கை தெரிவிக்கிறார்.

### தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

1990ம் ஆண்டளவில் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பலனாக மார்பகப்புற்று நோய் தீவிரமடையாமல் பாதுகாப்பதற்கு TAMOXIFEN, RALOXIFENE ஆகிய மாத்திரைகளை சிபாரிசு செய்யப்பட்டது. எனினும் பாதிக்கப்பட்ட பெண்கள் இதை உட்கொள்ளுவதைத் தடுத்து வந்ததின் விளைவாக, உயிர்க்கொல்லியான இந்த நோய் ஆயிரக்கணக்கான பெண்களை பலியெடுத்துவிட்தை ஆராய்ச்சியாளர்கள் கவலையுடன் தெரிவிக்கிறார்கள். மேற்கூறிய மாத்திரைகளால் தோன்றக்கூடிய பக்க விளைவுகளை உத்தேசித்தே பெண்கள் இந்த மாத்திரைகளைத் தவிர்த்துள்ளதாக அறியமுடிகிறது.

பக்கவிளைவுகளை உண்டு பண்ணாத அதிசய மாத்திரையான EXCMESTANE எனும் 'STATINS' வகையைச் சேர்ந்த புதிய கண்டுபிடிப்பு, மர்பகப்புற்றுநோய் பீடித்துள்ள பெண்களிடம் பரீட்சிக்கப்பட்டு, 65 விகிதம் பெண்களிடம் இந்நோயின் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் Paul Goss அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மார்பகப்புற்றுநோயின் ஆரம்பத்தை அறிவதற்கு, ஐரோப்பிய நாடுகளில் அதிக வசதிகளை அரச வைத்தியசாலைகள் ஒழுங்கு செய்துள்ளன. இந்த வசதிகளை தயக்கமில்லாமல் பெண்கள் பயன்படுத்தி, புதிய மருத்துவ அணுகுமுறைக்கு ஆதரவளித்தால், மார்பகப்புற்றுநோயால் மரணிக்கும் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியுமென நிச்சயமாக நம்பலாம்.

## நான் ரெடி நீங்கள் ரெடியா?

நிழற்படங்கள் எடுக்கும் கமெராக்களில் எத்தனை வகை வந்துவிட்டது. எவ்வளவு துாரம் கமெராக்கள் நவீனமயப்படுத்தப்பட்டாலும் அதனை இயக்க ஆட்கள் கிடையாமல் அவஸ்த்தைப்படும் சர்தர்ப்பங்களும் வருவதுண்டு. சிலவேளைகளில் சம்பந்தப்பட்டவர்கள் தனியாகவோ வல்லது கூட்டாகவோ கமெரா முன் அமர்ந்துகொண்டு அதைத் தானாக இயக்கவைக்க நேர இடைவெளி(Timer) குறித்து நிழற்படங்கள் எடுப்பது வழக்கம்.

கமெராவுக்கு முன் அமர்ந்து, படம் எடுக்கு முன்னர் Cheese சொல்லி சிரிக்க வைக்க எவரும் இல்லாதபோது, தானாக இயங்கும் கமெரா உத்தேச நேரத்துக்குள் 'கிளிக்' செய்துவிடும். எடுத்த படங்கள் திருப்தியாக அமையாது போனால், சிலர் மனசை சங்கடப்படுத்துவது இயல்பு. இனிமேல் அந்தச் சங்கடமே வரப்போவதில்லை. ஏனெனில் TSHKUBA பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த SHAWE CHU கண்டுபிடித்துள்ள டிஜிற்றல் கமெரா உங்கள் விருப்பத்திற்கேற்ற வகையில் எந்தக் கோணத்திற்கு திருப்பவும், தேவையான அவகாசத்தை எடுத்து படமெடுக்கத் தயாராகும் வரை காத்திருந்து, கைகளின் அசையிலேயே சமிக்ஞை கொடுத்தபின் 'கிளிக்' செய்யமுடியுமென உத்தரவாதத்தை அளித்துள்ளார்

ஆக கமெராவின் முன்னும் பின்னும் பொருத்தப்பட்டிருக்கும் காட்சியின் பிரதிபலிப்பை (View Finder) உன்னிப்பாகக் கவனித்து, படமெடுக்க ரெடியாகியவுடன் கைகளை அசைத்து வேண்டிய கோணத்தில் விரும்பிய மாதிரி படமெடுக்க புதிய டிஜிற்றல் கமெரா சந்தைக்கு வரப்போவது வெகுதுாரத்தில் இல்லை. நீங்கள் ரெடியா?









அம்மனைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்

மேற்கு லண்டன்

ஈலிங் ஸ்ரீ அருள்மிகு கனகதுர்க்கை அம்மன் ஆலய கர வருட

# மகோற்சவ விஞ்ஞாபனம்

**22.07.2011 முதல் தினமும் காலை மாலை இந் நேரங்களின் படி கிரியைகள் நடைபெறும்.**

**கொடியேற்றம்**
22.07.2011
வெள்ளிக்கிழமை
காலை 10.00மணி

| காலை | மாலை |
|---|---|
| 8.30 அபிசேகம் | 5.15 பூசை |
| 10.15 பூசை | 5.45 ஸ்தம்ப பூசை |
| 11.00 ஸ்தம்ப பூசை | 6.30 பிரசங்கம்/பஜனை |
| 11.30 வசந்த மண்டப பூசை | 7.15 வசந்த மண்டப பூசை |
| 1.00 விபூதிப் பிரசாதம் வழங்கல் | 8.00 சுவாமி எழுந்தருளல் |
| | 9.35 விபூதிப் பிரசாதம் வழங்கல் |
| | 10.30 விழாப் பூர்த்தி |

**இரதோற்சவம்**
14.08.2011
ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி

## வருடாந்த மகோற்சவ விழா விபரம்-2011

- 01ம் நாள் 22.07.2011 (வெள்ளி) கொடியேற்றக் காட்சி
- 02ம் நாள் 23.07.2011 (சனி) ராஜ ராஜேஸ்வரி அருட் காட்சி
- 03ம் நாள் 24.07.2011 (ஞாயிறு) கனக தாரா லட்சுமி அருட் காட்சி
- 04ம் நாள் 25.07.2011 (திங்கள்) நாகபூசணி அருட் காட்சி
- 05ம் நாள் 26.07.2011 (செவ்வாய்) மீனாட்சிஅம்பாள் அருட் காட்சி
- 06ம் நாள் 27.07.2011 (புதன்) சரஸ்வதி வித்யா அருட் காட்சி
- 07ம் நாள் 28.07.2011 (வியாழன்) அர்த்த நாரீஸ்வர அருட் காட்சி
- 08ம் நாள் 29.07.2011 (வெள்ளி) கைலாய தரிசன அருட் காட்சி
- 09ம் நாள் 30.07.2011 (சனி) அன்ன பூர்ணாம்பிகை அருட் காட்சி
- 10ம் நாள் 31.07.2011 (ஞாயிறு) அபிராமி தரிசன அருட் காட்சி
- 11ம் நாள் 01.08.2011 (திங்கள்) சௌபாக்கியாம்பிகை அருட் காட்சி
- 12ம் நாள் 02.08.2011 (செவ்வாய்) காமாட்சி அருட் காட்சி
- 13ம் நாள் 03.08.2011 (புதன்) அனந்த சயன அருட் காட்சி
- 14ம் நாள் 04.08.2011 (வியாழன்) புஸ்பக விமான அருட் காட்சி
- 15ம் நாள் 05.08.2011 (வெள்ளி) கேதார கௌரி அம்பாள் அருட் காட்சி
- 16ம் நாள் 06.08.2011 (சனி) வசந்தோற்சவ அருட் காட்சி
- 17ம் நாள் 07.08.2011 (ஞாயிறு) பக்தானுக்கிரக அருட் காட்சி
- 18ம் நாள் 08.08.2011 (திங்கள்) சந்தானபாக்கிய லட்சுமி அருட் காட்சி
- 19ம் நாள் 09.08.2011 (செவ்வாய்) ஜோதி மங்கள அருட் காட்சி
- 20ம் நாள் 10.08.2011 (புதன்) ஓம் கார ரூப தர்சன அருட் காட்சி
- 21ம் நாள் 11.08.2011 (வியாழன்) மகாதுர்காதர்சன அருட் காட்சி
- 22ம் நாள் 12.08.2011 (வெள்ளி) வேட்டைத் திருவிழா அருட் காட்சி
- 23ம் நாள் 13.08.2011 (சனி) சகோபுர தர்சன அருட் காட்சி (சப்பரம்)
- 24ம் நாள் 14.08.2011 (ஞாயிறு) இரதோற்சவ விழா (தேர்)
- 25ம் நாள் 15.08.2011 (திங்கள்) தீர்த்த வாரி அருட் காட்சி
- 26ம் நாள் 16.08.2011 (செவ்வாய்) சங்காபிசேகம் – சகஸ்த்திர (1008) பூங்காவனத் திருவிழா.
- 27ம் நாள் 17.08.2011 (புதன்) வைரவர் மடை.

### அம்பிகை அடியார்களே!

லண்டன் மாநகரில் ஈலிங்பதியில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனக துர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான கர வருடம் ஆடி மாதம் 06ம் நாள் (22-07-2011) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அகிலமெல்லாம் வாழும் ஆன்மாக்களுக்கு அருள் பாலிக்கும் தலமாக ஈலிங் பதியமர்ந்து மனம் பக்குவமடைவதற்கு சாதனமாக திகழ் கின்றாள்.

திருத்தலங்களில் நித்யம் நைமித்திக பூஜையாக இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவது மகோற்சவங்கள். அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து கிரியைகளில் பங்கு கொண்டு தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுன்றோம்.

**பூசைக்குரிய பூக்கள் பால் இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக.**

**அனைவரும் வருக!! அன்னையின் அருள் பெறுக!!**

### சிவாச்சாரியாரக்ள் தேவை

இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் சிவாச்சாரியார்களாக பணி செய்வதற்காக தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. பணி செய்ய விரும்பும் சிவாச்சாரியார்கள் தங்களின் நிழற்படம், சுயவிபரக்கோவை, நற்சான்றிதழ்கள் என்பவற்றை **info@ammanealing.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது ஆலய முகவரிக்கோ அனுப்பி வைக் குமாறு வேண்டுகின்றோம்.

-நன்றி
நிர்வாகசபை

5, Chapel Road, West Ealing W13 9AE TEL: 020 8810 0835 / 020 8840 0485

info@ammanealing.com / www.ammanealing.com

இங்ஙனம் : விழா உபயகாரர்களுடன் நிர்வாக சபையினரும் அறங்காவலரும்

## கறுப்பு ஜூலை நினைவேந்தல் நினைவுகள்




தமிழ் மக்கள் மீதான இன அழிப்பின் முக்கிய நாளான கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவேந்தி, பிரித்தானியப் பிரதமர் அலுவலகம் முன்பாக 23-07-2011 நடைபெறற நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம் பெற்றது. இதில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். கறுப்புஜூலை இன அழிப்புமற்றும், அனைத்துலக சுயாதீன போர்க்குற்ற விசாரணைகளை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களை மாலை 3:00 மணிமுதல் 6:00 மணிவரை பொதுமக்கள் மத்தியில் வழங்கல் செய்திருந்தனர்.

மக்கள் தமது உள்ளுணர்வை வெளிப்படுத்தும் வகையில் கறுப்புடை அணிந்து காணப்பட்டதுடன், கறுப்புக் கொடிகளையும் தாங்கி நின்று, இழந்த எம் உறவுகளுக்காக மெழுகுதிரி ஏற்றி வணக்கம் செலுத்தினர். நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே காண்கிறீர்கள்

## கரும்புலிகள் தின நிகழ்வுகள்



தமிழீழ விடுதலைப் போரின் தடைநீக்கிகளாக, உயிராயுதமாகி வெடித்து விடுதலைக்கு வலுச்சேர்த்த தற்கொடையாளர்களை நினைவுகொள்ளும் நினைவு வணக்க நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற மலர்வணக்க நிகழ்வினைத் தொடர்ந்து நிகழ்வுகளாககவிதை, நடனம், வயலின் இசை, நாடகம், சிறப்புரை என்பன இடம்பெற்றது. தொடர்ந்து சிறப்புரையினை பிரித்தானியத் தமிழர் ஒன்றியம் சார்பாக திரு.ஆ.மயூரன் அவர்கள் வழங்கினார். மாலை 7 மணிக்கு ஆரம்பமான நிகழ்வு பல்வேறு இரவு 10 மணிக்கு நிறைவடைந்தது.

*படங்கள் : வன்னியன்*

## உதவும் கரங்கள் இன்னிசை மாலை-2011



உதவும் கரங்களின் 22ம் ஆண்டு நினைவு விழாவுடன் கூடிய இன்னிசை மாலைப்பொழுது-2011 23.07.11 அன்று SOUTH CROYDON WHITGIFT SCHOOL HALL இல் நடைபெற்றது.

இந்நிகழ்வு சிறப்பு விருந்தினர்களின் மங்கள விளக்கேற்றலுடன் மாலை 6.00 மணிக்கு ஆரம்பித்து 11.00மணிக்கு நிறைவுபெற்றது. இந்நிகழ்வில் சிம்மக்குரலோன் T.M.சௌந்தர்ராஜனின் புதல்வன் TMS செல்வக்குமாருடன் இசையரசி லகஷ்மி மற்றும்விஜய் TV SUPER SINGER புகழ் ஷந்தியா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

இதன் மூலம் சேகரிக்கப்பட்ட நிதியின் ஒருபகுதி கிளிநொச்சி இராமநாதபுரத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற அன்பு இல்லத்திற்கு வழங்கப்பட இருப்பதுடன் மேலும் மட்டக்களப்பு ,வன்னி பகுதியில் மீள் குடியேறியுள்ள மக்களுக்கான சுய தொழில் வாய்ப்பு,போரினால் ஊனமுற்ற மக்களுக்கான செயற்கை கால் கை பொருத்தும் திட்டம் என்பவற்றிற்காக பயன்படவுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



முகம் சிவந்தான் ஹிட்லர் மகிந்த ராஜபக்சேவைப் பார்த்து
"ஆஸ்ட்விட்ஸ், புக்கன் வால்டு என ஆங்காங்கே
கொலைக்களம் வைத்திருந்தேன் யூதர்களுக்கு.......
நீங்கள் என்னை வென்று விட்டீர்கள் மூன்றில் ஒரு பங்கு
நாட்டையே அல்லவா படு கொலைக் கூடமாக்கிவிட்டீர்கள்
விட்டுத் தருகிறேன் "பிரபஞ்சக் கொலைகாரர்" பட்டம்
உங்களவர்களுக்கே"

– அன்புராஜா




# விடுப்பு

பார்ப்பவர்: **இழுவைக்காரன்**

## E.P.D.P. உறுப்பினரின் குரல் வளையை பிடித்த பெண்



கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் 19.07.2011 அன்று மாலை வீடு வீடாக தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட E.P.D.P. உறுப்பினர் ஒருவரோடு வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட பெண் ஒருவர் எனது கணவனை கொன்று விட்டு இரக்கமே இல்லாமல் எனது மகனையும்பூசா முகாமில் வைத்திருக்கும் அரசாங்கத்திற்கு சார்பாக வாக்கு கேட்டு வருகிறீர்களே உங்களுக்கு சூடு சுரணை இல்லையா என்று கேட்டதுக்கு E.P.D.P. உறுப்பினரொருவர் அந்தப் பெண்ணை கெட்ட வார்த்தையால் ஏசியுள்ளார். ஆத்திரமடைந்த அந்தப்பெண் அவரது தொண்டையில் பிடித்து தள்ளிவிட தேர்தல் முடிய உன்னை கவனிக்கின்றோம் என்று எச்சரித்துவிட்டுப் போய்விட்டனர்.

## விலைமாதரும் தேர்தல் களத்தில்



யாழ், தீவுப்பகுதிகளிலும் யாழ் மத்திய பகுதிகளிலும் பல சிங்களப்பெண்கள் தமிழ் இளைஞர் கூட்டங்களை அணுகி குறைந்த கட்டணத்தில் விபச்சாரம் செய்வதோடு கஞ்சா போன்றவையும் அவர்களுக்கு கொடுத்து வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களிக்கும் படியும் அப்படிச் செய்தால்தான் நாம் இப்படித்தொடர்ந்து அனுபவிக்கலாம் என்றும் அந்த மாதுக்களால் ஆசை வார்த்தைகள் அள்ளி வீசப்படுகின்றன. இளைஞர்களும் தலைகளை ஆட்டியாட்டி அனுபவிக்கிறார்கள். ஆனால் எயிட்ஸ் வந்தபின் எது ஆடப்போகிறதோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

## முல்லையில் சிங்கள கடைகள்



கொக்கிளாயிலிருந்து நாயாறு அலம்பில் ஊடாக வெற்றிலைகேணி வரையிலுமான பகுதிகளில் சிங்கள மீனவர்களின் ஆதிக்கம். ஆனாலும் முல்லைத்தீவு அலம்பில் பகுதிகளில் சிங்கள மீனவர்கள் நிரந்தர வீடுகள் அமைந்து குடும்பம் குடும்பமாக குடியேறி தொழில் செய்கிறார்கள். இச்சிங்களவர்கள் சிலர் இப்போது பலசரக்கு கடைகள் சாராயக்கடைகள் என்றெல்லாம் திறந்து வருகிறார்கள். தமிழர்களின் பழைய உடைந்த கடைத்தொகுதிகளை புதுப்பித்து பொலிஸ் மற்றும் இராணுவ உதவிகளோடு நடாத்தி வருகிறார்கள்.

## சிங்கள வியாபாரிக்கு முன்னுரிமை



வவுனியா, புளியங்குளம் சந்தியில் தமிழ் இளைஞர் ஒருவர் இளநீர் விற்று வந்தார். கடந்த வாரம் ஒரு சிங்களவர் ஓர் சிறிய வாகனத்தில் வந்து அதேயிடத்தில் இளநீர் விற்கத் தொடங்கினார். ஆனால் கூடுதலான தமிழர்கள் அந்த தமிழர்களிடமே இளநீர் வேண்டி குடிப்பதைப் பார்த்த சிங்கள வியாபாரி இராணுவத்தின் உதவியுடன் அந்த வியாபாரியை அச்சுறுத்தி வேறு இடத்துக்கு மாற்றச் சொல்லியும் பேருந்து தரிப்பிடத்தில் சிங்கள வியாபாரிக தான் விற்க முடியும் என்றும் பயமுறுத்தினார்கள். இப்போது அந்த தமிழ் வியாபாரி இப்போது பாடசாலை முன்பாக நிழலுக்கு ஒரு மரம்கூட இல்லாத இடத்தில் இளநீர்களோடு இருப்பதைப்பார்க்க பாவமாக உள்ளது.

## ரிசாத் பதியுதீனின் காணிகள் அபகரிப்பு அம்பலம்



ஆளும்கட்சி அமைச்சர் ரிசாத் பதியுதீன் அண்மைக்காலமாக மன்னார் பகுதிகளில் பலகாணிகளை பலாத்தாகாரமாக கையகப்படுத்தி அக்காணிகளுக்கு உறுதிகள் தயாரித்து பல முஸ்லீம் மற்றும் சிங்களவர்களுக்கு விற்று பெரும்பாலான பணத்தை ஈட்டிவருகின்றார். இந்த வியாபாரம் ஆரம்பித்ததன் பின்னர் அவர் கொழும்பு பக்கம் போய்வருவதை குறைத்துவிட்டாராம். வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலும் மாறி மாறித்தங்கும் இவர் இவ்விடங்களில் இருந்து வெளிநாடு சென்றவர்களின் காணிகளின் விபரங்களையும் திரட்டி வருகிறார்.

## கிளியில் கிரிமினல்கள்



அண்மையில் மகிந்த மன்னன் கிளிநொச்சிக்கு தேர்தல் பிரச்சார நிகழ்வில் கலந்து கொள்ள வந்திருந்தபோது பொதுமக்களின் அடையாள அட்டைகளை பறித்தெடுத்துக்கொண்டு மக்களை கூட்டத்துக்கு வருமாறு E.P.D.P. உறுப்பினர்கள்தான் சிங்கள இராணுவத்தையும்விட கூடுதலான கிராமங்களுக்குள் புகுந்து மக்களை அழைத்து வருவதில் ஈடுபட்டிருந்தனர். ஆயினும் ஆயிரம் ரூபா தாள்கள் தாராளமாக இந்த மக்களுக்கு வழங்கப்பட்டதோடு சிறையில் உள்ளவர்கள் வீடு திரும்புவதற்கும் அல்லது விடுவிக்கப்பட்டவர்கள் உயிர் வாழ்வதற்கும் உங்களது வாக்குக்களில் தான் தங்கியிருக்கிறது என்றும் மக்களை விரட்டியிருக்கிறார்கள் E.P.D.P. யினர்.

## திருமலை குச்சவெளியில் இருட்டடி



இந்திய வம்சாவளியைச்சேர்ந்த தேனீர் கடை நடாத்திவரும் ஒருவரின் மகள் சிங்கள இராணுவ வீரர் ஒருவருடன் காதல் தொடர்பு வைத்திருந்திருக்கிறார். மாலை வேளைகளில் அந்த பெண் வீட்டிக்கு சைக்கிளில் குறித்த இராணுவ வீரர் சாதாரண இளைஞர் போல் வந்து போவது வழக்கம். இதை அறிந்த இளைஞர் குழு ஒன்று சிங்கள சிப்பாய் வீட்டுக்குள் போனதும் திடீரென வீடு புகுந்து விளக்குகளை அணைத்துவிட்டு வீட்டிலுள்ள அத்தனை பேருக்கும் சரமாரியாக கட்டை, பொல்லுகளால் தாக்கிவிட்டு ஓடிவிட்டார்கள்.

## மாவீரர் துயிலும் இல்லத்தில் மஞ்சள் சிகப்பு துணிகள்



கடந்த 20.07.2011 அன்று முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் (முல்லை) கனகரட்ணமும் மகிந்தவின் சகாவான ஸ்ரீரங்காவும் இன்னும் சில சிங்கள அரசியல்வாதிகளும் இணைந்து யோகபுரம் வைத்தியசாலை முன்பாக மக்களை அழைத்து சேலை, சாரம், வேட்டி மற்றும் சில வீட்டுப்பாவனைப்பொருட்களும் வழங்கப்பட்டு தமிழர் கூட்டமைப்பை புறக்கணிக்குமாறு தேர்தல் பிரச்சாரமும் மேற்கொண்டிருந்தனர். அன்று இரவு அவர்களால் வழங்கபட்ட பெருமாலான சிகப்பு, மஞ்சள் சேலைகள் கத்தரிக்கப்பட்டு மாவீரர் துயிலுமிடத்தில் உள்ள வேலிகளிலும் மரங்களிலும் கட்டித்தொங்கவிடப்பட்டிருந்தது. இதை அறிந்து இராணுவம் பொலிசாரும் அவ்விடம் வந்து பொதுமக்களை அச்சுறுத்தியதோடு அவர்களைக்கொண்டே அத்துணிகளையும் அகற்றி வைத்தனர்.

# விஜய் தமிழன துரோகியா....? கோர்த்துவிடும் நக்கீரன்...

நான் என்ன சொல்றன்னா.. திருமாவளவன், ராஜபக்சேவை இலங்கைக்கே போய் கொஞ்சிட்டு வந்தாரே அப்ப, இந்த இயக்கத்தினரும், நக்கீரனும் திருமாவளவனுக்கு எதிராக கையெழுத்து இயக்கம் நடத்த வேண்டியதுதானே..ஏண்டா இப்படியே இன்னும் எத்தனை நாளைக்கு கையெழுத்து,உண்ணாவிரதம்,மனித சங்கிலின்னு தமிழனை ஏமாத்துவீங்க..?

ஆந்திராவுல பாரு, எங்களுக்கு தெலுங்கானா வேணும்னு எம்.பி.எம்.எல்.ஏ எல்லாம் ஒரே நேரத்துல ராஜினாமா செஞ்சி மத்திய அரசை குலை நடுங்க வைக்கிறானுக....பந்த் நடத்தி அதிர வைக்கிறனுக...ஆனா ஒரு இனத்தையே அழிக்கும் நாட்டை ராஜப்க்சேவை கண்டித்து போறாட்டம் நடத்துறானுக.. எப்படி தெரியுமா... ராஜபக்சேவை திட்டாம உண்ணாவிரதம், கையெழுத்து இயக்கம், பிரதமருக்கு தந்தி, மனித சங்கிலி, நடை பயணம்... இதுவா போராட்டம்..?

விஜய் கையெழுத்து போடலைன்னா ராஜபக்சேவை தண்டிக்க முடியாதா...?தமிழன்கிட்ட கையெழுத்து வாங்குறேன்னு சொல்லிகிட்டு பிரபலங்களிடம் போய் தொல்லை செஞ்சி கட்சியை தான் வளர்த்துறீங்க...பட்டி தொட்டி,கிராமமெல்லாம் போங்க... அவங்களுக்கு ராஜபக்சே யாருன்னு கூட தெரியாது... அதை விளக்கமா சொல்லுங்க..அவன் செஞ்ச கொடுமைகளை சொல்லுங்க...அதை விட்டுட்டு நடிகன், நடிகையோட பொ....க்கு பின்னாடியே அலைஞ்சுகிட்டு ஃபோட்டோ எடுத்துகிட்டு.....தமிழனை காக்குறானுகளாம்...போங்கடாங்..!

### விஜய் துரோகியா? — ஒரு ரசிகனின் குமுறல்!

கடந்த காலத்தில் அதாவது காவலன் வந்த காலத்தில் அண்ணன் டாக்டர் விஜய் ஈழத்தமிழருக்கு ஆதரவா கொந்தளித்து குரல் கொடுத்தது உண்மைதான்!

அவர்கள் இப்போது வேலாயுதம் படம் ரிலீசாவதால் இந்த நேரத்தில் எதையாவது பண்ணினால் படம் இலங்கையில் தடை செய்யப்பட்டு விடுமென்பதால் அண்ணன் பம்முவதாகவும் கூறுகிறார்கள். சிரிப்புத்தான் வருகிறது இவர்களைப் பார்த்தால்! என்ன ஒரு அறியாமை!

அவர்களுக்காக நான் ஒன்றைக் கூறிக் கொள்கிறேன்!

அண்ணன் தனது இடைவிடாத நற்பணிகளுக்கு மத்தியிலும் இலங்கையை உலக வரைபடத்திலிருந்து தூக்கி விடுவதாக அண்ணன் விட்ட சவால் உங்களுக்கு நினைவிருக்கா? அண்ணனே மறந்திருந்தாலும் நாங்க மறக்கமாட்டோம்! அண்ணனின் அந்தப்பேச்சால் அண்ணனின் எத்தனை ரசிகர்கள் இலங்கையை விட்டே அவசரமா வெளிநாடுகளுக்கு ஓடினார்கள், எத்தனை பேர் இன்னும் பீதியுடன் இங்கே வாழ்கிறார்கள் என்று தெரியுமா?

இந்த சம்பவத்திற்குப் பிறகு சர்வதேசமே அண்ணனின் நடவடிக்கைகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இந்தக் கையெழுத்து எவ்வளவு தீவிரமான விளைவை ஏற்படுத்தும் என்பதை ஏன் இவர்கள் புரிந்த கொள்ள மறுக்கிறார்கள்?

திமுக வின் படுதோல்விக்கு என்ன காரணம்? இதற்கான பதில் தேடி பத்திரிகையாளர்கள், பதிவர்கள், உடன்பிறப்புகள், ஏன் ஜெயலலிதா கூட தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தபோது எஸ்.ஏ.சி. அதற்கான காரணத்தை மிக எளிமையாக விளக்கினார். அதாகப்பட்டது,

'கடந்த தேர்தலில் புதிய வாக்காளர்களில் ஐம்பது வீதமானோர் விஜய் ரசிகர்கள்!'

மீதி ஐம்பது வீதம்?

அவர்கள் எஸ்.ஏ.சி.யின் ரசிகர்கள் என்பதை அவர் சொல்லி நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை!

*நன்றி இணையம்.*

# ஜோக்ஸ்...

1. வாட்டர் மேலே போட் போனா உல்லாசம், போட் மேலே வாட்டர் போனா கைலாசம்

---

2. என்ன சார்? ஸ்விட்ச்போர்டுல தண்ணி ஊற்றி கழுவறீங்க?ஷாக் அடிச்சிடாது?

தம்பி! நீங்க தமிழ் நாட்டுக்கு புதுசா? சூமின் வெட்டு விட்டு(றுஜவு)

---

3. காதலுக்குத்தெரிந்தது இரண்டே இரண்டு தான்

1. அழ வைப்பது 2 .அலைய வைப்பது,

காதலிக்குத் தெரிந்ததும் 2 தான்

1.விழ வைப்பது 2 நிலைகுலைய வைப்பது

4. சிவப்பான பொண்ணு தான் வேணும்னு சொல்ற கறுப்பான பசங்களே! பெட்ரோமாக்ஸ் லைட்டே தான் வேணுமா?

---

5. ஏம்மா,அந்த பேஷண்ட் ஏன் மிட் நைட்ல க்ளினிக்கை விட்டு ஓடிப்போய்ட்டாரு?

எந்த நர்ஸையும் பிடிக்கலையாம் டாக்டர்

---

6. தி.மு.க.,வை ஆட்டவோ, அசைக்கவோ முடியாது: கருணாநிதி சூஎன் தலைவரே? கட்சில இருக்கற எல்லோருக்கும் கல் மனசுன்னு சூசகமா சொல்றீங்களா?

---

7. வயசுப்பசங்க அதிகாலையில் துயில் எழுவது எதனாலே?

ஃபேஸ் புக்கில் ஃபோர்ஜெரி செய்து

# தத்துவங்கள்...

1. நமக்காக காத்திருக்கும் அன்பும்,நம்மை காக்க வைக்கும் அன்பும் என்றுமே அழகு தான்

---

2..அன்பு கொண்டவரைப்பார்க்கும்போது கண்களில் தோன்றும் சந்தோஷத்தை விட அவரைப்பிரியும்போது வெளிவரும் கண்ணீர் அதிகமாக இருக்கும்

---

3. வெற்றியும் தோல்வியும் நிரந்தரம் அல்ல, ஜெயிச்ச பின்னும் உழைப்பை விடாதே! தோற்ற பிறகு முயற்சியை விடாதே!

---

4. என் காதலுக்காக நான் எல்லாவற்றையும் இழந்தேன்,அவள் உண்மையான காதலை மட்டும் இழந்தாள் ஒரு தலைக்காதலின் வலி

4. நாம் வாழும்வரை நம்மை யாரும் வெறுக்கக்கூடாது,நாம் இறந்த பின் நம்மை யாரும் மறக்கக்கூடாது

---

5. உன்மேல் உண்மையான அன்பு வைத்திருப்பவர்கள் நீ மழையில் அழுது கொண்டிருந்தால் கூட கண்டுபிடித்து விடுவார்கள்

---

6. நேசித்த பின் மறந்தால் அது வெறும் நினைவுகள்,மறந்த பின்னும் நேசித்தால் அதுதான் உண்மையான உறவுகள்

---

7. உண்மையான அன்புள்ளவனுக்கு அழுக்கு கூட அழகாகத்தெரியும். புற அழகைவிட அக அழகில் தான் உண்மையான அன்பு ஊறிக்கிடக்கும்.

# விடுதலை வேண்டும்!

அன்றொருநாள் நான் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். எனக்கு முன் இருக்கைகளில் இரண்டு தமிழ் மங்கைகள் தம்மை மறந்து, சூழலை மறந்து தம்மிடையே பேசிக் கொண்டது என் காதுகளிலும் விழுந்தது.

முதற்பெண்: - *'அண்ணாக்கு ஒரு கலியாணம் பேசி வந்திருக்கு. பொம்பிளை ஒரு 'அசிஸ்ரன்ற் லெக்சராம்.' சாதகமும் நல்ல பொருத்தமாம். அம்மா ஊரில இருந்து போட்டோ அனுப்பியிருக்கிறா. கொஞ்சம் நிறம் குறைவாயிருந்தாலும் பொம்பிள பாக்க பரவாயில்ல.'*

இரண்டாம் பெண்: *'உம்மட அண்ணா என்ன செய்யிறார்'*

மு.பெண்: *'அவர் பெற்றோல் ரேஷன்நடத்துறார். வசதியாத்தான் இருக்கிறார். சொந்த வீடும் வாங்கிப் போட்டார். நானும் அவற்ர வீட்டிலதான் இருக்கிறன்.'*

இ.பெண்: *'அப்ப என்ன? அண்ணி கெதியா வந்திட்டா உமக்கும் உதவியாக இருக்கும்தானே!'*

மு.பெண்: *'அதில்லை, சீதனத்தில கொஞ்சம் இழுபறியா இருக்கு. அண்ணை கொஞ்சம் காசு கூடக் கிடைச்சா தன்ர கடனைக் குறைக்கலாம் எண்டு நினைக்கிறார் போல கிடக்கு. அதோட தன்னிலும் பார்க்க ஒரு 5 அல்லது 6 வயசு குறைஞ்ச பொம்பிளையா எதிர்பார்க்கிறார் போல கிடக்கு'.*

இ.பெண்: *'உம்மட அண்ணைக்கு இப்ப எத்தினை வயசு'*

மு.பெண்: *'ஓ! அவருக்கு இந்த வருஷத்தோட 33 முடியப்போகுது. ஊரில ஏ.எல். முடிச்சுப்போட்டு இங்க வந்தவர். வேலைவேலையெண்டு கஷ்டப்பட்டுத் திரிஞ்சதில வயசும் ஏறீட்டுது. வேற எங்களயெல்லாம் காசு கட்டி எடுப்பிச்சது அவர்தானே. அதால அவர் தன்ர கலியாணத்தைப்பற்றி யோசிக்காமல் இருந்திட்டார். அதாலதான் வயசும் ஏறீட்டுது. அந்தப் பொம்பிளைக்கு 30 வயசாம். அதால கொஞ்சம் யோசிக்கிறார். அதுதான் சீதனத்தக் கொஞ்சம் கூட்டிக் கேட்டா கிடைக்கும் எண்டு நினைக்கிறார் போல கிடக்கு'.*

'அட் கோதாரியில போறவங்களே! உங்களையெல்லாம் நம்பிப் பெண்ணைப் பெத்தவர்கள் தங்கள் அருமைப் பிள்ளைகளைத் தாரைவார்த்துக் குடுக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டு விட்டார்களே!' என்று எனது உள் மனம் பதறியது.

ஜாதகம், பொருத்தம் இவற்றின்மேல் உள்ள மூட நம்பிக்கையினால் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றும் ஒரு பட்டதாரிப் பெண்ணை சாதகப்பொருத்தம் என்ற ஒரே காரணத்தினால் ஏ.எல். படித்துவிட்டு பெற்றோல் ஸ்ரேஷன் நடாத்திக் காசுபண்ணும் ஒரு மாப்பிளைக்குக் கட்டி வைப்பதற்குச் சம்மதிக்கிறார் ஒரு தகப்பன். அத்துடன் தன்மகள் வெளிநாட்டில் பாதுகாப்பாக வாழமுடியும் என்ற ஒரு நம்பிக்கையும் அத் தந்தையை எவ்வளவு கடன்பட்டாலும் இத்தகைய கலியாணத்திற்கு உடன்பட வைக்கிறது.

பெண்ணுக்கு வயது ஏற ஏற பெற்றோரின் கவலையும் ஏறிக் கொள்கிறது. பெண்ணின் விருப்பு, எதிர்பார்ப்பு, மாப்பிள்ளையின் தராதரம் இவை எவற்றையுமே பெற்றார் எண்ணிப் பார்ப்பதில்லை. பெண் கரைசேர்ந்தால் போதும் என நினைக்கிறார்கள். அவர்களுடைய கடமை கல்யாணத்தோடு முடிந்துவிடுகிறது.

இவை எல்லாவற்றையும் மீறி இங்குள்ள மாப்பிள்ளைமார் சீதனம் என்ற பெயரில் ஊரில் வாழும் பெற்றோர்களை மேலும் மேலும் கடனாளிகளாக்குவது கொடுமையிலும் கொடுமை. ஊரில் பெரிய வீடு, உடல் தாங்காத அளவு தங்க நகைகள், பெண்ணின் பெயரில் வங்கியில் பல லட்சம் ரூபாக்கள். அதற்கும் மேலாக இனாம் என்ற பெயரில் மேலும் கொள்ளையடிப்பு. வெட்கமாயில்லை?


நாங்கள் வளர்ந்துவரும், ஒரு வறுமையான நாட்டிலிருந்து வந்து, அறிவு வளர்ச்சி பெற்ற, பரந்த சிந்தனை கொண்ட மேற்குலக நாடொன்றில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் சீதனம் என்ற பெயரில் மாடுகளுக்கு விலைபேசுவது போல் மாப்பிள்ளைமாருக்கு விலை பேசுகிறோம். ஊரிலே சீதனம் கேட்பதற்கு ஒரு காரணம் கூறுவார்கள். அதாவது புதிதாக வாழ்க்கையைத் தொடங்கும் இளம் குடும்பத்தினர் நலிவுற நேரிட்டால் இது அவர்களுக்கு ஒரு துணையாக இருக்கும் என்பதாகும். இதைச் சரியான வாதமாக ஏற்றுக்கொண்டாலும் அக்காரணத்தை இங்குள்ள மாப்பிள்ளைகளுக்கு ஏற்ற ஒரு காரணமாக ஒப்பிக்க முடியாது.

இங்குள்ள மாப்பிளைகளுக்குச் சீதனம் ஏன்? இங்கு வேலை இல்லாவிடில் அரசாங்க உதவி உண்டு. வாழ்வதற்கு வீடு கிடைக்கிறது. 'ஜொப் சீக்கேர்ஸ் எலவன்ஸ், இன்கம் சப்போர்ட், ஹவுசிங் எலவன்ஸ்' என அரசாங்கமே எல்லா உதவிகளையும் செய்கிறது. எனவே சீதனம் என்பது மற்றவன் வியர்வை சிந்தி உழைத்த பணத்தைச் சுரண்டி வாழும் முயற்சியாகும். தன்மானம் அற்றவர்களா தமிழ் இளைஞர்கள்?

மேலைநாட்டு நாகரிகம், உணவு, உடை, பேசும் விதம் என எல்லாவற்றையும் பின்பற்றும் நாம் சீதன விடயத்தில் இன்னும் மாறாமல் இருப்பது ஏன்? மேலைநாட்டு இளைஞர்கள் சீதனம் வாங்குகிறார்களா? இல்லையே. அவர்களுடைய தேவையற்ற பழக்கவழக்கங்களை விட்டுவிட்டு நல்லவற்றை நாம் ஏன் பின்பற்றக்கூடாது? இளைஞர்களே! பெற்றோர் மீது பழியைப் போட்டுவிட்டு தப்பித்துக் கொள்ள முயலாதீர்கள். நீங்கள் நினைத்தால் இந்த சீர்கேட்டை நிறுத்த முடியும்.

பத்திரிகைகளிலும் இணையத்தளங்களிலும் காணப்படும் ஏராளமான 'மணமகள் தேவை' விளம்பரங்களில் ஒன்றிலாவது 'சீதனம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது' என்று பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. தேசவிடுதலை வேண்டி நிற்கும் வீர இளைஞர்களே! முதலில் இச்சீதனக் கொடுமையிலிருந்து எமது இளம்பெண்களுக்கு விடுதலை கொடுங்கள். இச் சீதனக் கலாச்சாரத்தால் சீரழிந்து நிற்கும் இளம் பெண்களின் எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கும்பொழுது 'நெஞ்சு பொறுக்குதில்லையே'

*-விசித்திரப்பிரியன்.*




## சுடுகவி.. 01

குமரிகள் பாட்டியில்
கோலங்கள் அணிய
பாட்டிகள் பலபேர்
பஞ்சாபி அணிய
சொட்டைத்தலைக்கும்
சொர்க்கம்தான் பாருங்கோ...

# தேசியத்தைக் கெடுக்கும்..

*(18ம் பக்க தொடர்ச்சி)*

நமது சமூகத்தின் முன்னேற்றத்தைக் கெடுக்கும் சாதியம் ஒட்டு மொத்த தமிழினத்தின் அடிப்படையுரிமைகளுக்கும், தேசியவுணர்வுக்குமெதிராகச் செயற்பட்டுவிடாமல் பார்க்கவேண்டியது தமிழனாய்ப் பிறந்த ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

உள்ளுராட்சித் தேர்தலில் அரசாங்கத்தின் செல்வாக்கினைக் கூடப் பொருட்படுத்தாமல் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாக வாக்களித்து பெரும்பாலான மக்கள் தங்களது கடமையைச் செய்திருக்கிறார்கள். மக்களின் இந்த ஆதரவைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டியது தேசியக் கூட்டமைப்பின் தலையாய கடமையாக இருக்கிறது. அரசாங்கத்தை எதிர்த்து தம்மை ஆதரித்த மக்கள் சக்தியை அரசின் அசூயைக்கு ஆளாக்காமல் ஓர் பெரிய பலம்மிக்க சக்தியாக மாற்றியமைக்க வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளிலேயே தங்கியுள்ளது. அரச செல்வாக்குமிக்க தேசிய எதிர்ப்புச் சக்திகள் தம்மை ஆதரிப்பவர்களுக்குச் செய்யும் நன்மைகளைவிடப் பன்மடங்கு நன்மைகளை தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆதரவாளர்களுக்குச் செய்யக்கூடிய விதத்தில் அரசுடன் பேச்சு வார்த்தைகளை நடத்திச் செய்யத் தொடங்குவார்களாயின், தேசிய எதிர்ப்பாளர்களின் செல்வாக்கை இல்லாமல் செய்துவிட முடியும். இதனால் சாதீயம் போன்ற தடைக்கற்களை உடைத்தெறிந்து எமது தமிழ்த் தேசியத்தை வளர்த்தெடுக்க மக்களுக்குப் போதிய அறிவூட்டலும், நலன்புரிதலும் இன்றியமையாததாய் இருக்கின்றன.

தற்போது தேசிய எதிர்ப்பாளர்கள் அரசாங்கத்தின் உதவியாடு தமது ஆதரவாளர்களுக்குப் பல்வேறு நன்மைகளையும் செய்வதால் அவர்களின் ஆதரவைப் படிப்படியாகப் பெற்று வருகின்றனர். அரச ஆதரவின்றி எதையும் சாதிக்க முடியாதாகையால் ஒத்துழைப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் போதிய நன்மைகளைத் தமிழ் மக்கள் பெறக்கூடிய விதத்தில் கூட்டமைப்பினர் அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொள்ள வேண்டியதே இன்றுள்ள தேவையாகும்.

தமிழ் மக்கள் சாதீய அடிப்படையில் தனிக்குழுக்களாகத் திரண்டு அனைத்தையும் குட்டிச்சுவராக்கும் நிலைமையைத் தமிழ்த்தேசியத்தை தற்போது வழிநடத்தும் தலைமைகள் சும்மா பார்த்துக் கொண்டிருக்காமல், சாதீயத்துக் கெதிராகப் போராடவேண்டிய காலம் வந்திருக்கிறது. அத்தகைய போராட்டங்களை எப்படி முன்னெடுப்பது என்பதே இன்றுள்ள கேள்வி.

தொடருவம்.....

## தலைமுறை விளையாட்டு



பதுங்கு குழிக்குள்ளும்
படமெடுக்குது பாம்பு
முள்வேலியும் அகதிமுகாமுமாய்
முகாம்களில் விளையாடும்
குழந்தைகள்.

சப்பித்துப்பிய எலும்புகள் ஏந்திய
பேய்களும் பிசாசுகளும் புரியாத
மொழி பறைய சொல்லாமலே
புரிகிறது நம்மைப் பிடித்த
நோய்கள் இவர்களென.

இரத்த வாடை
குறைந்திருந்தாலும்
ஈழமுகாம்களின் வாசல்கள்
மூடப்படவில்லை.

நிலத்தின் மீதான பெருங்கனவு
கலைக்கப்பட காலைகள்
விடியாமலே.

"ஆமி சுடுறான் ஓடு ஓடு ஒளி
குண்டு விழுந்திட்டுது
அப்பாவைக் காணேல்ல"
குழறி அழுகிறா அம்மா

விளையாட விடுங்கள்
எங்கள் குழந்தைகளின்
கண்களைக் கட்டாமலே
தோழனின் கண்ணைத்
தோண்டியவனை,
தாயின் மார்பறுத்தவனை
அடையாளம் காணட்டும்.

பேசவிடுங்கள்...
மண்டையோடுகளோடும்
மூடிய மண் கிளப்பும்
பெருமூச்சுக்களோடும்!!!!

- ஹேமா

MASS GLOBAL SHIPPING

MASS GLOBAL SHIPPING

Sea - Air - Road & Ticketing , Serving all the Sri Lankan Communities

MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK

Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers

• Packers • Movers • Shippers

We Offer the Best Services than all the Other in the trade!

Special rates for Containers and Machinery

4 Collection Points : Harrow, Warford, Knightsbridege, Croydon

FREIGHT ONLY £10.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)

Wooden boxes from £9.00
Call 0208 3862314
Contact : Das - 07852266400
Hot Line 24/7- 079 4010 8177

Local Collection Charge £5.00 upto Hounslow. Within M1 collection charge £15.00 upto Conventry All other area's we will offer the best rates



MASS GLOBAL SHIPPING
Warehouse, 652, Victoria Road Ruslip, HA40LN
E-Mail: Info@massshipping.com,
Web : www.massshipping.com

*Condition Apply Warming
No hidden charges
No bnognus promotions

ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ____________

Address : ____________

Postcode: ____________

Telephone: ____________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும்; G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. Age 25 , 5' 6", Australia, Graduate, working as a software Engineer for government, Ref 3470.

2. Age 30, 5' 8", UK, Electronic &Electrical Engineer,Looking for a suitable Bride, Ref 3441.

3. Age 32 , 5' 5", UK, chartered architect, Looking for a suitable Bride,Ref 3438.

4. Age 29, 6' 1", UK(student visa), doing MBA, working part time, Ref3437.

5. Age 27, 5' 7", UK,Graduate, working as a Professional Travel consultant , Ref 3428.

6. Age 45 , 5' 8", UK, Accountant, Looking for a suitable Bride, Ref 3422.

7. Age 28 , 5' 8" , UK PR , Graduate , working in Public Service , Ref 3419.

8. Age 34, 5' 10", Doha, Engineer, Looking for a suitable bride , Ref 3412.

9. Age 27, 5' 8", India, Civil Engineer Doing own construction Business , Ref 3411.

10. Age 32 , 5' 11" , British Citizen Engineer,Looking for a suitable bride , Ref 3407.

11. Age 30 , 6' 0" , UK(student visa) doing MBA , working part time , Ref 3376.

12. Age 29 , 5' 9", French citizen living in UK , BEng Electronics , Self employed , Ref 3374.

13. Age 31 , 5' 8" , UK(HSMP visa) , Engineer , working as an Engineer at mobile company , Ref 3373.

14. Age 33, 5' 7", Canada PR, Graduate, working as a computer engineer, Ref 3367.

15. Age 27, 5' 8", UK(student visa), doing MBA , working part time, Ref 3361.

16. Age 33, 6' 2", UK PR , Divorced, Engineer , Ref 3360.

17. Age 30, 5' 6", UK(PSW visa), Engineer, Looking for a suitable bride, Ref 3352.

18. Age 35, 5' 5", British Citizen, Graduate , working in Public Service, Ref 3346.

19. Age 30, 5' 8", UK , MSc Qualified, working as business analyst, Ref3344.

20. Age 36, 5' 9", UK PR, Graduate, working in a marketing agency , Ref 3337.

21. Age 24 , British Citizen , Studying ACCA , working in the NHS finance department , Ref 3327.

22. Age30, 5'9", UK(PSW visa), Graduate , working as a deputy manager Ref 3325.

23. Age 33, British Citizen, Accountant , Looking for a suitable bride , Ref 3323.

24. Age 29, 5' 6", British Citizen Graduate , working at a Telecom company Ref 3306.

25. Age31 , 5' 11" , UK , Doctor , Looking for a suitable bride , Ref 3304.

26. Age 29, 5' 8", British Citizen Graduate, working as a Senior Management Consultant/Project designer , Ref 3301.

27. Age 46 , 5' 11" , UK , Divorced , Doctor ,Looking for a suitable bride Ref 3298.

28. Age27 , 5'9" , UK , Engineer Looking for a suitable bride , Ref 3293.

29. Age 35 , 5' 5" , UK(student visa) doing MBA , working part time , Ref 3292.

30. Age 30, 5' 5" , British Citizen Graduate , working as a Senior Software Engineering , Ref 3291.

31. Age 32, 5' 3", UK(student visa) studying MSc in Information Security, working part time, Ref 3281.

32. Age33 , 6' 0", UK(PSW visa) Engineer , Looking for a suitable bride , Ref 3266.

33. Age 36 , 5' 8" , UK(HSMP visa) BEng & MBA , working as a IT Consultant , Ref 3256.

34. Age 31 , 5' 6" , German citizen , Live in UK , Engineer , Looking for a suitable bride , Ref 3254.

35. Age 31 , 5' 9" , UK(HSMP Visa) , Engineer , Looking for a suitable bride , Ref 3233.

36. Age 32 , 5' 10" , Canadian PR , Post Doctoral , Looking for a suitable bride , Ref 3228.

37. Age 29, 5' 10", UK(PSW visa), Engineer, Looking for a suitable bride , Ref 2728.

38. Age 29, 5' 9", British Citizen , MSC in Engineering , Looking for a suitable bride , Ref 2557.

39. Age32 , 5' 8" , UK(student visa) , finished Software Engineering in Sri Lanka , now studying Association of Business Executives (ABE) , working part time , Ref 2440.

40. Age 34 , 5' 11" , British Citizen , Doctor , Looking for a suitable bride Ref 1006.

41. Age 27 , 5' 10" , British Citizen Graduate , working as a Financial Risk Analyst , Ref 1825.

42. Age 40 , 5' 8" , British Citizen , Accountant , Looking for a suitable bride , Ref 1895.

43. Age 33 , 5' 9" , Canadian PR , Engineer , Looking for a suitable bride , Ref 1944.

44. Age 32 , 5' 82 , UK PR , Engineer Looking for a suitable bride , Ref 2106.

45. Age41, 5'7", UK, Accountant Looking for a suitable bride , Ref 1457.

46. Age 35, 5' 11" , UK PR , Engineer Looking for a suitable bride , Ref 1693.

47. Age 30 , 5' 7" , British Citizen , Doctor , Looking for a suitable bride , Ref 1729.

48. Age 37 , 5' 4" , British Citizen , Electrical & Electronic Engineer , Looking for a suitable bride , Ref 2149.

49. Age 29, UK, working as a software engineer, Looking for a suitable bride, Ref 2352.

50. Age 33, 5' 8", Sri Lanka, civil engineer,Looking for suitable bride, Ref2371.

51. Age 31, 5' 7", British Citizen, Living in Norway, Self employed, Ref 2395.

52. Age35, 5'2", British Citizen, Graduate, Self employed, Ref 2396.

53. Age43, 5' 7", UK, Graduate, working as a computer consultant, Ref 337.

54. Age 40, 5' 11", UK, Civil Engineering, Looking for a suitable bride, Ref 340.

55. Age 35, 5' 7", UK, BEng (electronic), Looking for suitable bride, Ref 350.

## மணமகன் தேவை

1. Age 32, 5' 3", Sri Lanka, Doctor, Looking for a suitable groom, Ref 3469.

2. Age 29, 5' 4, UK(student visa), studying in the medical sector, working part time, Ref 3461.

3. Age 23, 5' 4", German Citizen, Living in UK, studying Electronic engineering, Looking for a suitable groom, Ref 3455.

4. Age 39, 5' 3", Sri Lanka, Engineer, Looking for a suitable groom, Ref 3453.

5. Age 27, 5' 6", India, Graduate, Administrative Service, Looking for a suitable groom, Ref 3451.

6. Age 24, 5' 5", British Citizen, Graduate, working in Public Service, Ref 3436.

7. Age 29, 5' 5", Sri Lanka,Graduate, working as senior software engineer, Ref 3434.

8. Age 28 , 5' 3", UK PR, Divorced, one child, Graduate, Ref 3418.

9. Age 29, 5' 6", UK , Divorced, Graduate, Ref 3404.

10. Age 25, 5' 2", Sri Lanka, Graduate, working as a Financial Adviser, Ref 3406.

11. Age 25, 5' 3", UK, Graduate, working in Public Service, Ref 3392.

12. Age 29, 5' 5", British Citizen, Doctor, Looking for a suitable groom, Ref 3390.

13. Age 30, 5' 3", British Citizen, PHD in chemical engineering, Looking for a suitable groom, Ref 3389.

14. Age 24 , 5' 5", British Citizen , Graduate , Administrative Service , Ref 3388.

15. Age 29 , 5' 2", British Citizen, Financial Sector, Looking for a suitable groom, Ref 3382.

16. Age 29 , 5' 4", UK(student visa), BSc Computer Science, Looking for a suitable groom, Ref 3381.

17. Age 27,5' 5", British Citizen, Accountant, working as a Commercial Financial Analyst , Ref 3371.

18. Age 32, 5' 6", British Citizen, ACCA qualified, working in bank as manager, Ref 3365.

19. Age 31, Canada Citizen, Graduate, working as a Marketing Manager, Ref 3363.

20. Age 40 , 5' 2", British Citizen, Accountant, Looking for a suitable groom, Ref 3362.

21. Age 26, 5' 8", British Citizen, Medical Sector, Looking for a suitable groom, Ref 3359.

22. Age 42, 5' 6", Canadian PR, Medical Sector, Looking for a suitable groom, Ref 3358.

23. Age 34 , 5' 5" , Canadian Citizen , working as computer programmer , Looking for a suitable groom , Ref 3342.

24. Age 29 , 5' 5" , British Citizen , Accountant , working as a Production Accountant , Looking for a suitable groom ,Ref 3316.

25. Age 32, 5' 2", British Citizen, Graduate, Financial Sector, Ref 3309.

26. Age 27 , 5' 3", British Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 3308.

27. Age 33 , 5' 2" , British Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 3307.

28. Age 26 , 5' 6" , Sri Lanka , Graduate , Administrative Service , Ref 3299.

29. Age 26 , 5' 2" , Australian Citizen , Engineer , Looking for a suitable groom , Ref 3282.

30. Age 28 , 5' 3" , British Citizen , Engineer , Looking for a suitable groom , Ref 3275.

31. Age 32 , 5' 2" , British Citizen , Accountant , Looking for a suitable groom , Ref 3420.

32. Age 30 , 5' 6" , British Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 3423.

33. Age 28 , 5' 8" , UK , Engineer , Looking for a suitable groom , Ref 865.

34. Age 30, 5' 7", Sri Lanka, Engineer Looking for a suitable groom , Ref 3340.

35. Age 41 , 5' 6" , British Citizen , Living in Australia , Graduate , working as a Pharmacist,Ref 3290.

36. Age 30 , 5' 4" , Australian Citizen Doctor , Looking for a suitable groom Ref 3232.

37. Age 32 , 5' 4" , British Citizen Architect , Looking for a suitable groom , Ref 3227.

38. Age 28 , 5' 3", UK , Engineer , Looking for a suitable groom , Ref 3275.

39. Age 30 , 5' 5" , Canadian Citizen , doing a PhD in Sociology , working part time , Ref 3253.

40. Age 29 , 5' 5" , Sri Lanka , Lawyer , Looking for a suitable groom , Ref 2224.

41. Age 28 , 5' 2" , Sri Lanka , Graduate , working as administrative assistant , Ref 1459.

42. Age 41 , 5' 4" , Sri Lanka , Doctor , Looking for a suitable groom , Ref 1514.

43. Age26 , 5'2", British Citizen, Graduate , working in an investment bank company as a Computer Engineer , Ref 1527.

44. Age 25 , 5' 1" , UK PR , Graduate , working as a Data Coordinator in the IT Department , Ref 1580.

45. Age 39 , 5' 7" , Canadian Citizen , Graduate , working in financial sector in a bank , Ref 1595.

46. Age 29 , 5' 4" , British Citizen , Graduate , Administrative Service , Ref 1596.

47. Age 41 , 5' 5" , British Citizen , Graduate , working as computer analyst , Ref 1678.

48. Age 30 , 5' 4 " , Sri Lanka , Doctor , Looking for a suitable groom , Ref 1695.

49. Age27 , 5'6", British Citizen , Graduate , working as a investment banker , Ref 1722.

50. Age29 , 5'5", British Citizen , Doctor ; Looking for a suitable groom , Ref 1780.

51. Age 28 , 5' 1" , German Citizen , Doctor , Looking for a suitable groom , Ref 1815.

52. Age 23 , 5' 4" , British Citizen , Doing Electronic Engineering , Ref 3455.

53. Age 24 , 5' 5" , British Citizen , Graduate , working in Public Service , Ref 3436.

54. Age 38 , 5' 3" , Sri Lanka , Accountant , Looking for a suitable groom , Ref 2194.

55. Age 38 , 5' 2 " , Sri Lanka , Engineer , Looking for a suitable groom , Ref 2201.

56. Age 23, 5' ", British Citizen, Graduate, working in an investment company, Ref 2254.

57. Age 29, 5' 2", Sri Lanka, Graduate, working as a Teacher, Ref 2392.

58. Age 26, 5' 2", UK, Engineer, Looking for a suitable groom, Ref 342.

59. Age 31, 5' 3", Canada, Graduate, working at a financial institution as an investment accountant, Ref 376.

60. Age 38, 5' 8", Canadian citizen , Accountant, Looking for a suitable groom, Ref 399.

61. Age 35, 5' 1", UK(student visa), doing a PHD, working part time, Ref 417.

62. Age 38, 5' 2", Graduate, working as a programming assistant, Looking for a suitable groom, Ref 425.

63. Age 28, 5' 3", Doctor, Looking for a suitable groom, Ref 433.

64. Age 29, 5' 5", British Citizen, doing MSc, working in Bank, Ref 455.

இணையத்தில்
மேலதிக விபரங்கள்
www.orumanam.com

# அமாவாசை விரதமும், அதன் சிறப்புக்களும்

இரா மதி
(ஒருபேப்பருக்காக)

சூரியனும் சந்திரனும் நேராக ஒரே கோட்டில் ஒரே இராசியில் சஞ்சரிக்கும் காலம் அமாவாசையாகும். அவ்வாறே இவையிரண்டும் ஒரு சேர ஆடி மாதத்தில் வரும் கடக ராசியில் சங்கமிக்கும் காலம் ஆடி அமாவாசையாகும். இவ்வாண்டும் ஆடிஅமாவாசை விரதம் 30-07-2011 அதாவது சனிக்கிழமை அனுஷ்டிக்கபடுகிறது.

சந்திரன் - மாதுருகாரகன் என்றும் சூரியன் - பித்ருகாரகன் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. ஆண்மை, ஆற்றல், வீரம் என்பனவற்றை தரவல்ல சூரியனை தந்தையாகவும், மனதிற்கு அதிபதியாக இருந்து மகிழ்ச்சி, தெளிந்த அறிவு , உற்சாகம் போன்றவைகளை தரவல்ல சந்திரனை தாயாகவும் இந்துக்கள் கருதி வழிபடுகின்றனர். இதனாலேயே தந்தையை இழந்தவர்கள் அமாவாசயையும் தாயை இழந்தவர்கள் பூரணை விரதத்தையும் கடைபிடிக்கின்றனர்.

அமாவாசை , பூரணை தினங்கள் பிதிர் தினங்களாக கொள்ளபடுகின்றன. அமாவாசை திதியானது மாதா மாதம் நிகழ்ந்தாலும் தை மற்றும் ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசை திதிகள் அதிக சிறப்பு வாய்ந்தவை. தை முதல் ஆனி வரையான காலப்பகுதி உத்தராயணகாலம் என்றும் ஆடி முதல் மார்கழி வரை தட்சனாயனகாலம் என்றும் கொள்ளபடுகின்றன. இதில் தட்சனாயன காலத்தின் தொடக்க பகுதியான ஆடி மாதத்தில் வருவதால் ஆடிஅமாவாசை விரதம் சிறப்பானதாக கொள்ளப்படுகின்றது.

பிதிர் தேவர்களை சிரத்தையோடு வழிபாடுசெய்து சிரார்த்தம் செய்வதால் பிதிர்களின் தோஷங்களில் இருந்து தோஷ நிவர்த்தி பெறலாம் என்பது இந்துக்களின் ஐதீகம். அவரவர் தந்தை, தாய், உறவுகளின் இறந்த திதிகளை தவற விட்டவர்கள் அவர்களின் பாவவினைகளை போக்குதட்பொருட்டும், அவர்கள் முக்தி இன்பத்தை அடைதட்பொருட்டும் சிரார்த்தம், தருப்பணம், பிண்டதானம் என்பவற்றை செய்வர். பொதுவாக இவை மூன்று தலைமுறையினருக்கு செய்யபடுவது வழக்கம். அதாவது, பிதுரு - இறந்தவர், பிதாமகர் - இறந்தவருடைய தந்தையார், பிதபிதாமகர் - இறந்தவருடைய பாட்டனார்.

எல்லா திதியிலும் ஏதாவது ஒரு கிரகமாவது வலு இழக்கலாம் (தோஷம்) ஆனால் அமாவாசை தினத்தன்று எந்த கிரகமும் திதிதோஷம் அடைவது இல்லை. ஆதலால் அமாவாசை திதியில் சில முயற்சிகளை ஆரம்பித்தல் வெற்றி அளிக்கும் என்று சில சித்தர் நூல்கள் சான்று பகர்கின்றன.

யாழ்ப்பாணத்து மக்கள் கீரிமலை நகுலேஸ்வரத்திலும் (கீரிமலை கேணி ,கடல்), மட்டகளப்பு வாழ் மக்கள் மாமாங்கப்பிள்ளையார் கோவில் அமிர்தகளியிலும், திருமலை வாழ் மக்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திலும் , மன்னார் மற்றும் வவுனியா மக்கள் திருக்கேதீஸ்வர பாலாவியிலும், கொழும்பு மக்கள் மோதர-முகத்துவாரம் கடலிலும் தீர்த்தமாடி தம் முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்து பிதிர்கடன் செலுத்தி வருகின்றனர்.

## எல்லா திதியிலும் ஏதாவது ஒரு கிரகமாவது வலு இழக்கலாம் (தோஷம்) ஆனால் அமாவாசை தினத்தன்று எந்த கிரகமும் திதி தோஷம் அடைவது இல்லை.

நாமும் தோஷ நிவர்த்தி, பரிகாரம் என்கிற போர்வையில் பணத்தை வீண் விரயம் செய்வதை விடுத்து, இப்படியான ஆடி அமாவாசை போன்ற புண்ணிய திதிகளில் நம்மை விட்டு மறைந்த உறவுகள் மற்றும் மூதாதயர்களுக்காக சிரார்த்தம் செய்து, அமைதியான வாழ்வதனை அவர்கள் ஆசியினால் பெற்றுயர்வோம். இதனையே வள்ளுவரும் ஒரு குறளில் பின்வருமாறு சொல்கிறார்.

*தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்*

*கைம்புலத்தா றோம்ப றலை.*

வாழ்ந்து மறைந்தோரை நினைவுகூர்தல், வாழ்வாங்கு வாழ்வோரைப் போற்றுதல், விருந்தோம்பல், சுற்றம் பேணல் ஆகிய கடமைகளை நிறைவேற்றத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளல் எனப்படும் ஐவகை அறநெறிகளும் இல்வாழ்வுக் குரியனவாம்.

*'சிரார்த்தம் செய்வோம்*

*சிறப்புடன் வாழ்வோம்'*

## பெருநிலம் : ஆதிக்கத்தின் அபாயம் படிந்திருக்கிறது...

அடர்த்தியாய் வளர்ந்துபோயிருக்கிற
பற்றைகளுக்குள் ஆதிக்கத்தின்
அபாயம் படிந்திருக்கிறது.

குழந்தைகள் தூரத்திற்கு சென்று
விளையாட வேண்டாம் என்று
அறிவுறுத்தும் தாய்மார்கள்
வேலிகளை அடைக்கவும்
கூடாரங்களுக்கு கதவுகளை
பூட்டவும் முயல்கின்றனர்.

விட்டுச் சென்ற பொருட்கள் எங்கும்
சிதைந்து கிடக்கின்றன.
மெலிந்து ஒடிந்து வந்து சேரும்
பொழுது முதலில் நிலத்தில்
விழுந்து ஆற அழவேண்டும்
போலிருக்கிறது.

கைவிடப்பட்ட சனங்களின்
நிலத்தில் எங்கும் ஆதிக்கமும்
ஆக்கிரமிப்புமே நடப்படுகின்றன.

முன்பொரு காலத்தில் அழகாயிருந்த
நமது நகரம் புதிய வடிவத்தில்
சூறையாடப்படும் புத்திகளால்
வார்க்கப்படுகிறது.

குழந்தைகள் பற்றைகளுக்குள்
படிந்திருக்கும் அபாயங்களை கிளற
முற்படுகின்றனர்.

இது எனது நகரம் இல்லைப்
போலிருக்கிறது.
இங்கு வந்திருப்பவர்கள் எனது
மனிதர்கள் இல்லைப்போலிருக்கிறது.

காலம் எங்களை இழுத்தடித்து
ஏமாற்றியிருக்கிறது.
ஒன்றுமில்லாத நிலத்தில்
சூறையாடப்பட்ட நமது
பொருட்களை இழந்து நிவாரணத்
தகரங்களில் வேகிக்கொண்டிருக்கிறது
மீளத் தொடங்குகிற வாழ்வு.

முகாங்களில் கட்டி வைத்திருந்த
மூட்டைகளுடன்
இன்னும் இன்னும் சனங்கள்
வந்திறங்குகின்றனர்.

பதிவுகளும் புகைப்படங்களும்
பேருந்துகளும் என்று
எல்லாவற்றிலும் அலைச்சலும்
துயரமும் வழங்கப்படுகிறது.
கடும் சித்திரவதைகளுக்குப்
பின்னால்
அவர்கள் தங்களை தகரங்களால்
மூடிக்கொள்கிறார்கள்.

கண்ணிவெடிகளை பணியாளர்கள்
பிடுங்கிக்கொண்டிருக்கும்
பகுதியை தாண்டி மாடுகள்
செல்கின்றன.

சிதைந்த சைக்கிள்களின் பாகங்கள்
முதல் எல்லாவற்றையும்
தேடிக்கொண்டிருக்கிறோம்.

வாழ்வுக்காக மிகத் தவிக்கிறோம்.
விட்டுச்சென்ற சமையல்
பாத்திரங்கள் முதல் புகைப்படங்கள்
வரை
எல்லாவற்றையும்
தேடிக்கொண்டிருக்கிறோம்.


இந்த நிலத்திற்கு பொருத்தமற்ற
வேறுபட்ட பொருட்களை கொண்டு
வருகிறார்கள்.
அழிக்கப்பட்ட பெருநிலமெங்கும்
சிதைவுகளிலிருந்து செடிகள்
முளைக்கின்றன.

அழிவு உறைந்துபோயிருக்கிற
அபாயச் சூழலில் இந்தக்
குழந்தைகள் புன்னகைக்கத்
தொடங்குகிறார்கள்.

- தீபச்செல்வன்
(தீபம் வலைப்பூவில்)




# தமிழ் சினிமாவைச் சிதைக்கும் நலல படங்கள்



எதுக்கு சுத்தி வளைத்து? நேரடியாவே தெய்வத்திருமகள் படத்துக்கு வருகிறேன். அருமையான படம். பார்க்க நெகிழ்ச்சியா இருக்கிறது. விக்ரம் அருமையாக நடித்திருக்கிறார். ஆத்மார்த்தமான இசை. திரைக்கதை, வசனத்தில் நெகிழ்ச்சியும், நகைச்சுவையும் இழையோடுகிறது. பார்ப்பவர்கள் பல இடங்களில் அழுகிறார்கள்.

எல்லாம் சரி. ஆனால் படம் கொண்டாடப்பட வேண்டிய படமல்ல! நல்ல சினிமா அல்ல. தமிழ் சினிமாவின் வளர்ச்சியை கேள்விக்குறியாக்கி, கேலிக்கூத்தாக்கும் படம். பொறுங்கள். திட்டாதீர்கள். முழுதாக முடித்துக்கொள்கிறேன்.

நல்ல படம் அது சார்ந்த திரையுலகை உலக பார்வையாளர்கள் முன் பெருமையாக திரையிடப்பட வேண்டுமே தவிர, உலக பார்வையாளர்கள் முன் திரையிடப்படுவதற்கே அச்சம் தருவதாய் இருக்கக் கூடாது. சில ஆண்டுகள் முன்பு ப்ளாக் என்ற இந்திப்படம் வந்தது. அருமையான திரைப்படம். ராணி முகர்ஜீயும், அமிதாப் நடிப்பில் பின்னியிருப்பார்கள். இந்திய விமர்சகர்கள், ரசிகர்கள் எல்லோருமே அந்தப் படத்தைக் கொண்டாடினார்கள். ஆனால் அந்தப்படத்தை சர்வதேச விருதுகளுக்கு அனுப்ப முடியவில்லை. ஏனெனில் அது ஒரு வேற்று நாட்டுப்படத்தின் தழுவல். அந்தப்படத்தை அனுப்ப பயந்து அதே ஆண்டு வெளிவந்த 'பெஹலி(Pehli)' என்ற படத்தை அனுப்பினார்கள். அது ராஜஸ்தானிய நாடோடிக்கதை ஒன்றைத் தழுவி எடுக்கப்பட்டது. இது போன்றதொரு பயத்தைத் தருவதுதான் தெய்வத்திருமகள் படமும். இது நல்லபடம் தான் எனினும், சர்வதேச விருதுகளுக்கு அனுப்பப்பட்டால், திரைப்படங்கள் அது சார்ந்த சமூகத்தினை உலகிற்கு காட்டும் கண்ணாடியாக இருக்கும் சூழலில், தெய்வத்திருமகன் படத்தால் நம் திரைப்படங்களுக்கு சர்வதேச அளவில் அவமானம் தான் சேருமேயொழிய பாராட்டுக்களோ, புகழோ அல்ல.

போக்கிரி என்ற தெலுங்குப்படம் தமிழில் மீள் உருவாக்கம் (ரீமேக்) செய்யப்பட்டபோது, தெலுங்கு பதிப்பில் நடித்த மகேஷ்பாபுவின் மூக்கை உரியும் சேட்டைகளைக் கூட விஜய் அப்படியே தமிழ் போக்கிரியில் செய்திருப்பார். அப்போது ஊரே அவரைக் கிண்டல் செய்தது. பிரதி அடிக்கிறான் அது இது என குறை சொல்லியது. இப்போது தெய்வத்திருமகனில் விக்ரம், Sean Pennயின் நடிப்பை மிகச்சாதாரணமாக காப்பியடித்து நடித்திருக்கிறார். இதில் என்ன வித்தியாசம் கண்டுவிட்டீர்கள். (விக்ரமை விஜய்யுடன் ஒப்பிடுவதற்காக மன்னிக்கவும். அவரின் பலபடங்களின் ரசிகனாய், அவர் நடிப்பிற்கு விசிறியாய் இருந்தும் அவரின் இந்த செயலை என்னால் ஏற்கவே முடியவில்லை)

தெய்வத்திருமகன் இயக்குனரிடம் சில கேள்விகள். அதெப்படி இணையத்தின் மூலம் உலகம் கையளவு சுருங்கியிருப்பது தெரிந்தும் தைரியமாக ஒரு படத்தை, அதுவும் ஆங்கிலப்படத்தைக் பிரதி அடிக்க முடிகிறது? ஆங்கிலப் படத்தை பார்க்கவேண்டுமென்றால் விஜய் டிவியிலும், சன் டிவிலயும் டப்பிங் செய்து ஒளிபரப்பும் போது பார்த்துக் கொள்வோமே? இதற்கு எதுக்கு நீங்கள் கஷ்டப்பட்டு இன்னொரு நடிகரை வைத்து எடுக்குறீர்கள்? மதராசப்பட்டணம் படத்திலேயே பல காட்சிகள் டைட்டானிக், லகான் படக்காட்சிகள் தான். இருந்தும் அந்தப் படத்தின் டெக்னிகல் விஷயங்களும், உங்கள் சொந்த காட்சிகள் சிலவும் உங்களை காப்பாற்றிவிட்டது.

ஆனால் விக்ரமின் சிகையலங்காரத்தில் இருந்து கையை ஆட்டி ஆட்டி பேசும் மேனரிசம் வரை அச்சு அசல் பிரதியடித்திருக்கிறீகள், இதை எப்படி நியாயப்படுத்துவீர்கள்? அதுவும் Iam Sam திரைப்படத்துக்கு ஒரு நன்றி கூட போடாமல்? நீங்கள் Inspiration எனச் சொன்னால் கூட ஏற்றுகொள்ளலாம் ஆனால் நீங்கள் Iam Sam காட்சிக்கு காட்சி தமிழில் மீள் உருவாக்கம் செய்திருக்கிறீர்கள். உலக சினிமாவை பிரதி அடித்தால் வரும் சினிமாவும் உலகசினிமாவாகத்தான் இருக்கும். இதில் என்ன பெருமை வந்துவிடப்போகிறது?

இந்தப் படத்தால் நீங்கள் சார்ந்திருக்கும் திரையுலகத்திற்கு நல்ல பெயராவது கிடைக்குமென நினைக்கிறீர்களா? ஏற்கனவே இந்தி திரையுலகை பிரதியடிப்பதில் மன்னர்கள் என உலகம் விளிக்கும் வேளையில் தமிழ் சினிமா மானத்தையும் வாங்க வேண்டுமா? Iam Sam பணம் கொடுத்து உரிமைபெற்றிருக்க வேண்டாம், குறைந்தபட்சம் வெற்றிமாறன் ஆடுகளம் படத்தில் போட்டது போல மூலப் படத்திற்கு ஒரு நன்றி கூடவா உங்களால் போட முடியாது? உங்கள் மதராசப்பட்டணம் படத்தை வடநாட்டில் ஒரு இயக்குனர் அப்படியே திருப்பி எடுத்து விட்டிருந்தால் உங்களுக்கு ஒரு நன்றி கூட சொல்லவில்லையென்றால் என்ன குதி குதிப்பீர்கள்?

படம் நல்ல பொழுதுபோக்குப்படம் தான். கேவலமான தமிழ் சினிமா சூழலில் இது போன்ற படம் நல்ல ரசனை உள்ள ரசிகர்களுக்கு நல்ல தீனிதான். ஆனால் இந்தப் படத்தை கொண்டாடினால், புதிய தலைமுறை இயக்குனர்களுக்கு மிகப்பெரிய தவறான உதாரணாம் ஆகிவிடும்.

சரியான முறையில் சரியான படங்களை பிரதி அடித்தாலே தமிழ்நாட்டில் புகழ் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தை உருவாக்கி புதிதாய் சிந்திக்கும் திறனையே காலப் போக்கில் மழுங்கடித்துவிடும். அது தமிழ்சினிமாவை உலக அளவில் கொண்டு செல்வதற்கு மிகப்பெரிய தடையாகிவிடும்.

அழகர்சாமியின் குதிரை படத்தை ஏன் நாம் இவ்வளவு கொண்டாடவில்லை? மண்ணையும், மக்களையும் சுமந்து திரியும் நெகிழ்ச்சியான கதைகள் நம் ஊரில் ஏராளமாக உண்டு. சிறுகதைகளாகவும் நாவல்களாகவும் புதைந்து கிடக்கின்றன. Iam Sam படத்தை உங்களால் பணம் கொடுத்து உரிமை பெற்று மீள் உருவாக்கம் செய்ய முடியாது. ஆனால் நம் ஊர் கதைகளை மிகச்சுலபமாக உரிமை பெறலாமே? அழகர்சாமியின் குதிரையை உலக அரங்கில் திரையிட்டால் உலகம் நம் சமூகத்தைப் பற்றி தெரிந்துகொள்ளும், நம் மதிப்பு உயரும், ஆனால் தெய்வத்திருமகனை ஒரு அமெரிக்காக்காரன் பார்த்தால் காறித்துப்புவான்!

அது தான் உண்மையான நிலமை!

*- டொன் அசோக்*

## திரை முன்னோட்டம்

# 'உச்சிதனை முகர்ந்தால்'




எல்லாக்குழந்தைகளும் இறைவனால் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. 13 வயது புனிதவதியை அறிந்தவர்கள், கனத்த மனத்துடன் இந்த உண்மையை ஒப்புக் கொள்வார்கள். இறைவனால் ஆசீர்வதிக்கப்படாத ஆயிரமாயிரம் குழந்தைகளின் அடையாளம் அவள்.

புனித நதியைப் போல உற்சாகம் பொங்க ஓடிக்கொண்டேயிருந்த புனிதவதியின் வாழ்க்கை, வானவில்லைப் போல கண்ணெதிரில் தொலைந்து போகும் கதையைக் கண்ணீர் மல்கக் கவிதையாக்கியிருக்கிறது, புகழேந்தி தங்கராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படம்.

'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படத்தின் கதை, புனிதவதி என்கிற அழகுத் தேவதையைச் சுற்றியே படர்கிறது. எனினும் இது அற்புதங்களும் ஆச்சர்யங்களும் நிறைந்த கற்பனைத் தேவதைகளின் கதை இல்லை. எல்லாச் சாத்தான்களாலும் சபிக்கப்பட்டிருக்கும் ஒரு யதார்த்த தேவதையின் கதை. அவளுடன் சேர்ந்து சிரிப்பதும், அவளுடன் சேர்ந்து அழுவதும்தான் எவருக்கும் சாத்தியம்.

புகழேந்தி தங்கராஜ் இயக்கிய முந்தைய திரைப்படமான 'காற்றுக்கென்ன வேலி' தமிழ்த் திரையுலகில் பேசாப் பொருளையும் துணிவுடன் பேசிய படம். குறுக்கே கிடக்கும் 26 மைல் கடல், மனிதநேயத்துக்குத் தடையாகிவிடக் கூடாது என்பதைத் தெளிவாக எடுத்துரைத்த படம். தணிக்கைத் தடைகளை உடைத்தெறிந்து வெற்றி கண்ட காற்றுக்கென்ன வேலியைப் போன்றே, கண்மூடித் தனமாக நசுக்கப் பட்ட ஓர் இனத்தின் வரலாற்றை, அழுத்தந்திருத்தமாகப் பதிவு செய்திருக்கிறது 'உச்சிதனை முகர்ந்தால்'

புனிதவதியாக சிறுமி நீநிகா நடித்துள்ளார். நீநிகா, தேவர் பிலிம்ஸ் தயாரித்த எம்.ஜி.ஆர். படங்களுக்கு வசனம் எழுதிய அய்யாப்பிள்ளையின் பேத்தியாராவார். உயிருக்குயிராக அவளை நேசிக்கும் பேராசிரியர் நடேசனாக சத்யராஜ், அவரது மனைவியாக சங்கீதா நடித்துள்ளனர். போலீஸ் இன்ஸ்பெக்டர் சார்லஸ் அன்டனியாக சீமான், மூத்த மருத்துவர் தெய்வநாயகமாக நாசர் நடித்துள்ளனர். லட்சுமி ராமகிருஷ்ணன், ஒரு முக்கியப் பாத்திரத்தில் நடித்துள்ளார். இவர்களுடன், அமுதன் என்கிற நாயும் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளது.

'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படத்தின் கதை, திரைக்கதையை எழுதி இயக்கியுள்ளார், புகழேந்தி தங்கராஜ். பிரபல எழுத்தாளர் தமிழருவி மணியன் வசனம் எழுதியுள்ளார். திரைப்படத்துக்கு அவர் வசனம் எழுதுவது இதுவே முதல் முறை. உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தனின் கவிதை வரிகளுக்கு மேலும் மேலும் மெருகேற்றியுள்ளார், இசையமைப்பாளர் டி. இமான். ஒளிப்பதிவு பி. கண்ணன் மற்றும் மணவாளன், படத்தொகுப்பு பி. லெனின்.

இத்திரைப்படத்தை Global Media & Etertainment as நிறுவனத்தின் சார்பில் Global Media Invest as இணைத் தயாரிப்பாளர்கள் ஸ்ரீவன் புஸ்பராஜா, சிறி பாலசுந்தரம், சிவகணேசன் தில்லையம்பலம், றமணன் கந்தையா மற்றும் விஜயசங்கர் அசோகன் ஆகியோர் தயாரித்துள்ளனர்.

ஆகஸ்ட் மாதம் 'உச்சிதனை முகர்ந்தால்' திரைப்படத்தை வெளியிடத் தேவையான இறுதிக்கட்டப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

மேற்படி திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாக்கள் யூலை 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை லண்டனில் Fairfield Concert Hall, Park Lane, Croydon, CR9 1DG லும் ஒகஸ்ட் முதலாம் திகதி நோர்வே ஒஸ்லோவிலும் நடைபெறவுள்ளன. ஈழத்து அவலங்களை வெளிக்கொணரும் ஒரு கலை முயற்சி என்ற வகையில் இத்திரைப்படத்திற்கும், இசை வெளியீட்டு விழாக்களுக்கும் சர்வதேச தமிழ் உறவுகள் தங்கள் ஆதரவினை தயங்காது வழங்க முன்வரவேண்டும் என்பதே எமது அவா!.



# சினிமா

## திரை விமர்சனம்

# காஞ்சனா: முனி-02



*நடிகர்கள்: ராகவா, லாரன்ஸ், லட்சுமி ராய்*

*இசை: தமன்*

*இயக்கம் : ராகவா லாரனஸ்*

முனி திரைப்படத்தை பார்த்துவிட்டு இதை பார்ப்பவர்களுக்கு ராகவா லாரன்ஸ் அதில் நிறைய சீன்களை சுட்டுவிட்டாரோ என தோன்றும்.அந்தளவு முனியில் உள்ள சீன்களை வசனம் மட்டும் மாற்றி பல இடங்களில் கோர்த்து இருக்கிறார் இயக்குனர் லாரன்ஸ்.

அதே கதை. அதே ஹிரோ. அதே இயக்குனர். கதாபாத்திரங்களை மட்டும் கொஞ்சம் ஷேப் அடித்து, டிங்கரிங் செய்து குலுக்கிப் போட்டால் முனி பாகம் இரண்டு ரெடி. ஒரு பேய்ப்படத்தை பார்த்து தியேட்டரே வயிறு வலிக்க சிரித்துத் தீர்ப்பது அனேகமாக தமிழ் சினிமா வரலாற்றில் இதுதான் முதல் தடவையாக இருக்கக்கூடும். ஒரு அட்டகாச காமெடி. அடுத்தக் காட்சி மயிர்க்கூச்செறிய வைக்கும் திகில். இப்படியே மாற்றி, மாற்றி அழகான சரமாக திரைக்கதையை தொடுத்திருக்கிறார் லாரன்ஸ்.

இனி கதைக்கு வருவோம். ராகவா லாரன்ஸ் கிரிக்கெட் விளையாடுவதில் கில்லியாக இருக்கிறார். ஆனால் இருட்டைக் கண்டாலே அலறி ஓடிவிடுவார். தன் அம்மா, அண்ணன் ஆகியோருடன் வசித்து வரும் ராகவா லாரன்ஸின் பொழுது போக்கே கிரிக்கெட் விளையாடுவதுதான். அப்படி கிரிக்கெட் விளையாட இடம் கிடைக்காமல், தேடி அலைந்து ஒரு புதிய இடத்தைக் கண்டு பிடிக்கிறார். அந்த இடத்தில் அனைவரும் கிரிக்கெட் விளையாடிவிட்டு திரும்புகின்றனர். அப்படி வீட்டிற்கு திரும்பும்போது, அவர் வைத்திருக்கும் ஸ்டம்பில் ரத்தக்கறை படிந்திருப்பதை ராகாவா லாரன்ஸ் கவனிக்கத் தவறுகிறார்.

இதனிடையே மச்சினிச்சியாக வரும் லட்சுமிராயுடன் காதல் ஏற்படுகிறது. இடை இடையே இவர்களது காதல் குறும்புகளும் தொடர்கிறது.சிலநாட்களுக்குப் பிறகு அவருக்குள் அமானுஷ்ய சக்திகள் புகுந்து கொண்டு சித்து வேலை காண்பிக்கின்றன. ஆணாக இருக்கும் லாரன்ஸ் திடீரென்று வளையல் அணிவதும், சேலை கட்டுவதும், மஞ்சள் தேய்த்து குளிப்பதுமாக இருக்கிறார். இதனைக் கண்ட லாரன்ஸின் அம்மாவான கோவை சரளா, தன் மகனிடம் ஏதோ ஒரு விபரீதம் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு, அவரை முஸ்லீம் சாமியாரிடம் அழைத்துச் செல்கிறார். அங்குதான் அவர் மீது ஆவி இருக்கிறது என்று தெரியவருகிறது பிளாஷ்பேக் ஆரம்பமாகிறது. சரத்குமார் ஆணாகப் பிறந்தாலும், பருவமாற்றத்தால் திருநங்கையாக மாறி காஞ்சனா என்று பெயர் வைத்துக் கொள்கிறார். இதனால் வீட்டிலிருந்து துரத்தப்படுகிறார். எல்லோராலும் உதாசீனப்படுத்தப்படுத்துகிறார். இதனால் மனம் வெறுத்து தனித்து வாழ ஆரம்பிக்கிறார். அது மட்டுமின்றி தன்னைப் போலொரு திருநங்கையை தத்தெடுத்து, டாக்டருக்கு படிக்க வைக்கிறார்.

அங்குள்ள ஏழை மக்களுக்காக 25 லட்ச ரூபாய் செலவில் மருத்துவமனை கட்ட, ஒரு இடத்தை வாங்குகிறார் காஞ்சனா. அதே இடத்தின் மேல் ஒரு கண்ணாக இருக்கும் லோக்கல் எம்.எல்.ஏ, அந்த இடத்தை அபகரிப்பது மட்டுமின்றி காஞ்சனா, அவரது குடும்பத்தினர் என மூன்று பேரை படுகொலை செய்து புதைத்து விடுகிறார். அந்த மூன்று பேரும் புதைக்கப்பட்ட இடத்தில்தான் ராகவா லாரன்ஸ், ஸ்டம்ப் நட்டு விளையாடியிருக்கிறார்.

அப்போதுதான் அந்த ஆவிகள் அவருடைய உடலில் புகுந்திருக்கின்றன என்பதை கண்டுபிடிக்கிறார்கள். தங்களை கொலைசெய்த எம்.எல்.ஏவை பழிவாங்க துடிக்கிறாள் காஞ்சனா. அவளின் பழிவேட்டை தீர்ந்ததா, ராகவா லாரன்ஸ் மீண்டும் இயல்பான மனிதாக மாறினாரா? என்பதை விறுப்பாக சொல்லி படத்தை முடித்திருக்கிறார் ராகவா லாரன்ஸ்.

ராகவா லாரன்ஸ் வழக்கப்படி நன்றாக டான்ஸ் ஆடுகிறார். ரஜினியை இமிடேட் செய்கிறார். சிகப்பு லஷ்மிராயுடன் சல்லாபிக்கிறார். டபுள் மீனிங்கிலும், சிங்கிள் மீனிங்கிளும் அம்மா, அண்ணன், அண்ணி, என்று மொத்த குடும்பமே பேசிக் கொள்கிறது. அம்மா பக்கா கோவை பாசை பேசுகிறார். அண்ணி அய்யர் பாஷை பேசி சிக்கன் சமைத்து போடுகிறார். அண்ணன் சாதாரண தமிழ் பேசுகிறார். என்ன எழவுக்கென்றே தெரியவில்லை.

கோவைசரளா, தேவதர்ஷினி, ஸ்ரீமன் என்று எல்லாருமே இந்த உத்தி புரிந்து நடித்திருக்கிறார்கள். குறிப்பாக கோவைசரளா. மனோரமாவின் உயரத்தை தாண்டுமளவுக்கு அபாரமான டைமிங் சென்ஸ் இவருக்கு. படத்தின் சரி எண்டர்டெயினர் என்றாலே அது கோவை சரளா தான். இவர் உச்சரிக்கும் ஒவ்வொரு வசனத்திற்கும் அத்தனை அப்ளாஸ். அதுவும் சாமியாரிடம் 'இது ரொம்ப டிஃபிகல்ட்டா இருக்கு சாமி' என்று சொல்லுகையில் வெடிச்சிரிப்பு எழுகிறது. பேய் இந்தியில் சம்ஜே என்று கேட்க, அதுக்கு இவர் சமஞ்சிட்டேன் என்று சொல்லுமிடத்தில் சிரிக்காதவர் யாருமே இருக்க முடியாது.. கோவைசரளாவிற்கு சரியான பக்கவாத்தியமாக சேர்ந்து சிரிக்க வைக்கிறார் தேவதர்ஷினியும். ஸ்ரீமன் பேய் வரும் போதெல்லாம் வாயை கோணியபடியே படுத்துக்கொள்ளும் காட்சிகள் எல்லாம் அக்மார்க் சிரிப்புக்கு உத்திரவாதம்.

இடைவேளைக்கு பிறகு வரும் காட்சிகள் எல்லாம் குழந்தைகள் கூட பயப்படாது. ப்ளாஷ்பேக் காட்சிகள் எல்லாம் படு அபத்தம். எல்லா வில்லன்களையும் கொன்ற காஞ்சனா, கடைசி வில்லனை மட்டும் கோவிலுக்குள் வைத்து, வெளியே வைத்து எல்லாம் விளையாடி கொல்வது படு போரடிக்கிறது.(இதுவரை ஆவிகள் கோவிலுக்குள் நுழையாது என்று காலம் காலமாக தமிழ் சினிமா கடைப்பிடித்து வரும் சென்டிமென்டை லாரன்ஸ் ஒரு அழகான லாஜிக்கால் உடைத்து எறிந்திருக்கிறார். அது என்ன என்பது சஸ்பென்ஸ்..)

தேவன், மயில்சாமி, மனோபாலா, என படத்தில் கூட்டத்திற்கு பஞ்சமில்லை. புதிதான முயற்சி ஏதுமில்லா விட்டாலும் தமனின் பின்னணி இசை படத்தோடு ஒன்ற செய்கிறது. தர்காவில் பேய் ஓட்டுபவரை பூதம் அளவிற்கு பெரிதாய் காட்டுகிறார்கள். எப்படியும் பேய்கள் ஓடிவிடும் என்ற நம்பிக்கை அவரைப் பார்த்ததும் வந்து விடுகிறது. மூன்று பேய்கள் ஹாலிவுட் பாணியில் அடியாட்களை பழி வாங்கும் காட்சிகளின் நீளம் அதிகம்.

*தெலுங்கில் படம் செம ஹிட்டாம். தமிழிலும் படம் ஓடுமா ?*

*- சங்கர்*

# சினித்துளி

## காலமானார் நடிகர் ரவிச்சந்திரன்!



தமிழ் திரையுலகில் 1960 மற்றும் 70 களில் முன்னணி கதாநாயகனாக இருந்தவர் ரவிச்சந்திரன். காதலிக்க நேரமில்லை, அதே கண்கள், இதய கமலம், கவுரி கல்யாணம், குமரி பெண், மெட்ராஸ் டு பாண்டிச்சேரி, நான், உத்தரவின்றி உள்ளே வா, புகுந்த வீடு உள்பட ஏராளமான படங்களில் நடித்திருந்தார் அதன் பின் நீண்ட காலம் நடிக்காமல் இருந்த அவர் விஜயகாந்த் நடித்த ஊமை விழிகள் படத்தில் வில்லன் பாத்திரத்தில் நடித்தார். அதன் பிறகு குணசித்திர வேடங்களில் வந்தார்.

அருணாசலம், பம்மல் கே சம்பந்தம் படங்களிலும் நடித்திருந்தார்.பல்வேறு நோய்களால் அவதிப்பட்டு சிகிச்சை பலனின்றி நடிகர் ரவிச்சந்திரன் 25.07 அன்று இரவு சென்னையில் உயிரிழந்தார்.

## சிக்கலில் 'மங்காத்தா'!



மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் அஜீத்தின் 50வதுபடமான 'மங்காத்தா' படத்தை வாங்குவதற்கு விநியோகஸ்தர்களும், தியேட்டர் அதிபர்களும் தயங்கி வருகின்றனர். இதனால் மங்காத்தா படத்திற்கு புதிய சிக்கல் உருவாகியுள்ளது. கருணாநிதியின் பேரனார் துரை தயாநிதி அழகிரி தயாரிப்பில், வெங்கட் பிரபு இயக்கத்தில் பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்திருக்கும் படம் 'மங்காத்தா'. தயாரிப்பாளர் தயாநிதி என்ற காரணத்தால் யாரும் படத்தை வாங்கவில்லையாம்.

தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு உள்ள நிலையில், தயாநிதி அழகிரியின் படத்தை வாங்குவதற்கு விநியோகஸ்தர்கள் தயங்குகிறார்கள் காரணம் அம்மாவின் விசுவாசிகளின் லீலைகள் தானாம்.

## அன்னக்கொடியும் கொடி வீரனும்!!



மண்ணின் மைந்தன் பாரதிராஜா தன் அடுத்த படைப்பான 'அன்னக்கொடியும் கொடிவீரனும்'க்குரிய பணியை ஆரம்பித்துவிட்டார். இந்தப் படத்தில் மீண்டும் தன் நண்பன் இசைஞானியுடன் கைகோர்க்கிறார் பாரதிராஜா. வைரமுத்துவும் இளையராஜாவும் இந்தப் படம் மூலம் மீண்டும் இணையவும் வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தப் படம் குறித்து பாரதிராஜா சமீபத்தில் கூறுகையில், 'இந்தப் படம் பாரதிராஜாவின் இன்னொரு பரிமாணமாக இருக்கும்' என்றார் .

## ஜீவா-ஜெயம் ரவி இணையும் படம்!



இந்தி திரையுலகைப் போலவே தமிழ் சினிமாவிலும் முன்னணி ஹிரோக்கள் மற்றொரு ஹிரோவுடன் இணைந்து நடிக்க ஆர்வம் காட்டி வருகிறார்கள். அந்த வகையில் ஆர்யா, விஷால் ஆகியோர் இணைந்து அவன் இவன் படத்தில் நடிக்க, இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் உருவாகி கொண்டிருக்கும் நண்பன் படத்திலும் ஜீவா, ஸ்ரீகாந்த், விஜய் என மூன்று நடிகர்கள் இணைந்து நடிக்கிறார்கள். அந்தவகையில் இணைந்திருக்கிறார்கள் ஜெயம் ரவியும், ஜீவாவும்.

இந்த படத்தை இயக்கப்போவது எஸ்.பி.ஜனநாதன். தலைப்பு வைக்கப்படாத இப்படத்தின் நாயகி மற்ற விபரங்களை விரைவில் அறிவிக்கப்படுமாம்.நல்ல முயற்சி தான்!

பிரித்தானியா
TEL: 020 7043 4315 FAX : 020 7043 4312
உங்கள் வாழ்க்கைத் துணையை
தேர்ந்தெடுக்க வேண்டுமா?
TEL: 647 724 4188 FAX : 416 438 7855
கனடா
www.orumanam.com





'நாகம்மை திருநாமம் நூறுநூறாயிரம் நண்ணினால்
போகங்கள் சேருமே சுக நலன்கள் பெருகுமே'

# Thiruvarulmegu Enfield Nagapooshani Ambaal Temple

# திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

61 - 65 Church Lane, Edmonton, London N9 9PZ Tel: 020 8884 3333 Website:www.ambaal.org

## 7ம் வருட மகோற்சவ விஞ்ஞாபனம் 2011

**(17.07.2011 ஞாயிற்றுக்கிழமை முதல் 03.08.2011 புதன்கிழமை வரை)**

அம்பிகை அடியார்களே!

வட லண்டன் என்பீல்ட் பதியில் தன்னை நாடி வரும் அடியார்களின் இடர் களைந்து அருளாட்சி செய்யும் அன்னை நாகபூசணி அம்பாள் திருவருளால் 7ம் வருட மகோற்சவப் பெருவிழா 17.07.2011 பிள்ளையார் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறும்.

## CHARIOT FESTIVAL (PUBLIC UBAYAM)
## 31st JULY 2011 SUNDAY

The Chariot pocession of Enfield Nagapooshani Ambaal & Lord Ganesha will Proceed Via the streets around the temple from 10.00 am till 1.00 pm.



05.30 am Abishegam Starts
08.30 am Vasanthamandapa pooja
10.00 am Ganapathy & Ambaal on Charits
10.30 am Chariot Festival starts
02.00 pm Navasakthi Archanai

**தேர்த்திருவிழா 31.07.2011**
**ஞாயிறு காலை 10.00 மணி முதல்**
**மதியம் 1.00 மணி வரை நடைபெறும்.**
**பொது உபயம்**

இவ்விழாவில் அடியார்கள் யாபேரும் விரதமிருந்து ஆசாரசீலர்களாக வருகைதந்து அம்பாளின் அருளைப்பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

# Southall Travel

## *Redefining Travel*

### *Why travel with* **Southall Travel?**

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

### ஏன் **சவுத்ஹோல் டிராவல்** மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk